1-7-55

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



# செய்திகள்

## சூரிய கிரகணம்

ஜூன் மாதம் 20-ஆம் தேதி ஏற்பட்ட சூரிய கிரகணம் மிகவும் அரிய தன்மை வாய்ந்த கிரகணமாம். நீண்ட நேரம் தெரிந்த சூரிய கிரகணம் இது. தென்னிந்தியாவில் முக்கால் பாகத்துக்கு அதிகமாகவும் இலங்கை, அந்தமான் முதலிய தீவுகளில் பூரணமாயும் தெரிந்த சூரிய கிரகணம் இது. சூரியனைப் பற்றிய ஆராய்ச்சிக்குத் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் உலக விஞ்ஞானிகளுக்கு, இந்தக் கிரகணம் ஒரு வாய்ப்பாக இருந்தது. இதுபோல் 1250 வருஷங்களில் ஒரு கிரகணமும் ஏற்பட்டதில்லையாம். ஆனால் சூரிய கிரகணத்தன்று இலங்கையில் ஹிங்கு ரக்கோடா என்ற ஊரில் கூடிய உலக விஞ்ஞானிகளுக்குப் பெரிய ஏமாற்றமே உண்டாயிற்று. அன்று அங்கே கால நிலை சரியாக இல்லாததால் சூரியனையே பார்க்க முடியவில்லையாம். சென்னை போன்ற இடங்களில் மிகவும் தெளிவாகத் தெரிந்தது. மர இலைகளின் வழியே விழுந்த வெயிலில் பிறை வடிவமான சூரிய பிம்பம் விழுந்திருந்தது. கொழும்புவில் 4 நிமிஷ நேரம் இரவு வந்துவிட்டது போலவே இருட்டி விட்டதாம். விலங்குகளும் பட்சிகளும் மிரண்டு, ஆகாரம் தேட முற்படவே யில்லையாம்.

## ரஷ்யாவில் நேரு

ரஷ்யாவில் நேருவுக்கு நடைபெற்ற வரவேற்பைப் போல் வேறு எவருக்குமே இதுவரையில் நடந்ததில்லையாம். ரஷ்யா உலகப் பரப்பில் ஆறில் ஒரு பங்கு உள்ளது. 170 இனத்தவர்கள் ரஷ்யாவில் இருக்கிறார்கள். பற்பல பாஷைகள் பேசும் மக்களிடையே வளர்ந்திருக்கும் ஒற்றுமையையும் வளர்ச்சியையும் கண்டு நேரு வியந்தாராம். சோவியத் மக்கள் இந்திய இதிகாசங்களான ராமாயணம், மகாபாரதம் இவற்றைக் கற்க ஆவல் கொண்டிருப்பதை நேரு நேரில் கண்டாராம். அந்நியர் யாரும் அநுமதிக்கப்படாத பிரதேசங்களையும் தொழிற்சாலைகளையும் நேரு பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டாராம். நேருவின் பெயரையும் அவர் குமாரி இந்திரா காந்தியின் பெயரையும் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கப் பல ரஷ்யப் பெற்றோர்கள் அநுமதி கேட்டு நேருவுக்கு எழுதியிருக்கிறார்களாம்.

## வானர நட்சத்திரம்

ஜெமினியார் தயாரிக்கும் படம் ஒன்றில் நடிப்பதற்காக ஜிப்பி என்ற குரங்கு நட்சத்திரம் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கிறது. இது சிம்பன்ஸி இனத்தில் குள்ளமான ரகத்தைச் சேர்ந்த குரங்காகும். இது வருஷத்துக்கு இரண்டரை லட்சம் டாலர் போலச் சம்பாதிக்கிறதாம். ஒரு டஜன் படங்களில் இது நடித்திருகிக்றது. டெலிவிஷனிலும் அடிக்கடி தோன்றுகிறது.

## ஒரு திருத்தம்

சென்ற 1 - 6 - 55 கண்ணன் இதழில் 'நல்ல பொம்மை' என்ற பாடல் வெளியாகியிருக்கிறது. அதன் தலைப்பில் உள்ள படத்தில் வலது கோடியில் ஒரு சாதுவின் படம் வெளியாகியுள்ளது. அது நபிகள் நாயகத்தின் படமோவென சிலர் எண்ணக் கூடும். நபிகள் நாயகத்தின் திருவுருவப் படம் உலகில் எங்குமே இல்லை. அவர்கள் திருவுருவத்தைக் கற்பனை செய்து வரைவதும் பெரும் பாவம் என்று உலக முஸ்லிம்கள் கருதுகிறார்கள், எனவே ஐயப்பாட்டை விளைவிக்கும் அந்தப் படத்தை அகற்றிவிடுமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

# கண்ணன்

## பொருளடக்கம்

**மலர்: 6 இதழ்: 13**

**1-7-'55**


| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| குண்டுச் சீமா | .. | 3 |
| புத்தர் | .. | 8 |
| கவியரங்கம் | .. | 9 |
| கேளுங்கள் சொல்கிறேன் | .. | 10 |
| இரு சகோதரர்கள் | .. | 13 |
| அன்பு | .. | 17 |
| செவிட்டுப் பாட்டி | .. | 20 |
| கயிலேயிலே | .. | 25 |
| பேச்சு | .. | 29 |
| லீடர் மணி | .. | 32 |
| பாரஸீக ரோஜா | .. | 37 |
| கண்ணன் நிருபர் | .. | 39 |
| எங்கள் பகுதி | .. | 40 |

செய்திகள் - 2 - அட்டை

அதிருஷ்ட எண்கள்-3-அட்டை



வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.


2/1798


**1-6-55**

## அதிருஷ்ட எண்கள்

| | | | |
|---|---|---|---|
| முதற் பரிசு | | .. | 11250 |
| 2-ஆம் பரிசு | | .. | 501 |
| 3-ஆம் பரிசு | 1. | .. | 53 |
| | 2. | .. | 13 |
| | 3. | .. | 2 |
| 4-ஆம் பரிசு | 1. | .. | 6 |
| | 2. | .. | 12 |
| | 3. | .. | 9 |
| | 4. | .. | 12 |
| | 5. | .. | 7 |

ஜூன் 1-ஆம் தேதி வெளியா எல்லாக் கண்ணன் பிரதிகளிலு எண்கள் வெளியாகியிருக் கின்றன. அவற்றில், மேலே வெளி யாகியுள்ள இந்த எண்கள் எல் லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக் கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டை யும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஜூலை மாதம் 15-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்க ளுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினால் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

217918

# குழந்தைகளே!

[illegible]ண்ணன் விஷயத்தில் குழந்[illegible]தைகளுக்கு மட்டுமில்லை, பெரியவர் களுக்கும் உற்சாகம் [illegible] என்பது எத்தனையோ சந்தர்ப்பங்களில் எனக்கு[illegible] தெரியும். சமீபத்தில் அது இன்னும் நன்றாகத் தெரிந்தது.

கண்ணன் நிருபர் விஷயத்தைத்தான் சொல்கிறேன். எத்தனை கடிதங்கள் வந்து குவிந்துவிட்டன! நாட்டின் நாநா திசைகளிலிருந்தும் விண்ணப்பக் கடிதங்கள் வந்த வண்ணமாகவே இருக்கின்றன. பெரிய வர்கள் சிலர்கூட, கண்ணன் நிருபராக இருக்க முன் வந்துவிட்டார்கள்!

குழந்தைகள்தான் கண்ணன் நிருபராக இருக்கலாம். அதிலும் பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளாக இருக்க வேண்டும். [illegible]றைந்தது மூன்றாவது படிவமாவது படித்தால்தான் நல்லது. [illegible]ண்ணன் கிளைக் கழகம் உள்ள ஊர்களில் கிளைக் கழகங்களே [illegible]நபர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; மற்ற ஊர்களில் [illegible]பராக, குறைந்த பட்சம் இரண்டு குழந்தைகளாவது அத்தாட்சி [illegible]டுக்க வேண்டும். இத்தகைய யோக்கியதாம்சம் உள்ள சிலரைப் [illegible]ாறுக்கி இந்த இதழில் வேறு ஒரு பக்கத்தில் அவர்கள் பெயரை [illegible]ளியிட்டிருக்கிறோம். இவர்கள் இப்பொழுது தாற்காலிகமாக, [illegible]ணன் நிருபராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பின்னர் அவர்களு[illegible]ய திறமையைப் பார்த்து அவர்களை ஊர்ஜிதம் செய்வோம். [illegible]ணன் நிருபருக்கு ஊதியம் உண்டா என்ற கேள்வி எழலாம். [illegible]தியம் என்று கொடுத்து அவர்களை வெறும் ஊழியர்களாக மதிக்கும் [illegible]ணம் எதுவும் எங்களுக்கு இல்லை. அவர்கள் குழந்தையுலகுக்குப் [illegible]யாற்றும் சிறந்த, உயர்ந்த நோக்கோடுதான் நிருபராக ஆகிறார்கள் [illegible]று நாங்கள் கருதுகிறோம். ஊதியம் இல்லையே தவிர அவர்களுக்குச் [illegible]லுகைகள் உண்டு; மதிப்பு உண்டு. பொதுவாகக் கண்ணனிடம் [illegible]வர்களுக்கு நேரிடையான தொடர்பும் செல்வாக்கும் இருக்கும். [illegible]ண்ணன் நிருபர்கள் சுதந்தர தினத்திலிருந்து பணி புரிவார்கள். அதற்குள் மற்ற இடங்களிலும் நிருபராக நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் கண்ணனில் வெளியாகி விடும். எத்தகைய சலுகைகள் என்பதைப் பொதுவாக அப்போது அறிவிக்கிறோம்.

கண்ணன் அதிருஷ்ட எண்கள் என்பது இன்னும் பல குழந்தை களுக்குக் குழப்பமாகவே இருக்கிறது. அவர்கள் இதைச் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த இதழின் உள்புற மூன்றாவது அட்டையைப் பாருங்கள். அதில் ஓர் எண் குறுக்காக அச்சாகி இருக் கிறது. இந்த இதழைப் படித்துவிட்டு இதைப் பத்திரப்படுத்தி வைத்திருங்கள். 1-8-55 இதழ் வருகிறதல்லவா, அதில் பொருளடக்கப் பக்கத்தில் 1-7-55 இதழின் அதிருஷ்ட எண்கள் எவை என்று வெளியாகும். அந்த எண்களில் உங்களிடமுள்ள கண்ணன் பிரதியின் எண் இருக்கிறதா என்று பாருங்கள். இருந்தால் பதினைந்து நாட்களுக்குள் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பிவிட வேண்டும். இவ்வளவுதான். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இந்த மாதிரி ஒவ்வோர் எண் இருக்கும். இலவசப் பிரதி என்று கதை எழுதுகிறவர்களுக்கும் விற்பனை செய்யும் ஏஜெண்டுகளுக்கும் உண்டு. அந்தப் பிரதிகளில் மட்டும் இந்த எண்கள் இரா. ஆகையினால் வாங்கும்போது எண்கள் உள்ள பிரதிகளைப் பார்த்து வாங்குங்கள்.

சில குழந்தைகள் கண்ணனை வாங்கிப் படித்ததுமே பரிசு அனுப்பும் படி எங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். 1-7-55 இதழின் அதிருஷ்ட எண்கள் 1-8-55-இல்தான் பொருளடக்கப் பக்கத்தில் வெளியாகும். அதாவது சரியாக ஒரு மாதம் ஆகவேண்டும். அது வரையில் பொறுத் திருந்து பார்த்து, பரிசுக்குரியதாக இருந்தால் அனுப்பவேண்டும்.

இது உங்களுக்குப் புரியாவிட்டால் பெரியவர்களை விவரமாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

—ஆசிரியர்.

# துணிச் சீமா

## ராஜி



### 4

மூன்று நாள் கழித்து அந்தப் பெல்டை அப்பா பெரியவரிடமிருந்து வாங்கி வந்தார். அதனிடமிருந்து வந்த புஷ்ப வாசனையிலிருந்து அது பூஜையில் வைக்கப்பட்டது என்று தெரிந்தது.

உண்மையாக அந்தப் பெல்ட்டை என் இடுப்பில் போட்டதிலிருந்து என்னிடமே ஒரு மாறுதல் ஏற்பட்டது. பெல்ட் போட்டுக்கொண்ட அன்றைத் தினம் இரவு எட்டு மணிக்கு என் பாட்டி, ''சாமான் உள்ளே ஏதோ ஓசைப்படறதே, கதவு எல்லாம் சரியாகப் பூட்டி இருக்கோ, இல்லையோ?'' என்று அம்மாவைக் கேட்டாள். உடனே நான், ''பாட்டி, நான் போய்ப் பாத்துட்டு வரேன்'' என்றேன். ''நீ பயப்படுவாய்; வேண்டாம்'' என்றாள் பாட்டி. ''என்ன பயம், என் இடுப்பில்தான் இப்பொழுது மந்திர பெல்ட் இருக்கிறதே'' என்று சொல்லிக்கொண்டே அறையை நோக்கிச் சென்றேன். யாரோ திருடன் ஜன்னல் கதவைப் பிறண்டுவதுபோல இருந்தது. அதைக் கேட்டவுடன் பயந்து நின்றேன். இடுப்பில் கட்டியிருந்த பெல்ட், ''பயப்படாதே. உள்ளே சென்று பார்'' என்று சொல்லுவதுபோல இருந்தது. தைரியமாக உள்ளே சென்று விளக்கைப் போட்டேன். ஊன்றிக் கவனித்தேன். கிழக்கு மூலையிலிருந்து பிறண்டும் சப்தம் வருவதுபோல் தோன்றிற்று. அருகில் சென்றேன். அங்கே எலிப்பொறிக்குள் அகப்பட்டிருந்த எலி, கம்பிகளைத் தன் நகங்களினால் பிறண்டிக்கொண்டிருந்தது. 'பூ இவ்வளவுதானே' என்று நினைத்தேன். பெல்ட் மாத்திரம் இல்லாவிட்டால் நான் உள்ளே போயிருக்கவே மாட்டேன்.

மந்திர பெல்ட்டின் உதவியால் நாட்கள் ஆக ஆக எனக்குத் தைரியம் உண்டாயிற்று. என் அம்மா இரவில் எப்பொழுதாவது பயப்பட்டால்கூட, ''என்ன அம்மா பயம்? வா, நான் உன்னுடன் வருகிறேன்'' என்று அவளுக்குத் தைரியம் சொல்லும் அளவுக்கு வந்து விட்டேன். மந்திர பெல்ட்டும் அறுந்து போய்விட்டது.

என் அப்பாவும், ''சீமா, நீதான் பயமில்லாமல் தைரியமாக இருக்கிறயே, உனக்கு இனிமேல் எதற்காக மந்திர பெல்ட்?'' என்று சொல்லிவிட்டார்.

என் பாட்டி அப்பாவைப் பார்த்து, ''ஏண்டாப்பா சூரி, சீமாவைப் பழைய சீமான்னு நம்ப முடியவில்லையே. என்ன தைரியம்! எங்கே வேணுமானாலும் தானே போறான்; பெரியவர் மந்திரம் நன்னாப் பலிச்சிருக்கு'' என்றாள். என் அப்பாவின் முழுப்பெயர் சூரியநாராயணன். என் பாட்டி அந்தப் பெயரைச் சுருக்கி, 'சூரி' என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவாள்.

இதைக் கேட்டதும் என் அப்பா பெரிதாகச் சிரித்தார். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று அம்மா கேட்டாள்.

"மந்திரமாவது மாயமாவது! பெல்ட்டை மந்திரிச்சுப் போட்டால் தைரியம் வந்துவிடுமா?

"சீமா இயற்கையாகவே தைரியம் இல்லாதவன் இல்லை. அந்தத் தைரியத்தை அவன் வரவழைத்துக் கொள்ளாமல் பயந்துகொண் டிருந்தான். அவனுக்குத் தன்னிடமே போதிய தைரியம் இருக்கிறது என்ற ஊக்கத்தைக் கொடுப்பதற்காக, நான் அவன் பெல்ட்டைக் கடைவீதியிலுள்ள ஒரு புஷ்பக்கடையில் மூன்று நாள் மாட்டி வைத்துவிட்டு, பூஜையில் பெரியவர் ஒருவர் மந்திரித்துக் கொடுத்தது போலக் கொண்டுவந்து கொடுத்தேன் ஏதோ மந்திர பெல்ட் என்றவுடன் அவன் தேகத்தில் ஓர் உற்சாகம் ஏற்பட்டு அவனைத் தைரியமாக இருக்கச் செய்தது. அவ்வளவுதான். யாருமே மனத்தைத் திடப்படுத்திக்கொண்டால் ஏது பயம்?" என்று சொன்னார்.

வெளியில் சென்றிருந்த நான் அப்பொழுதுதான் உள்ளே வந்தேன். சீதா, "அண்ணா, நாளைக்குச் சித்தப்பா வரப்போறாராம். நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே? உனக்குப் பள்ளிக்



கூடம் கிடையாது; எனக்கும் பள்ளிக்கூடம் கிடையாது'' என்று குதித்துக்கொண்டே சொன்னாள்.

என் அப்பாவும், ''ஆமாண்டா சீமா, நாளைக்கு விசு சித்தப்பா வறார். நாளைக்கு அவன் வரும்போது சமத்தாய் நடந்துக்கணும். அசட்டுப் பிசட்டுன்னு நடந்தால் ஊருக்குப் போய், 'சீமா சுத்த அசடு' என்று சொல்லுவான். ஜாக்கிரதை'' என்றார்.

மறு நாள் காலை நான் ஆவலுடன் என் சிற்றப்பாவின் வருகையை எதிர்பார்த்து வாசலில் நின்றுகொண்டிருந்தேன். வெகு நேரம் காத்திருந்தும் அவர் வரவில்லை. அப்பொழுது பள்ளிக்கூடச் சிநேகிதர்களாகிய நீலகண்டனும் சிவகுமாரும் என் வீட்டுக்கு வந்து, ''வாடா சீமா, கோவிலிலே உற்சவத்துக்கு யானை வந்திருக்கிறதாம். பார்த்துவிட்டு வரலாம்டா'' என்று கூப்பிட்டார்கள். சிற்றப்பா வந்தால் எதிரே இந்த வழியாகத்தான் வரவேண்டும். ஆகையால் நானும், 'சரி' என்று ஒப்புக்கொண்டு அவர்களுடன் போனேன்.

விளையாட்டாக ஊரைத் தாண்டிச் சாலை வழியாகக் கொஞ்ச தூரம் சென்றோம். ஒரு வீட்டின் தோட்டத்திலிருந்த ஒரு சிறிய மாமரத்தில் நிறையக் காய்கள் காய்த்துத் தொங்கிக்கொண்டிருப்பதை நானும் என் சிநேகிதர்களும் பார்த்தோம். மரம் சிறியதாக இருந்தாலும் காய்கள் மிகவும் பெரிதாக இருந்தன. அவைகளைப் பார்த்தாலே மிகுந்த உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை என்று யாவருமே ஊகிக்கலாம். மாமரத்தின் கிளை ஒன்று மதில் சுவரைத் தாண்டி, சாலையில் நீட்டிக்கொண்டிருந்தது. அந்தக் கிளையில் தேங்காய் அளவுள்ள மாங்காய்கள் நிறைய இருந்தன.

''டேய் சீமா, அந்த மாங்காய்களில் ஆளுக்கு ஒன்று பறிக்கலாமா?''

''யாராவது பார்த்தால் என்னடா செய்வது? அப்பறம் நம் பளை..'' என்று இழுத்தேன் நான்.

''இங்கே யாரு இருக்கா? ஒருவரையும் காணோம்'' என்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே சொன்னான் நீலகண்டன்.

உடனே நான் மெதுவாகக் கிளையை எட்டிப் பார்த்தேன். எட்டவில்லை. என் கைக்கும் அந்த மாங்காய்க்கும் ஒரு சாண் வித்தியாசம்தான் இருந்தது. சுவரில் ஏறவும் வசதியில்லை. எங்கள் மூன்று பேர்களில் நான்தான் சற்று உயரம்.

''அடே சீமா, நான் முதலில் தவழ்ந்து கீழே படுத்துக்கொள்கிறேன். என் முதுகின்மீது சிவகுமார் படுத்துக்கொள்ளட்டும். அவன் முதுகின்மீது நீ ஏறி மூன்று மாங்காய்களையாவது பறித்துவிடு'' என்றான் நீலகண்டன்,

''ஆமாம் சீமா, ஆனா நீ ரொம்ப நாழி என் முதுகின்மீது ஏறி நிற்கக் கூடாது. என்னால் உன்னை அதிக நேரம் தாங்க முடியாது'' என்று சொன்னான் சிவகுமார்.

''தயவுசெய்து நீ 'சட் புட்' டென்று ஏறி மாங்காய்களைப் பறித்து விடு'' என்று சொல்லிக்கொண்டே கீழே தவழ்ந்தபடி படுத்துக்கொண்டான் நீலகண்டன். 'யாராவது வருகிறார்களா?' என்று பார்த்துவிட்டு, சிவகுமார் நீலகண்டன்மீது படுத்துக்கொண்டான். நான் சிவகுமார்மீது சுவரைப் பிடித்துக்கொண்டே ஏறி நின்றேன். நான் செய்யப்போவது



திருட்டுத்தனம் அல்லவா? அதனால் மாங்காய்களின் அருகில் என் கைகள் சென்றவுடன் கைகள் மார்கழி மாதக் குளிரில் நடுங்குவது போல நடுக்கமுற்றன. மெதுவாகச் சமாளித்து என் கைகளை ஒரு பெரிய மாங்காய்க்கு அருகில் கொண்டு போனேன்.

அப்போது, ''யாரடா அது, மாங்காய்களைப் பறிப்பது?'' என்று ஒரு குரல் தோட்டத்திலிருந்து வந்தது. கைகளைத் திருப்பி எடுத்துக்கொண்டேன். அந்தச் சமயத்தில் சாலை வழியாக ஒரு கார் வேகமாக வந்துகொண்டிருந்தது. வேகமாக வந்த கார் சட்டென்று கொஞ்ச தூரத்தில் நின்றது. அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டரைப் போல் போலீஸ் உடுப்புடன் ஒருவர் இறங்கினார். கூட ஒரு போலீஸ் சேவகனும் இறங்கினான். இறங்கிய போலீஸ் இன்ஸ்பெக்டர், ''டேய் பசங்களா!'' என்று உரக்கக் கூப்பிட்டார். எங்கள் திருட்டுத்தனத்தைப் போலீஸ் கண்டுபிடித்துவிட்டது என்று அறிந்தவுடன் நீலகண்டன், ''போலீஸ், போலீஸ்'' என்று சொல்லிக்கொண்டே பயந்து எழுந்து ஓடினான். அவன் எழுந்தவுடன் அவன்மீது தவழ்ந்து படுத்துக்கொண்டிருந்த சிவகுமாரும் 'தொபீர்' என்று கீழே விழுந்து, வாய்க்கால் பக்கமாக ஓட ஆரம்பித்தான்.

இரண்டு பேரும் எதிர்பாராமல் ஓடிவிடவே நான் கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கிக்கொண்டிருந்தேன். என்னை நோக்கிப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் சேவகனும் வருவதைப் பார்த்த நான், கீழே குதிக்க முடியாமலும், மேலே மரத்தில் ஏற முடியாமலும் ஊசலாடிக்கொண்டிருந்தேன். அடுத்த நிமிஷம் போலீஸார் கையில் சிக்கிவிடுவேன் என்று நிச்சயம் செய்துகொண்டேன். அந்தச் சமயத்தில் என்னுடைய கனம் தாங்காமல் நான் பிடித்துக்கொண்டிருந்த கிளை 'படார்' என்று முறிந்து ஒடியவே நான் 'தடால்' என்று பலத்த சத்தத்துடன் கீழே விழுந்தேன். கற்களும் முட்களும் என் உடம்பெல்லாம் குத்திக் காயங்களை ஏற்படுத்தின. என் வேஷ்டி சட்டைகள் அழுக்காகிவிட்டன. எதையும் லட்சியம் செய்யாமல் போலீஸாரிடமிருந்து தப்பித்துக்கொண்டால் போதுமென்று பக்கத்திலிருந்த ஒரு சிறிய சந்துக்குள் நுழைந்து ஓடினேன்.

'அப்பாடி' என்று பக்கத்து தெருவிலுள்ள குளத்திற்குச் சென்று, அப்பாவுக்கு நடந்தது தெரியாமல் இருப்பதற்காக முகத்தைக் கழுவிக்கொள்ளலாமென்று இறங்கினேன். தண்ணீரில் என் முகத்தைப் பார்த்தவுடன் என்னைப் பார்ப்பதற்கு எனக்கே வெட்கமாக இருந்தது. தலைமுதல் கால்வரையில் உடம்பெல்லாம் ஒரே புழுதி. நெற்றியிலே ஒரு சிறு காயம். தேகத்தில் பல இடங்களில் லேசாகச் சிராய்த்து இருந்தது. கை, கால் எல்லாம் நன்றாகச் சுத்தம் செய்துகொண்டு என் வீட்டுப் பக்கம் நடந்தேன்.

என் வீடு இருந்த தெருவுக்குள் நுழைந்தபொழுது என் வீட்டு வாசலைப் பார்த்தவுடன் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. என் வீட்டு வாசலில் நான் பார்த்த அதே போலீஸ்காரர் நின்றுகொண்டிருந்தார். 'நான் செய்த திருட்டுக் காரியம் என் வீட்டில் யாருக்கும் தெரியக்கூடாது' என்று நினைத்தேனே! என்னை மாங்காய் திருடியதற்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போக வந்திருக்கிறாரோ? அப்படியானால் என் அப்பா நல்ல வார்த்தை சொல்லி என்னை இன்ஸ்பெக்டர் ஒன்றும் செய்யாதபடி பார்த்துக்கொள்ள மாட்டாரா? அவருக்குத்தான் இந்த ஊர்ப் போலீஸ் அதிகாரிகள் எல்லோரையும் தெரியுமே. கேவலம் ஒரு மாங்காய் திருடப்போனதற்கு எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறது? இத்தனை கஷ்டங்களை அனுபவித்தும் ஒரு மாங்காய் கூடக் கிடைக்கவில்லை. அதை நினைத்ததுந்தான் மனசுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. 'எதற்கும் கொஞ்ச நாழிகை மறைவில் நின்று பார்க்கலாம். போலீஸார் போன

பிறகு வீட்டுக்குள் போகலாம்' என்று நிச்சயித்து ஒரு கடை மறைவில் நின்றுகொண்டிருந்தேன். ஒரு மணி நேரம் ஆகியும் போலீஸ் கார் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தது.

எத்தனை நேரம் இங்கே வெயிலிலே நிற்கிறது? சாப்பிட வேறு நாழிகை ஆகிவிட்டது. அதுவுமில்லாமல் கடைக்கு வரும் என் சிநேகிதர்களும் என்னைத் தெரிந்தவர்களும், "ஏண்டா சீமா, இங்கே நிக்கறே? உடம்பெல்லாம் என்ன காயம்?" என்று கேட்கும் கேள்விகளுக்கும் வேண்டா வெறுப்பாகப் பதில் சொல்லவேண்டியிருந்தது. நான் யார் கண்களில் முதலில் படாமல் இருக்கவேண்டும் என்று நினைத்தேனோ, அந்தக் கீதாவே என் கண்முன் தோன்றினாள்.

"என்ன அண்ணா இது, நெற்றி உடம்பு எல்லாம் முள் கீறினாப்பலே இருக்கு! தலையெல்லாம் மண்ணா. எங்கேயாவது கீழே விழுந்துட்டாயா?" என்று கீதா கேட்க, "போடி, வீட்டுக்குப் பேசாமல்" என்றேன் கோபமாக.

"நான் போறதா? ஊர் பூராவும் தேடியும் உன்னைக் காணவில்லை. அப்பா ரொம்பக் கோபமாக இருக்கா. ஊரிலிருந்து சித்தப்பா வந்து ரொம்ப நாழியா காத்துண்டு இருக்கா. வா, சீக்கிரம்."

"எதுக்காக நம்ப வீட்டு வாசலிலே போலீஸ் கார் நிற்கிறது? யாராவது போலீஸ்காரா வந்திருக்கிறாளா?"

'என்ன சீமா உளர்றே? அந்தக் காரிலேதான் நம்ப சித்தப்பா வந்திருக்கா. அவரும் ஒரு போலீஸ் ஆபீசருன்னு அப்பா சொன்னாளே. நீ இல்லையா அப்பா?" என்றாள்.

வேறு வழி இல்லாமல் தலையைக் குனிந்துகொண்டே வீட்டை நோக்கிச் சென்றேன். வீட்டுக்குள் சென்றவுடன் என் அம்மா, பாட்டி, தாத்தா எல்லோரும் மாறி மாறி நான் இருந்த நிலையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். என் அப்பாவின் முகம் கோபத்தினால் ஜொலித்தது.

'வாடா சீமா, வா! எங்கேடா உன்னைக் கண்ணிலேயே காணோம்? உன்னைப் பாத்து ரொம்பநாளாச்சு. அட, நீதானே சற்று முந்தி மாங்காய் பறிச்சுண்டு இருந்தே? உன் மாதிரி இருக்குன்னுதான் வண்டியைப் பாதையிலே நிறுத்தி உன்னையும் வண்டியிலேயே அழைத்து வரலாம் என்று நினைச்சேன். உன்னுடன் இருந்த பசங்கள் யார்? உன்னை அப்படியே மரத்திலே தொங்கவிட்டு விட்டு ஓடிவிட்டார்களே! மரக்கிளை முறிஞ்சு கீழே நீ விழுந்தவுடன் பயந்து போய்விட்டேன். நீ சீமாதானா இல்லையா என்று சந்தேகம். அதுவும் உன் அப்பா அடிக்கடி சமத்தாக இருக்கான் என்று எழுதியிருந்தார். அதனாலேயே நீயாக இருக்க மாட்டாய் என்று நினைத்தேன். அது போனால் போகட்டும்; உனக்கு மாம்பழங்கள் வாங்கி வந்திருக்கிறேன். நீயும் கீதாவும் எடுத்துக்கொள்ளுங்கோ" என்றார் என் சிற்றப்பா. என் அப்பா அப்பொழுது என்னை வெறிக்கப் பார்த்தார். அவர் பார்த்த பார்வையில் நான் மட்டும் பஞ்சாகவோ அல்லது தென்னங் கீற்றாகவோ இருந்தால் எரிந்திருப்பேன். என் வீட்டாருக்கு ஒன்றும் தெரியவேண்டாம் என்று நினைத்தேன். கடைசியில் நடந்தது நடந்தபடியே என் சிற்றப்பா சொல்லிவிட்டார்.

அப்பொழுது ஒரு வேலையாள் ஒரு கூடை நிறைய மாம்பழங்களைக் கொண்டுவந்து என் தகப்பனார் எதிரில் வைத்துவிட்டு, "ஐயா, உங்கள் வீட்டுக்குத்தான்! முனிசிபல் சேர்மன் கவுண்டர் ஐயா கொடுத்து அனுப்பினாரு. இன்னிக்குக் காலையிலே உங்க மகன் அவர் வீட்டு மரத்தில் மாங்காய் பறிக்க வந்துதாம். அப்போ அந்தக் கிளைகூட ஒடிஞ்சு விழுந்துடுத்தாம். உங்க மகனும் விழுந்துதாம்! 'குழந்தைக்கு மாம்பழம் பிடிக்கும் என்று தெரிஞ்சிருந்தா முன்னமேயே அனுப்பி இருப்பேன். இப்போ இதைக் கொடுத்துவிட்டு அதுக்கு ஏதாவது காயம் பட்டிருக்கா, இப்போ எப்படி இருக்கு'ன்னு கேட்டுக்கிட்டு வரச் சொன்னாரு" என்றான்.

(தொடரும்)



## புத்தர்

கருணை மிக்க உத்தமர்
கடவுள் பக்தி நிறைந்தவர்
கருணையாலே உலகினைக்
காப்பதற்கு வந்தவர்.

எந்த உயிர்ப் பிராணியும்
ஏதும் துன்பம் இன்றியே
இந்த உலகில் வாழவே
என்றும் பாடு பட்டவர்.

சாதிபேதம் அற்றவர்
சத்தியமே சொல்பவர்
போதி மரத் தடியிலே
போதம் பெற்று உயர்ந்தவர்.

ஆசியாவின் ஜோதி என்(று)
அகிலம் புகழ வாழ்ந்தவர்
ஆசை யாவும் துறந்தவர்
அன்புருவ மானவர்.

'உலக மக்கள் யாவரும்
உள்ளன்போடு கூடியே
குலவி வாழும் பண்பினைக்
கொள்ள வேண்டும்' என்றவர்.

புத்தர் சொன்ன உரைதனைப்
புத்தி தன்னில் கொண்டுநாம்
உத்தமராய் ஒழுகுவோம்
உலகம் புகழ வாழுவோம்.

'சசிதேவன்'



# பாலர் கவி அரங்கம்

## கூண்டுக்கிளி!

கூண்டிற் கிரையானாய்—கிளியே
கூடுவது எக்காலம்?
தின்னப் பழமிருக்க—கிளியே
தினமும் நீ வாடுவதோ?
எட்டாத கனியானாய்—கிளியே
எட்டுவது எக்காலம்?
தீராத சோகத்தால்—கிளியே
தினமும் நீ ஏங்குவதோ?
மலராத மலரானாய்—கிளியே
மலர்வது எக்காலம்?
திக்கற்ற ஆளைப்போல்—கிளியே
தினமும் நீ உறங்குவதோ?
சுவையற்ற கனியானாய்—கிளியே
சுவைப்பது எக்காலம்?
தீண்டிடாப் பொருளைப்போல்—கிளியே
தினமும் நீ இருப்பதுவோ?

—டி. கே. எம். காதர்.

## ஆலைச் சங்கு

காலையில் சூரியன் உதிக்கு முன்னர்
கண்விழித் தெழுப்பும் சேவல்போல
ஆலைச் சங்கமாம் நானெழுந்து—தொழி
லாளரை யெல்லாம் அழைத்திடுவேன்!
ஒற்றுமை கூட்டும் கருவியாவேன்!
உத்தமன் என்றே உரைத்திடுவார்!
கற்றவர் மற்றவர் போற்றிடுவார்—என்
கடமைச் செயல் கண்டு வியந்திடுவார்!
மாலைப் போதில் என்குரலால்—
மனச்சோர் வுடனவர் வெளிவருவார்!
வேலை செய்த களைப்பு நீங்கி—எனை
வேண்டும் மட்டும் வாழ்த்திடுவார்!

—ரா. சுந்தரராஜன்

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

**எம். ஞானசேகரன்,**
**தொ. ஜேடர்பாளையம்.**

அதிக ஒலியால் நிலங்கள் அதிர்வதேன்?

பீரங்கியைச் சுடும்போதும், பேரிடி இடிக்கும்போதும் நிலமும், வீட்டு ஜன்னல் கதவு முதலியவைகளும் அதிர்கின்றன. உண்மைதான். இது ஏன்?

ஒலி என்பது பொருள்களின் அதிர்வினால் உண்டாகிறது என்று பல தடவைகளில் சொல்லியிருக்கிறேன். அப்படிப் பொருள்கள் ஏன் அதிர்கின்றன? அதற்குக் காரணம் ஏதாவது ஒரு வகையான தாக்கு. பீரங்கியைச் சுடும்போது ஒரு வெடிப்பு உண்டாகிறது. காற்று திடீரென்று தாக்குற்று மோதப்படுகிறது. அதனால் ஓசை உண்டாகிறது. அந்த ஒலியின் அலைகளும், மோதுண்ட காற்றின் அலைகளும் அதிக தூரம் பரவிச் செல்கின்றன. இடையே உள்ள பொருள்களின் மீது மோதுகின்றன. கீழுள்ள நிலத்தின் மீதும் மோதுகின்றன. அதனால்தான் நிலங்களில் அதிர்வு உண்டாகிறது. பேரிடி இடிக்கும்போதும் இதே வகையான நிகழ்ச்சிதான் ஏற்படுகிறது.

**செ. ஜயாசாமி, கலந்தபனை.**

உலகத்திலேயே பெரிய தேசம் எது? செல்வப் பெருக்கில்? விஸ்தீர்ணத்தில்?

விஸ்தீர்ணத்தில் மிகப் பெரிய நாடு ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமாகப் பரந்து கிடக்கும் ரஷ்யா. இது சுமார் தொண்ணூறு லக்ஷம் சதுர மைல் விஸ்தீர்ணம் உள்ளது.

செல்வப் பெருக்கில் மிகப் பெரிய நாடு எது என்பதில் கட்சி இருக்கிறது. ரஷ்யா தன்னைக் காட்டிலும் செல்வமுடைய நாடு வேறு எதுவும் இல்லை என்று சொல்லிக்கொள்கிறது. ஆனால் செல்வத்தைப் பிற நாடுகளுக்கு வாரி வழங்குவதைப் பார்த்தால் அமெரிக்கா (யுனைடெட் ஸ்டேட்ஸ்) தான் மிகவும் செல்வப்பெருக்கு உடைய நாடு என்றுதோன்றுகிறது.

**எம். ஏ. ஜயராஜ், உசிலம்பட்டி.**

இடி விழுந்து சில சமயம் மரங்கள், வீடுகள் முதலியவற்றைப் பொசுக்கி விடுகிறது. விழும் பொருள் யாது?

இடியில் ஒரு பொருளும் விழுவதில்லை.

இடி என்பது மின்னல் தோன்றும்போது உண்டாகும் ஒலி. ஒலி விழாது அல்லவா?

ஆனால், நாம் 'இடி விழுகிறது' என்று சொல்லும்போது, மின்னலில் ஏற்படும் பொறி பூமி வரை வந்து சேருவதையே குறிப்பிகிறோம்.

மின்சாரம் ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்குப் பாயக் கூடியது அதிக அழுத்தமுள்ள மின்சாரம் அப்படிப் பாயும்போது இடையிலுள்ள பொருளாகிய காற்றைத் தள்ளிக் கொண்டு பாய்கிறது. அப்போது ஏற்படும் வெப்பத்தினால் காற்று தீப்பற்றிக் கொள்கிறது. இந்த நிகழ்ச்சியைத்தான் மின்சாரப் பொறி என்று சொல்கிறார்கள்.

சில வேளைகளில் மேகத்திலிருந்து மின்சாரப் பொறி பூமிவரை பாய்வதுண்டு. அப்படி நிகழும்போது தான் 'மின்னல் விழுகிறது' அல்லது 'இடி விழுகிறது' என்று சாதாரணமாகச் சொல்லுகிறார்கள்.

**ஏ. சிவராமன், மதுக்கரை.**

கடலில் இவ்வளவு உப்பைக் கரைத்தவர்கள் யார்?

பூமியில் எல்லாப் பொருள்களையும்விட அதிகமாக நீரில் கரையும் பொருள் உப்பு. மலையில் பெய்த மழை, ஆறுகளின் வழியா

கக் கடலில் போய்ச் சேரும்வரை இடையிலுள்ள இடங்களில் உப்பைக் கரைத்துக் கொண்டே செல்லுகிறது. அந்த உப்புக் கரைசல் கடலில் போய் விழுகிறது. ஆகையால்தான் கடல் நீர் உப்பாக இருக்கிறது.

கடலின் நீரைச் சூரிய கிரணங்கள் எடுத்துச் செல்லுகின்றன. ஆனல் அதிலுள்ள உப்பு கடலிலேயே தங்கிவிடுகிறது. மேன் மேலும் உப்பு நீர் கடலில் வந்து சேருவதால், கடல் நீர் மேன் மேலும் அதிக உப்புள்ளதாகி வருகிறது.

**ரங்கபாஷ்யம், சைதாப்பேட்டை.**

மார்புக்கூட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கும் இதயம் விரிந்து சுருங்குவது தெரியும்போது, ஜீரணத்தின்போது சுருங்கி விரியும் இரைப்பை சுருங்கி விரிவது தெரியாதது ஏன்?

சாதாரணமாக நாம் மூச்சு விடும்போது நம்முடைய மார்பு சுருங்கி விரிகிறது. அதோடு கவனமாகப் பார்த்தால், வயிற்றுப் புறமும் சற்றே சுருங்கி விரிவதைக் காணலாம். இதற்குக் காரணம் நுரையீரல் நன்கு சுருங்கி விரிவதும், அதனல் மார்புக்கூட்டுக்கு அடுத்தாற் போலுள்ள வயிற்றுப் புறத்தை அமுக்குவதுமே யாகும்.

மார்புக்கூட்டிற்குள் இருக்கும் இதயம் விரிந்து சுருங்குவது வெளியே தெரியாது. இதயத் துடிப்பைக் கையால் உணர முடியும். தக்க கருவியினல் காதால் கேட்க முடியும்.

உணவு உட்கொண்ட இரைப்பை அளவில் பெரிதாகிறது. அதனல் வயிறு சற்றே உப்புவது உண்டு. ஆனல் ஜீரணத்தின் பொருட்டு அது சுருங்கி விரிவதை, மார்பிலுள்ள இதயம் சுருங்கி விரிவதைப்போல், உள்ளடங்கி விடுகிறது. அதனல் வெளியே தெரிவதில்லை.

**போர்டு ஹைஸ்கூல், பாபநாசம்.**

இடி இடித்தால் பூமியின் வளம் அதிகமாகிறது என்பது உண்மையா?

நெருப்பு இல்லாவிட்டால் புகை இல்லை என்பது போல், மின்னல் இல்லாவிட்டால் இடி இல்லை என்பதும் உண்மை. மின்னல் என்பது வாயுமண்டலத்தின் ஊடாக அழுத்தம் மிகுந்த மின்சாரம் மிக வேகமாகப் பாய்வதால், காற்றைத் தீப்பற்றச் செய்வதால் உண்டாகும் ஒரு தோற்றம்.

வாயுமண்டலத்தில் நைட்ரஜன், ஆக்ஸிஜன் என்னும் வாயுக்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். மின்னலால் காற்று வெப்பமுறும்போது, நைட்ரஜனும் ஆக்ஸிஜனும் இணை சேர்ந்து நைட்ரேட்டு என்னும் கூட்டுப் பொருள் அமைகிறது.

நைட்ரேட்டுகள் சிறந்த உரங்கள், பூமியின் வளத்தை மிகுதிப்படுத்தும் சக்தியுள்ளவை என்று நீங்கள் படித்திருப்பீர்கள்.

ஆகையால், இந்தக் கேள்விக்கு ஆம் என்பதே விடை.

**எம். ஆர். வேங்கடராமன், சென்னை**

மூங்கிலால் எப்படிக் காகிதம் செய்கிறார்கள்?

பொதுவாகக் காகிதம் எப்படிச் செய்கிறார்கள் என்பது தெரியும், அல்லவா?

காகிதம் செய்வதற்கு ஏற்ற பொருள்களைச் சிறிய துண்டுகளாக வெட்டி, எரிசோடாவோடு கலந்து கொதிக்க விடுவார்கள். பிறகு இயந்திரங்களால் இடித்தும் அரைத்தும் அதை மிருதுவான கூழாக்குவார்கள். அதை வெளுக்க வைத்து, சீனக்களிமண், ஜிப்ஸம் போன்ற பொருள்களை அதோடு கலந்து, மை ஊருமலிருக்கப் படிக்காரம் போன்ற பொருளையும் சேர்ப்பார்கள்.

பின்பு, காகிதம் செய்யும் இயந்திரத்தில், கம்பிவலையின்மீது அந்தக் கூழைப் பரப்பி, மிகுதியான நீரை வடியச் செய்கிறார்கள். பிறகு சூடேற்றிய உருளைகளின் இடையே அந்தக் கூழைச் செல்லச் செய்து, துணியைப் போல் மெல்லியதாக இயற்றி, பாயைப்போல் சுருட்டி வைக்கிறார்கள்.

மூங்கிலும் காகிதம் செய்வதற்கு ஏற்ற ஒரு பொருள். பெரும்பாலும் இந்த முறைதான் மூங்கிலிலிருந்து காகிதம் செய்ய உதவுகிறது.

**பி. ஏ. முகம்மது யாசின்,**
**சென்னை.**

**பே**னாவின் தத்துவத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

**ஆ**தி காலத்திலே எத்தனையோ அரிய விஷயங்கள் பற்பல நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளைக் கண்டுபிடித்து, மனித இனத்துக்குப் பேருபகாரம் செய்த அறிஞர்கள் யார் என்று நமக்கு யாதொன்றும் தெரியவில்லை. அப்படிப்பட்ட விஷயங்களில் இதுவும் ஒன்று.

மிக மிகப் பழங்காலத்திலே காகிதம் என்பது கிடையாது. ஆகையால் மிருதுவான மெழுக்கு, அல்லது ஈரக் களிமண் போன்ற பொருளின்மீது எழுத்தாணி போன்ற கூரிய முனையுள்ள கருவியால் எழுத்துக்களைக் கீறி வந்தார்கள்.

பின்பு, காகிதம் போன்ற எழுது பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்மீது கூரியமுனை யுள்ளதாகச் சீவிய நாணற்குச்சி போன்ற எழுது கருவி உபயோகப்பட்டது.

பின்பு, யாரோ எங்கோ வாத்து இறகு போன்ற பொருளைச் சீவி எழுதக் கற்றார்கள்.

முதன் முதலாக உலோகத்தால் செய்த பேனாவை அமைத்தவர் இங்கிலாந்தில் பர்மிங்ஹாமில் உள்ள ஹாரிஸன் (Harrison) என்பவர். 1780-இல்தான் அத்தகையப் பேனா செய்யப்பட்டது என்கிறார்கள்.

**தி. க. ஜகந்நாதன், வண்ணாரப்**
**பேட்டை.**

**ஜ**ய் ஹிந்து, வந்தே மாதரம் என்று கூறுவதன் பொருள் என்ன?

**'ஜ**ய் ஹிந்த்' என்றுதான் சாதாரணமாகச் சொல்லுகிறார்கள். 'ஹிந்த்' என்பது நமது தாய் நாடாகிய இந்தியாவைக் குறிக்கும் ஹிந்திச் சொல். 'ஹிந்து' என்பதும் இதோடு சம்பந்தப் பட்ட சொல்தான். ஆனால் 'ஹிந்து' என்றால் மதத்தைக் குறிப்பதாக நாம் நினைப்போமே தவிர நாட்டைக் குறிப்பதாகக் கொள்வதில்லை.

'ஜய்' என்றால் 'வெல்க' என்பது பொருள்.

ஆகவே 'ஜய் ஹிந்த்' என்றால் 'இந்தியா வெல்க!' அதாவது இந்தியா சிறப்புற்றோங்குக என்பதுதான் கருத்து.

'வந்தே மாதரம்' என்பவை இரண்டும் வடமொழிச் சொற்கள்-அதாவது சம்ஸ்கிருதச் சொற்கள். 'மாதரம்' என்றால் 'அன்னையை' என்பது பொருள். 'வந்தே' என்றால் 'வணங்குகிறேன்' என்பது பொருள்.

ஆகவே 'வந்தே மாதரம்' என்றால் அன்னையை (அதாவது தாய் நாடாகிய இந்தியாவை) வணங்குகிறேன் என்பதுதான் கருத்து.

**ஜெ. வைத்தியநாதன், பாலக்**
**கரை, திருச்சி.**

**சா**தாரணமாக, ஒரு கப்பலின் எடை எவ்வளவு இருக்கும்?

**க**ப்பல்களில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. ஆகையால் இந்தக் கேள்விக்கு விடை அளிப்பது சாத்தியமில்லை.

கப்பலின் எடை என்று சொல்வது அது நீரில் மிதக்கும் இடப்பெயர்ச்சி எடையையே (Displacement) யாகும். இதை இத்தனை டன் என்று சொல்வதுதான் மரபு.

பழங்காலத்திலே 4000 டன் எடையுள்ள கப்பல் என்று கருதப்பட்டது. இக்காலத்திலே மிகப் பெரிய போர்க் கப்பல்களும், பிரயாணக் கப்பல்களும், கட்டப்படுகின்றன. அவைகளின் எடை சுமார் 50,000 டன்வரைகூட இருப்பதுண்டு.

பிரயாணக் கப்பலின் எடை அதிகமாக அதிகமாக அதில் சௌகரியங்கள் அதிகம், அலைவு குறைவு. சாதாரணமான பிரயாணக் கப்பல்களின் எடை சுமார் 7000 டன் முதல் 20000 டன் வரை இருக்கும்.

# இரு சகோதரர்கள்

## சரஸ்வதி

ராமுவும் குமாரும் மாலை ஆற்றங்கரையிலே விளையாடிவிட்டு வெகு உற்சாகத்துடன் வீட்டை அடைந்தனர். அங்கே அவர்களுடைய தாயார் சோர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். ''ஏன் அம்மா, ஏதோ கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்றான் குமார்.

''உங்கள் அப்பா ஆற்றங்கரைக்குச் சென்றார். வெகு நேரமாகியும் வரவில்லையே என்றுதான் கவலையாக யிருக்கிறது'' என்றாள் அம்மா.

''இதற்காகவா கவலை?'' என்று குமார் ஆற்றங்கரையை நோக்கி ஓடினான். ராமுவும் அவனைப் பின் தொடர்ந்தான். ஆனால் கரையில் தந்தையின் துணிகள்தான் காணப்பட்டனவே தவிர அவரைக் காணவில்லை. ஆற்றின் மேல்புறம் இருண்ட மேகங்கள் வானத்தைச் சூழ்ந்திருந்தன. வெள்ளம் பெருகிக் கொண்டே யிருந்தது. கவலை தோய்ந்த முகத்துடன் இருவரும் வீட்டை அடைந்தனர். ஆற்றங்கரைக்குப் போன தந்தை திரும்பி வரவேயில்லை.

நாட்கள் பல ஓடின. ஆனால் அவரைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. ராமுதான் வயதில் மூத்தவன். அவனுக்கு வயது பதினைந்து. குமார் அவனைவிட இரண்டு வயது இளையவனாக இருந்தான். இருந்தாலும் அவன் அண்ணனைக் காட்டிலும் மிகவும் கெட்டிக்காரன். வறுமைப் பிணி குடும்பத்தைப் பற்றியது.

''அம்மா! அப்பாவையும் இதுவரைக் காணவில்லை. இனி என்ன செய்வது? நான் வெளியூருக்குச் சென்று ஏதேனும் வேலை தேடிப் பொருள் சம்பாதித்து வருகிறேன்'' என்று சொல்லிக் கிளம்பினான். கிளம்பும்பொழுது மிகவும் தைரியத்துடன்தான் புறப்பட்டான். ஆனால் மாதங்கள் பல ஓடியும்





ஊர்கள் பல சுற்றித் திரிந்தும் அவனது முயற்சிகள் வெற்றிபெறவில்லை. மனமும் சிறிது தளர்ந்தது.

ஒரு நாள் வழியில் தன்னை யாரோ கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனுடைய அண்ணன் ராமுதான் அங்கே வந்துகொண் டிருந்தான். 'ஏன், நீ எங்கே வந்தாய்?'' என்று கேட்டான்.

''நீ வீட்டைவிட்டுக் கிளம்பி வந்ததும் நான்மட்டும் அம்மாவுக்குச் சுமையாக அங்கே தங்கியிருப்பானேன்? நானும் ஏதேனும் வேலைக்குச் செல்கிறேன் என்று அம்மாவிடம் சொல்லிக் கிளம்பினேன். தாய் வேண்டாமென்று சொல்லியும் நான் கேட்கவில்லை. ஊர் ஊராகச் சுற்றினேன். வேலை கிடைக்காமல் வீட்டுக்குத் திரும்பிச் சென்றேன். அப்போது அங்கே அம்மாவைக் காணவில்லை. நாம் இருவரும் கிளம்பி வெகு நாட்களான பிறகும் திரும்பி வீடு வராததால் அவள் கவலையுடன் நம் இருவரையும் தேடிக்கொண்டு வெளியே போய்விட்டாள் என்று தெரிந்தது. சில நாட்கள் தங்கியும் யாரையும் அங்கே வரக் காணாததால் நான் மறுபடியும் புறப்பட்டு வந்துகொண் டிருக்கிறேன்'' என்று துக்கம் தொண்டையை அடைக்க, தழுதழுத்த குரலில் சொன்னான். தாயாரையும் காணவில்லை என்றதும் குமாரை வருத்தம் வாட்டிப் பிழிந்தது.

அன்று இரவு இருவரும் ஓர் ஊரை அடைந்தனர். பசி தலையைக் கிர் என்று சுற்றியது. அப்போது இரவு மணி ஏழு இருக்கும். அங்கே நகைக்கடை ஒன்றை அடைந்தான் குமார். ஆனால் கடையில் குமாஸ்தாக்கள் யாரும் காணப்படவில்லை. முதலாளிமட்டும் பெட்டியிலிருந்த நகைகளை ஒருவனிடம் காண்பித்துக் கொண்டிருந்தார். வந்தவன் முதலாளிக்குத் தெரியாமல் சில நகைகளை எடுத்து மடியில் போட்டுக்கொண்டான். இதைப் பின்னால் நின்றுகொண் டிருந்த குமார் கவனித்து வருவதை அவன் கவனிக்கவில்லை. பாவம்! கடைசியில் குமாஸ்தாக்களும் வெளியேயிருந்து வந்தனர். திருடன் நழுவ முயன்றான். ஆனால் குமார் குட்டை அவிழ்த்துவிட்டான். திருடனுக்கு உதைகொடுத்து நகைகள் மீட்கப்பட்டன. முதலாளி குமாரை மிகவும் பாராட்டினார். அவன் வரலாற்றை விசாரித்துக் கடையிலேயே அமர்த்திக்கொண்டார். ராமுவும் அங்கேயே தங்கியிருந்தான். ஆனால் அங்கேயே தங்கியிருக்கக் குமாருக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. தன் அண்ணன் ராமுவை அங்கே கடையிலே அமர்த்திவிட்டு அவன் அதை விட்டுக் கிளம்பி கால் போன போக்கில் நடந்து சென்றான். ஆண்டுகள் பல சென்றன.

ஒரு நாள் சாலை வழியே சென்றுகொண்டிருந்த குமார் வெயிலுக்காக ஒரு மரத்தினடியில் தங்கினான். சிறிது நேரத்திற்கெல்லாம் நித்திரையில் ஆழ்ந்துவிட்டான். தன்னை

யாரோ ஒரு புதிய மனிதன் தட்டி எழுப்புவதைக் கேட்டுக் கண் விழித்தான். ''தம்பி! நீங்கள் இருவரும் யார்?'' என்றான் அவன். சுற்றுமுற்றும் பார்த்தான் குமார். சிறிது தூரத்தில் மற்றோர் இளைஞன் உறங்கிக்கொண் டிருந்தான். அந்தப் புதிய மனிதன் அந்த இளைஞனையும் எழுப்பிப் பசியால் வாட்டமுற்றிருக்கும் இருவரையும் அருகிலுள்ள தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

குமார் தன்னுடன் வரும் அந்த இளைஞனைக் கண்டதும், ''அண்ணா! நீ இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டான். அந்தக் கடையிலேயே இருந்துகொண்டு வெகு நாட்கள் வரை நீ வருவாய் என்று எதிர்பார்த்தேன். நீ வராததால் வருத்தமாக இருந்தது. அங்கிருந்து கிளம்பி உன்னைத் தேடி அலைந்தேன். கடவுள்தான் நம்மை மறுபடியும் சந்திக்கச்செய்தார்'' என்று சொன்னான் ராமு.

இவர்களை அழைத்துச் சென்றவன் ஒரு பொம்மை வியாபாரி. அவன் பொம்மைகளைச் செய்து பக்கத்து ஊர்களில் விற்று வந்தான். இவர்களை உதவிக்கு வைத்துக் கொண்டு பொம்மைகளை விற்று வரச் சொன்னான். குமாரும் வெகு அழகாகப் பொம்மைகளைச் செய்யக் கற்றுக் கொண்டான். இவன் செய்யும் பொம்மைகளை ஜனங்கள் அனைவரும் அதிக விருப்பத்துடன் வாங்கி வந்தனர். அந்த நாட்டின் சிற்றரசன் மகள் ஒரு சமயம் வெகு அழகாக இருந்த பொம்மையைக் குமாரிடம் வாங்கினாள். அந்தப் பொம்மையில் புன்சிரிப்புடன் குறும்புத்தனம் ஒளிர, கண்ணனின் முகம் தத்ரூபமாகச் செய்யப்பட்டிருந்தது. சிற்றரசனின் மகள் அந்தக் கண்ணனைத் தினந்தோறும் பூஜை செய்ய ஆரம்பித்தாள். அதன் விளைவாகத்தானோ என்னவோ, அந்தத் தினத்திலிருந்து அரண்மனையில் செல்வம் கொழிக்கத் தொடங்கியது. இதனால் சந்தோஷமடைந்த அரசன் குமாரைக்கூப்பிட்டனுப்பி, அவனைப் பார்த்து, ''உனக்கு வேண்டியதைக் கேள், கொடுக்கிறேன்'' என்றான்.

அரண்மனை வாயிலில் உள்ள குதிரை வேண்டுமெனக் கேட்டான் குமார். அந்தக் குதிரையின் மூலம் சீக்கிரத்தில் தன் தாயைக் கண்டு பிடித்துவிடலாமென எண்ணினான் அவன். அரசனது முகம் சுண்டியது. அதுதான் பட்டத்துக் குதிரை. அரசன், ''அந்தக் குதிரையைப் பெற வேண்டுமானால் ஒரு நிபந்தனை. எங்கள் பட்டத்துயானைக் குட்டி யாருக்கும் அடங்காமல் அரண்மனையின் நந்தவனத்தில் இருக்கிறது. அதை அடக்கிவிட்டால் அந்தக் குதிரையைக் கொடுத்து விடுகிறேன்' என்று கூறினான். 'யானையை அடக்க இவனால் முடியாது. அது இவனைக் கொன்று விடும்' என்று மன்னன் எண்ணினான். ஆனால் குமார் அதை



நான்கே நாட்களில் அடக்கி விடுவதாகக் கூறி அந்தத் தோட்டத்திற்குச் சென்றான். வெகு சாமர்த்தியமாக மறைவிலிருந்து அதை ஒரு பள்ளத்தில் இறக்கிவிட்டான். மேலே வர இயலாமல் ஆகாரமின்றி இரண்டு நாட்கள் பள்ளத்திலேயே இருந்த பின், குமார் அதற்குக் கொஞ்சம் ஆகாரம் அளித்தான். இரண்டு நாட்கள் அதனுடன் பழகிய பின்னர் அதை வெளியே அழைத்து வந்தான். அரசன் குமாரை வெகுவாகப் புகழ்ந்து தைரியம் வாய்ந்த அவனை யானைப்படைக்குத் தலைவனாக்கினான்.

ஒரு சமயம் நாட்டின் ஒரு பாகத்தில் கலகம் ஏற்பட்டது. அரசன் குமாரைத் துணைக்கு ஒரு படையுடன் அனுப்பி அதை அடக்கி வரும்படி சொன்னான். தைரியமாகச் சென்று கலகத்தை அடக்கி வெற்றியுடன் திரும்பிய குமாரை நாட்டின் பிரதம சேனாதிபதியாக்கிவிட்டான்.

இந்தச் சமயத்தில் பக்கத்து ராஜ்யத்தில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அதை நேரில் அறிந்துவர, "யாரை அனுப்புவது?" என்று மன்னன் குமாரைக் கேட்டான். தானே மாறுவேஷத்தில் சென்று வருவதாகக் கூறிச் சென்றான். அந்த ராஜ்யத்தின் அரசன் மிகவும் கொடியவனாக இருந்ததால் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு தலைவனிடம் அரசாங்கத்தை ஒப்படைக்கவேண்டுமென்று அரசனுக்கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் அந்தக் கோயில் யானையின் துதிக்கையில் ஒரு பூமாலையைக் கொடுத்து, யானை யார் கழுத்தில் அதைப் போடுகிறதோ அவனையே தம் தலைவனாக ஏற்றுக்கொள்வதென்றும் தீர்மானித்தனர். அதன்படி அந்த யானை புதிதாகக் குதிரைமீது வந்து கொண்டிருக்கும் குமாரின் கழுத்தில் மாலையைப் போட்டது. அரசன் என்ன செய்வான் பாவம்! அரசாங்கத்தைக் குமாரிடம் ஒப்படைத்தான். தானே அதை மேற்கொள்ள விரும்பாமல் அநுபவம் வாய்ந்த நான்கு உத்தியோகஸ்தர்களை மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் அரசாளும் பொறுப்பை ஒப்படைத்து, தன் அண்ணன் ராமுவைத் தலைவனாக இருந்து கவனித்துவரச் செய்தான் குமார்.

அவன் தன் நாட்டுக்குத் திரும்பும் வழியில் சாலையின் ஓரத்தில் ஆற்றங்கரையின்மீது ஒரு குடிசையைக் கண்டதும், தன் தாயின் ஞாபகம் வரவே நேராக அங்கே சென்றான். என்ன ஆச்சரியம்! அங்கே தன் தாயாரையும், இதுவரை இழந்துவிட்டோம் என்று எண்ணியிருந்த தந்தையையும் கண்டான். அப்போது அவன் மகிழ்ச்சி எல்லையைக் கடந்தது. அவர்கள் வெகுநாளாக எதிர்பார்த்த தம் மகனை அன்புறத் தழுவினர். அந்தக் குடிசைதான் அவர்கள் முதன் முதலில் வசித்து வந்த இடம். எப்படித் தந்தை அங்கே வந்து சேர்ந்தார், தாயார் ஏன் முதலில் அங்கே காணவில்லை என்றெல்லாம் தாயாரைக் கேட்டான். தாய், "மகனே, நீ வெகுநாட்கள்வரை திரும்பி வரவேயில்லை. உன் சகோதரன் உன்னைத் தேடிச் சென்றான். அவனும் திரும்பவில்லை. உங்கள் இருவரையும் தேடித் திரிந்தேன். கடைசியில் இங்கேயே வந்துவிட்டேன். ஆற்று வெள்ளத்தோடு சென்ற தந்தை வந்து சேர்ந்துவிட்டார்" என்றான்.

பிறகு அவன் தன் பெற்றோர்களைத் தான் இருக்கும் ராஜ்யத்திற்கு அழைத்துச் சென்றான். அந்த அரசனும் தனக்கு ஆண் சந்ததி இல்லாததால் தன் மூத்த மகளைக் குமாருக்குக் கல்யாணம் செய்து கொடுத்து ராஜ்யத்தை அவனிடமே ஒப்படைத்தான். தன் சகோதரன் மகளை ராமுவுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டான்.



# அன்பு

நா. பாலசுப்பிரமணியன்

[வேலூர் கண்ணன் கிளைக் கழக ஆதரவில் நடைபெறும் 'செந்தமிழ்' என்ற பத்திரிகையில் பரிசு பெற்ற போட்டிக் கதை.]

## 1

"சார், சார்!"

வாசலில் யாரோ கூப்பிடும் சப்தம் கேட்டது. நான் மெள்ள ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தேன். வேறு யாருமில்லை! அடுத்த வீட்டுக் குப்பண்ணா நின்றுகொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் அவர் அசட்டுப் பிள்ளை ரங்கண்ணா, தலையில் கட்டுக் குடுமியுடன் வாயிலிருந்து எச்சில் வழிய, மூக்கில் சளி எட்டிப் பார்க்க, முகத்தில் அசடு வழிய, அத்துடன் தலையில் ரத்தம் வழிய நின்றான்.

"ஏண்டா, உன் அப்பா இல்லை?" அவர் என்னைப் பார்த்துத்தான் அப்படிக் கேட்டார். இதற்குள் அப்பாவே வெளியில் வந்துவிட்டார். "அடடே! குப்பண்ணாவா? வாருங்கள், சார். என்ன விசேஷம்?" என்றார் என் அப்பா.

"என்ன விசேஷமா? என் பிள்ளை பிறந்ததே பெரிய விசேஷந்தான். ஏன் சார்? இது என்னதான் அசடாயிருந்தாலும் சோனியாயிருந்தா

லும் உங்கள் பிள்ளைக்கு இத்தனை இளக்காரம் வேண்டாம், சார்.''— ஆத்திரத்தோடு சுடச் சுடப் பதில் கொடுத்தார் குப்பண்ணு. அவரை ஆற அமர விசாரித்ததில் விஷயம் தெரிந்தது. விஷயம் இதுதான்:

## 2

அந்த அடுத்த வீட்டு அசட்டுக்கு அவன் அம்மா ஒரு மாம்பழம் கொடுத்தாளாம்.

அதை அந்த அசடு வீட்டுக்குள்ளேயே வைத்துக்கொண்டு தின்னக் கூடாதோ? மிக அக்கறையாக என் தம்பியைக் கூப்பிட்டுப் பெருமையடித்துக்கொண்டிருக்கிறது.

என் தம்பிக்கு அதை எப்படியாவது பிடுங்கித் தின்னவேண்டும் என்று உள்ளூற ஆவல். கொஞ்சம் யோசனை செய்துவிட்டு, ''ஐயைய! இது அழுகின மாம்பழம் போலிருக்குடா. காண்பி, பார்க்கலாம்'' என்று வாங்கிக்கொண்டான்.

பிறகு, 'இங்கே தொட்டுப் பாரேன். எப்படிக் கொள கொளன்னு இருக்கு. போய் வேறே வாங்கிண்டு வாடா'' என்றான்.

ரங்கண்ணு, ''அது சரி, அதைத் தா! எங்க அம்மா கிட்டே கொடுத்துட்டு வேறே வாங்கிண்டு வரேன்'' என்றான்.

''போடா மடையா! நீ போய் வேறே வாங்கிண்டு வாடா! அப்புறம் இதை எடுத்துண்டு போய்க் கொடுக்கலாம். இல்லேன்னா இதையும் புடுங்கி வச்சுண்டு, 'போடா உனக்கு மாம்பழம் கிடையாது'ன்னு விரட்டிடுவா.''

'சரி' என்று அந்தப் பைத்தியம் உள்ளே போய் அவன் அம்மாவை வேறு மாம்பழம் கேட்டிருக்கிறது. அவள், ''அதுவும் நல்ல மாம்பழம் தான''டா;போய் அதையே தின்னு என்று அனுப்பிவிட்டாள்.

ரங்கண்ணு திரும்பி வந்த பொழுது அங்கு வெறும் கொட்டை தான் இருந்தது!

'ஊ'வென்று ஊளையிடத் தொடங்கினான் அவன். என் தம்பி ''அழாதே!'' என்று கெஞ்சினான். பலிக்கவில்லை. அதட்டி உருட்டிப் பார்த்திருக்கிறான். பயனில்லை. கை கலந்து விட்டது. முடிவில் பக்கத்திலிருந்த கல் ரங்குவின் தலையைப் பதம் பார்த்துவிட்டது.

## 3

''டேய், கல்யாணம்!'' என்றார் என் அப்பா கோபமாக.

கல்யாணம் வேறு யாருமில்லை. என் தம்பி வானரந்தான். அவன் உள்ளே நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் தலையில் ஒரு குட்டுக் குட்டி அப்பாவிடம் அனுப்பினேன். அப்பா அவனை எதுவுமே கேட்கவில்லை.

''பளார்!''

கல்யாணத்தின் கன்னம் 'ஏன்' என்று கேட்டது.

அடுத்த அடி முதுகில்; அப்புறம் ஒரு குத்து; 'பட்பட்' என்று நாலைந்து குட்டுகள்; காலால் ஓர் உதை; காதைப் பிடித்து ஒரு திருகு; அப்புறம்—

கல்யாணம் 'வீல்' என்று அலறினான். வலி தாங்கமுடியாமல், 'ஓ'வென்று அழுதான்.

எங்கள் வீட்டில் நடைபெறும் தினசரிக் காட்சிதான் அது. ஆனால் இன்று அடி ஒரு படி அதிகமாகவே விழுந்தது.

எங்களுக்குப் பாவமாகத் தெரியவில்லை. ஆனாலும் அடுத்த வீட்டுக் குப்பண்ணுவுக்குப் பாவமாயிருந்தது. ''போனால் போகிறது. அடிக்காதீர்கள், சார். ஏதோ சின்னப் பையன்; தெரியாமல்..!'' என்றார்.

அப்பா அடிப்பதை நிறுத்தினார். என் அம்மா இதுதான் சமயம் என்று வந்து என் தம்பியை உள்ளே அழைத்துக்கொண்டு போய்விட்டாள். குருவிக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா? 'வந்து கோள் மூட்டியது இவர்; இப்போது அநுதாபப் படுகிறார்! என்ன அநுதாபம் வேண்டிக் கிடக்கிறது' என்றுகூட எனக்குத் தோன்றியது.

''என்ன சார் பண்ணுவது? அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும். ஆனால் இந்தப் பயலை விட்டுத் துடுக்குத்தனம் நகரமாட்டேன் என்கிறது, சார்.''

அடுத்த வீட்டுக் குப்பண்ணு, "சார், அடியைவிடச் சிறந்த வழி ஒன்றிருக்கிறது சார். அடி உதவாத இடத்தில் அது உதவும். உங்கள் மகனைத் திருத்த நான் சொல்லும் வழியைக் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு அப்பா காதில் ஏதோ ஓதினுர்.

அப்பா முகம் மலர்ந்தது. "ஆகட்டும், சார்" என்று சொல்லிவிட்டு உள்ளே வந்து அதை எங்களிடம் சொன்னுர்.

## 4

சாயங்காலம் இவ்வளவு அடி வாங்கினுனே! அவ்வளவையும் மறந்துவிட்டு உடனே விளையாடப் போய்விட்டான் கல்யாணம். போனவன் எட்டு மணிக்குத்தான் வந்தான்.

எப்பொழுதும் லேட்டாக இரவு ஏழு மணிக்குமேல் வீட்டினுள் நுழைந்தால், அவன் முதுகில் மத்தளம் வாசிப்பது வழக்கம். அப்பா அன்று அவனை எதுவுமே சொல்லவில்லை. அவன் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. அவனைப் பார்த்ததும் முகத்தை மட்டும் மாற்றிக்கொண்டார் அப்பா.

கல்யாணத்தின் மனம் எப்படியோ ஆகிவிட்டது எனக்குத் தெரிந்தது. நேரே சமையலறைக்குள் நுழைந்தான் அவன். "சாதம் போடம்மா" என்றுன்.

"உம்" என்று அவளும் அவனிடம் முகம் கொடுத்துப் பேசவேயில்லை.

அம்மா எப்போதும் அவன் சாப்பிட வந்தால், "வாடா கண்ணே! உட்காரு. இரு; இதோ இலை போடுகிறேன்" என்றெல்லாம் உபசரிப்பாள். ஆனுல் இன்றே?..

அது அவனுக்கு இரண்டாம் அதிர்ச்சி. ஆனுல் அவனுக்கு நடக்க வேண்டிய உபசாரங்கள் எனக்கு நடந்தன.

சாப்பாடு முடிந்தது. நேரே படுக்கைக்குப் போனுன் அவன். 'ஏண்டா கழுதை, படிக்கவில்லை?' என்று அப்பா கேட்பார் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். ஆனுல் அவர் கேட்கவில்லை.

இப்படியாகக் கழிந்தன இரு தினங்கள். கல்யாணத்திடம் யாரும் முகங் கொடுத்துப் பேசவில்லை. ஆனுல் வேளைக்கு வேண்டியது எல்லாம் கிடைத்தன: ஆனுல் ஒன்று கிடைக்கவில்லை. அதுதான் 'அன்பு'. ஆம், அவனுக்கு அன்பு கிடைக்கவில்லை. அவன் அதற்காக ஏங்கினுன். அதை அவன் வாடிய முகம் சொல்லியது. ஏக்கம் நிறைந்த பார்வைகள் மொழிந்தன. ஆனுல் வாய் மொழியவில்லை.

அன்று இரவு.

அப்பா விளக்கடியில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். நான் என் பாடத்தைப் பொட்டை உரு அடித்துக்கொண்டிருந்தேன். எப்பொழுதும் கல்யாணத்தின் படுக்கையை உதறிப் போட்டுவிட்டு என் படுக்கையைப் போடும் அம்மா, இன்று முதலில் என் படுக்கையை எடுத்துப் போட்டாள்.

அதைப் பார்க்கச் சகிக்கவில்லை கல்யாணத்திற்கு. 'ஐயோ! நாம் போக்கிரியாயிருப்பதால்தான் அம்மா நம்மை வெறுக்கிருள்' என்று நினைத்தவன் 'கோ' என்று கதறிவிட்டான்.

"அம்மா" என்றுன் விசும்பலுக்கிடையே. "நான் இனிமேல் யாரையும் அடிக்கமாட்டேம்மா. போக்கிரியாயிருக்கமாட்டேன். அப்பா, நீ கூட என்னேடே பேசமாட்டியா? அண்ணு, எனக்கு நீ இனிமே பப்பர்மிட்டு வாங்கித் தரமாட்டயா? யாரும் என்கூடப் பேசமாட்டீர்களா?" என்று விசித்தான்.

நான் அப்பாவைப் பார்த்துச் சிரித்தேன். அப்பா என்னைப் பார்த்துச் சிரித்தார். அடி உதவாத இடத்தில் அன்பு உதவியது. அடி செய்யாததை - அடியால் செய்ய முடியாததை - அன்பு செய்துவிட்டது! அடியும் அண்ணன் தம்பியும் உதவா இடத்தில் அன்பு உதவும்.

அதோ பாருங்கள்! ரங்கண்ணுவும் கல்யாணமும் எவ்வளவு சந்தோஷமாக விளையாடுகிருர்கள்! என் தம்பி இப்போதெல்லாம் எவ்வளவு நல்லவனுகி விட்டான், தெரியுமா?

# செவிட்டுப் பாட்டி

**அநசூயா**

(சைக்கிள் மணி அடிக்கிறது.)

பாட்டி: (நடுக்கும் குரலில்) யாரு அங்கே? ஏதோ சத்தம் கேக்கிறதே!

கலா: நான்தான் பாட்டி, கலா!

பாட்டி: வாடா அப்பா, கிருஷ்ண மூர்த்தி! வா! கண்ணே தெரியல்லே! வயசாயிட்டுதோ இல்லேயோ? வரவர ரொம்ப மோசமாப் போயிட்டுது..

கலா: (இரைந்து) நான் கிருஷ்ண மூர்த்தி இல்லே, பாட்டி! கலா!

பாட்டி: யாரு..? கலாவா? நம்ப வீட்டுக் கலாவா? இதை முந்தியே சொல்லப்படாதோ?

கலா: பாட்டீ!

பாட்டி: என்ன?

கலா: கண்ணு மட்டுமில்லே.. உனக்குக் காதும் இப்போ பெரிய ரிப்பேர் ஆயிட்டுது..

பாட்டி: என்னடி சொல்றே?

கலா: (இரைந்து) காது.. உ. உ.

பாட்டி: ..ம்....

கலா: ரிப்பேர்ன்னேன்!

பாட்டி: ரிப்பேரா? அதுக்குத்தான் உங்க அப்பன் கிட்டே முட்டிக்கறேன். பொம்மனாட்டிக் குழந்தைகள் சைக்கிள்ளே போகலாமோ? இப்போ ரிப்பேர்னு ஆனா உனக்கு என்ன செய்யத் தெரியும்?

சந்தானம்: பாட்டி பாட்டி பாட்டி! பதக்கரிசி தீட்டி! கோணக் காலே நீட்டி! குறுக்கே நில்லு, பாட்டி!

பாட்டி: இது யாருடா இது..?

கலா: டேய், இரு இரு, நான் சொல்றேன்! (இரைந்து) பாட்டீ! உன் பேரன் கிருஷ்ணமூர்த்தி!

பாட்டி: கிருஷ்ணமூர்த்தியா? வாடாப்பா குழந்தே, வா.. ஏண்டி கலா..என் பேரன் எங்கிறியே.. நீ மட்டும் எம் பேத்தி இல்லேயோ? நீ பிள்ளே வயத்துப் பேத்தி. அவன் பெண் வயத்துப் பேரன்..இரண்டும் ஒண்ணுதான்.

கலா: இருந்தாலும் அவன் உனக்கு உசத்திதான்.

பாட்டி: போடீ போ! வாடாப்பா கிருஷ்ணமூர்த்தி; வா, சாப்பிட்டியோ?

சந்தா: இன்னும் இல்லே!



பாட்டி: அதனுலே என்ன? இன்னும் ஒரு வாய் சாப்பிடு!

சந்தா: சரியாப் போச்சு!

பாட்டி: சைக்கிளை ஓடச்சிண்டு வந்து நிக்கரு! சொன்னுக் கேட்டாத்தானே! யாரோ வருப்பலே இருக்கே!

கலா: என் பிரெண்டு பாட்டி, ரஜனி!

பாட்டி: ஆரு! பேரு நன்னு இருக்கே; கஜினி!

ரஜனி: என்ன கலா..உங்க பாட்டி கொஞ்சம் 'டெஃப்போ?'

சந்தா: கொஞ்சம் என்ன? ஆட்டம் பாம் போட்டா புகையுமே!

பாட்டி: ஏண்டியம்மா கஜினி! எங்க கலாவோடே படிக்கிறியோ?

ரஜனி: ஆமாம், பாட்டீ!

கலா: கண்ணும் கொஞ்சம் டல்லு!

ரஜனி: ஓ!




பாட்டி: படிச்சிண்டே இருந்தால் பொண்ணுப் பிறந்தவள், எப்போ கல்யாணம் பண்ணிக்கிறது?

ரஜனி: கல்யாணப் பேச்சே படிக்கிற வரைக்கும் பேசப்படாது.

கலா: பாட்டீ! அவ ஐ. ஏ. எஸ். பரீட்சைக்குப் படிக்கப் போரு..

சந்தா: பொண்கள் எல்லாம் ஐ. ஏ. எஸ்! நாங்கள் எல்லாம் இனிமே ஐ. ஸி. எஸ். இண்டியன் குக்கிங் சர்விஸ்!

கலா: டேய், மூடுடா வாயை; அபத்தம்!

சந்தா: அப்புறம் பாட்டி கிட்டே நான் யாருன்னு சொல்விடுவேன்.

கலா: டேய் பிளீஸ்! பிளீஸ்! பாட்டியை இன்னிக்குச் சரியான வேடிக்கை செய்யணும்!

பாட்டி: தை பிறந்தா வழி பிறக்கும்னு அந்தக் காலத்திலே சொல்வா? இப்பத்தான் தை பிறந்து நாலு மாசம் ஆச்சு! கல்யாணத்துக்கு வழியை நீங்களே அடைச்சிண்டு நிக்கறேளே!

கலா: ரஜனி! சந்தானம்! மெதுவாக நழுவிவிடுவோம். பாட்டி தொணப்ப ஆரம்பிச்சா இருட்டிப் போயிடும்!

பாட்டி: என்னடி பொண்ணே சொல்றே?

சந்தா: அதோ என்னைத் தேடிண்டு கணேசன் வரான்!

கணேசன்: டேய் சந்தானம்! என்னப்பா, இன்னிக்குக் கிரிக்கெட் மாட்சு ஞாபகமே யில்லையா?

சந்தா: அதுக்குத்தாண்டா சில்லறைக்கு யாரைப் பிடிக்கலாம்னு வந்தேன். அப்பா வீட்டிலே இல்லே. என்ன பண்றதுன்னு தெரியாமே முழிக்கிறேன்.

கலா: அதுக்குத்தான் வந்திருக்கியா? என்னடாப்பா சாது போல வந்திருக்கியேன்னு பார்த்தேன்..

சந்தா: கலா! கலா! ஒரு ஒன்ருபீ தாயேன்..அப்பா வந்ததும் வாங்கிக் கொடுத்துடறேன். பிளீஸ்! தரமாட்டியா?

கலா: நான்கூட ரஜனிக்

குப் பணம் கொடுக்கணும்: அன்னிக்கு டான்ஸுக்கு அவள் பணம் கொடுத்து அழைச்சிண்டு போனுள். அந்தப் பணந்தான் வச்சிருக்கேன்; வேறே இல்லே..

ரஜனி: எனக்கு அவசரமில்லே, கலா. மெதுவாக வாங்கிக்கறேன்.

கலா: இரேன், இப்போ பணம் கிடைக்க ஒரு வழி இருக்கு!

கணேசன்: எங்கிட்டேகூடப் பணமில்லே, சந்தானம்! இல்லாட்டா தருவேன்.

கலா: பேஷ்! நம்ப திக்குவாய்ச் சாமாவை ஒரு நிமிஷம் கூட்டிண்டு வர முடியுமா?

கணேசன்: அ தே தா, அவன் வாசல்லேயே நிக்கருனே! கூப்பிட்டுமா? அடே சாமா—டேய்!

சாமா: எ..எ..ன்..னடா.. கூகூகூகூ....?

கணேசன்: ஆமாண்டா கூப்பிட்டேன்!

கலா: வாங்கோ, பாட்டிகிட்டே எல்லாரும் போகலாம். நீங்க ஒண்ணும் செய்யவேண்டாம். நான் சொல்றபடி கேட்டால் போரும்.

சாமா: ச ச ச ச ரி ரி.

சந்தானம்: பப பப தத நிநி!

சாமா: டேடேய்! வெ..வெவெவெ..ளேயாடாதே! ஆ ஆ ஆ ஆமாம்!

கலா: பாட்டீ!

பாட்டி: யாரு? கலாவா? என்ன?

கலா: (இரைந்து) நம்ப கஜினியில்லே..கஜினி, அவளுக்கு ஒரு அக்கா இருக்கா....ரொம்பச் சேப்பா அழகா இருப்பா!

பாட்டி: இருக்காளா? அவ பேரு என்ன?

கலா: அவளுக்கு நிர்மலான்னு பேரு!

பாட்டி: அந்தப் பேரு நன்னு இருக்கே!

கலா: அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே!

பாட்டி: ஊகும்..

கலா: இவாளுக்கு—பாட்டீ! நிறையப் பணம் இருக்கு!

பாட்டி: நிறையச் சீர் செனத்தி எல்லாம் செய்வா!

கலா: ஆமாம்....

பாட்டி: அப்பன்னு நம்ப கிருஷ்ணமூர்த்தியோட அண்ணு முத்து இருக்கானே; அவனுக்குப் பெண்ணைக் கொடுக்கலாமே!

கலா: அதுக்குத்தான் சொல்ல வந்தேன்..அவ தம்பி சாமாகூட இதோ வந்திருக்கான்.

சாமா: எஎஎன்ன....

கணேசன்: இருடா, நீ ஒருத்தன் நடுவிலே! நீ பேசி முடிக்கிறதுக்குள்ளேயே அஞ்சு நிமிஷம் ஆயிடும்!

சாமா: க க க கணேசா! எ என் எ என் னடா?.. உ உ உ உடம்பு எ எ எ எப்படி இ இ இருக்கு?

சந்தா: சாமா, கணேஷ்! கொஞ்சம் தயவு செய்து கலா சொல்றபடி கேளுங்கோ! உங்களுக்குப் பெரிய புண்ணியம் உண்டு.

சாந்தா: வந்து கலா! கலா!

கலா: உஸ்! சாந்தா! நல்ல வேளே, நீ ஒரு பைவ் மினிட்ஸ் நிர்மலாவா ஆக்ட் பண்ணணும்.

சாந்தா: ஐயையோ! ஏதுக்கு?

ரஜனி: அதாவது என் ஸிஸ்டரா ஆக்ட் பண்ணணும் என் கிருள் கலா.

சாந்தா: உனக்கு நிர்மலான்னு ஒரு ஸிஸ்டர் இருக்காளா என்ன? நீதான் ஒரே பெண்ணுச்சே!

கலா: சாந்தா! கொஞ்சம் மெதுவாப் பேசேன். இன்னிக்கு எல்லாருமே மாட்சு பார்க்கப் போகலாம். அதுக்கு ஒரு வழி வச்சிருக்கேன்.

சாந்தா: சரி .. நிர்மலாதானே எம் பேரு?

கலா: கிருஷ்ணமூர்த்தியோட டியரஸ்ட் பிரெண்டு..

பாட்டி: நீ அந்தக் கஜினியோட தம்பியா?

சாமா: ஆ ஆ ஆ ஆமாம், பாட்டி:

கலா: இரைஞ்சு சொல்லு! பாட்டிக்குக் காது கொஞ்சம் டம்மு.

சாமா: (இரைந்து) ஆஆஆமாம், பாட்டீ!

கலா: இவன்தான் வீட்டுக்கு ஒரே பிள்ளே. இவன் சொன்னு போரும், இவ அம்மா உடனே உன்னைப் பார்க்க ஓடிவந்துடுவா!

பாட்டி: அப்படியா? ரொம்ப நல்லதாப் போச்சே!

கணேசன்: (மெதுவாக) டேய், மாட்சுக்கு நாழியாகிறதடா சந்தானம்!

சந்தா: இருடா... அஞ்சு நிமிஷம்! இன்னும் டயம் இருக்குடா!

சாமா: க க க க க லா . . . வவவ வந்து . . .

ரஜனி: பாட்டி என்னமோ மடி சஞ்சியைத் திறந்து எடுக்கறாளே!

சந்தா: பணம் எல்லாம் பாட்டி இதிலேதான் வச்சிருக்கா!

சாந்தா: ஓகோ! என்னமோ கையிலே மறைச்சுத் தலைக்குள்ளே வச்சிக்கறாளே!

கணேசன்: கயிறுகூடத் தொங்கறது; கயிறு போட்ட மணி பர்ஸோ பையோ தெரியல்லே!

சாமா: பா பா பாட்டி . . ந நமக்குத் தெ தெ தெ தெரியக் கூ கூ கூடாதுன்னு ம ம ம மறைக்கிறா!

கலா: பாட்டி! இதோ அவளே வந்துட்டா! நிர்மலா!

ரஜனி: பாட்டி பார்த்தாப்பலே தான்! சாந்தா-பீ கியார்புல்!

பாட்டி: நிர்மலான்னு சொன்னியே . . அந்தப் பொண்ணா?

கலா: ஆமாம், பாட்டி! முத்துவுக்குச் சரியான இடம்!

சாந்தா: என்ன கலா இதெல்லாம்?

கலா: பேசாமல் இரேன், சாந்தா . . எனக்காகச் சித்தே நாழி ஆக்ட் பண்ணப்படாதா?

பாட்டி: கல்யாணத்துக்கு வழி பிறக்கணும். முத்துவுக்கு என்ன, ராஜா மாதிரி இருப்பான். ஏண்டாப்பா குழந்தை . . . அந்தப் பையன் இருக்கானோ?

கலா: சாமா! உன்னைத்தான் கேட்கிறாள் பாட்டி, இருக்கியோ என்று.

சாமா: இ இருக்கேன் ப பாட்டி!

பாட்டி: ஓடிப் போய் அம்மாவைக் கூட்டிண்டு வரியா?

கலா: அவன் மாட்சுக்குப் போறான், பாட்டி! கையிலே செக்கா இருக்காம். பணம் கேட்க வந்திருக்கான்.

பாட்டி: உங்க அப்பா இருக்கானோ?

சந்தா: இல்லே பாட்டி, அதான் பார்க்கறோம்!

பாட்டி: சித்தே நாழி இருங்கோளேன். கலாவோடே அப்பா வந்துடுவான்!

கலா: அதுக்குள்ளே வேணுமாம். அப்பா வர நாழியாகும்



**ஒருவர்:** சாப்பாட்டில் இன்று ஒரு கல்கூட இல்லையே!

**மற்றவர்:** இல்லாவிட்டால் என்ன? நமக்கு நல்லதுதானே!

**முதல் ஆசாமி:** இதிலே ஒரு கல்லாவது எடுத்துக் காட்டுவதாகப் பந்தயம் கட்டியிருக்கிறேன்.

—P. **கலாசாமி, தூத்துக்குடி.**

---

பாட்டி! உங்கிட்டே இருந்தால் ஒரு அஞ்சு ரூபாய் கொடேன். அப்புறம் தந்தால் போச்சு!

பாட்டி: ஏண்டாப்பா கிருஷ்ண மூர்த்தி, நீயும் போகப் போறியோ?

சந்தா: (இரைந்து) ஆமாம், பாட்டி!

பாட்டி: இது யாரு, சந்தானம் குரல் போலேன்னா இருக்கு!

கலா: இல்லே, பாட்டி! கிருஷ்ண மூர்த்திதான் இவன். உனக்குத்தான் காது ரிப்பேராச்சே!

பாட்டி: ஹி ஹ ஹி ஹி . . . ஏண்டாப்பா கிட்டே வா!

சந்தா: ஐயையோ! பாட்டி மண்டையைத் தடவறாளே!

கலா: பாட்டி! அவாளுக்கு நாழியாகறது. சட்டுனு கொடேன்! (மெதுவாக) சாந்தா, ரஜனி! அவசரப் படுத்தறாப்பலே பேசுங்கோ!

சாந்தா, ரஜனி: நாழியாயிட்டுது, கலா!

கலா: நான் கேக்கலை பாட்டி! அந்தப் பையன் கிருஷ்ணமூர்த்தியோடோ டியரஸ்ட் பிரண்டுக்கு வேணும்!

சந்தா: ஆமாம், பாட்டி!

பாட்டி: அஞ்சு ரூபாயா வேணும்?

கலா: ஆமாம், பாட்டீ! இன்னிக்கே அவனைப் போய் அவ அம்மாவை வரச் சொல்லட்டுமா? இப்பவே பெண்ணைப் பாத்துடு. அப்புறம் பாக்கல்லே, பேசலலேன்னு சொல்லாதே...

பாட்டி: ஏண்டிம்மா நிர்மலா, உனக்கு என்ன வயசாகிறது?

சாந்தா: பதினைஞ்சு.

பாட்டி: போறது.. இந்தக் காலத்துலே... இப்படி.... அது சரி. பாடத் தெரியுமோ?

ரஜனி: ரொம்ப நன்னாப் பாடுவாள்!

சாந்தா: ஐயையோ! பொய் சொல்லாதேங்கோடி! பாடச் சொல்லப் போறாள்! பாட்டுன்னு ஒரு வரிகூடத் தெரியாதே—

கலா: கவலைப்படாதே! பாட்டிக்குக் காது கொஞ்சம் டம்மு! மறந்துட்டியா?

ரஜனி: பாட்டி! எங்க அக்கா நன்னா டான்ஸ்கூடப் பண்ணுவா?

## ஒரே கோட்டில் நேதாஜி



கலா: (இரைந்து) டான்ஸ் இல்லே டான்ஸ் - நாட்டியம், அதைச் சொல்றா! செம்மனார் கோயில் சின்னையா சிட்சை!

பாட்டி: ஊகும். சதிர் ஆடத் தெரியுமா? ஏண்டா கிருஷ்ண மூர்த்தி! உனக்கு மதனி சதிர் ஆடினாப் பிடிக்குமாடா?

சந்தா: ஓ! பிடிக்குமே—

பாட்டி: ஆனி பிறந்திருக்கு! இனிமே எல்லாத்துக்கும் தானா வழி பிறக்கிறது.

கலா: அதான் சொல்றேன். பிறந்துண்டே இருக்கு.. உன் கை வழியா இப்போ பிறக்கணும்

பாட்டி: கிருஷ்ணமூர்த்தி!

சந்தா: ஏன் பாட்டீ!

பாட்டி: எங்க சந்தானம் மாதிரி இரட்டை மண்டையா நீ? அப்படி இல்லியே முந்தி!

சந்தானம்: இப்ப அப்படி ஆயிடுத்து, பாட்டீ!

கணேசன்: டே....பாட்டியை ஏமாத்த முடியாதுடா! தலை கீழே நின்னாலும் பாட்டி கிட்டே இன்னிக்குப் பைசா தேறாது!

பாட்டி; சரி, எல்லாரும் போயிட்டு அப்புறமா வாங்கோ!

கலா: அவ்வளவுதானா, பாட்டி! பணம் தரமாட்டியா?

பாட்டி: எங்கிட்டே ஏதுடிம்மா காசு?

கலா: பின்னே இதுக்குத்தானா இத்தனை நாழி தொண்டை கிழியக் கத்தினோம்!

பாட்டி: எங்கிட்டே இருந்த பணத்தையெல்லாம் நேத்திக்குத் தான் கிருஷ்ணமூர்த்தியண்டே கொடுத்தேன். அவன் போய் அவ அப்பா கிட்டே கொடுத்து இதைக் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போனான்.

கலா: அது என்ன அது?

பாட்டி: தெரியல்லியா; இதைக் காதுலே வச்சுண்டா காது கேக்குமாம். மாசம் பிறந்தது; என் காதுக்கு வழியும் பிறந்தது.

கலா: அப்படின்னா இத்தனை நாழி நாங்க பேசினது...

சாமா: எ எ எ எ எல்லாம்..

பாட்டி: கேட்டுண்டுதான் இருந்தேன்.



# கயிலையிலே

**சுருமீன்**

காலை ஆறு மணி இருக்கலாம். வெள்ளிப் பனி சூழ்ந்த கைலாயம் தகதக வென்று மின்னியது. பார்ப்பவர் கண்ணைக் கெடுத்தது அவ்வெளிச்சம்! நம்மை விட இப்பனிமலை அதிகப் பிரகாசமாக உள்ளதே எனக் கதிரவன் வெட்கப்பட்டுத் தன் கதிர்களை அங்கே செலுத்தாமல் நின்றான். பூதகணங்கள் வரிசையாக ஒருபுறம் அணிவகுத்து நின்றுகொண்டிருந்தன. திருவாளர் நந்தியார் அந்தக் கணங்களின் தொகுதி தமக்களித்த ‘கார்டு ஆப் ஆன’ரைப் பெற்றுக்கொண்டு அணிவகுப்பை மேற்பார்வை யிட்டுக் கொண்டிருந்தார். அவர்களை அடுத்துச் சிவபிரானின் மஞ்சள் நிறப் பங்களா. மயானத்தில் பயங்கரமான தோற்றத்துடன் சிவபிரான் நர்த்தனமாடுவதைச் சின்னமாக உடைய நீல நிறக் கொடி பங்களாவின்மீது படபட வென்று காற்றில் அசைந்து ஆடி, கண்டோரை மயக்கிக்கொண்டிருந்தது.

அந்த மாளிகையினுள் ஒரு காட்சி. அழகிய காட்சிதான். ஒரு சோபாவில் கைலயங்கிரிநாதர் அமர்ந்து அருமை மனைவி பார்வதியுடன் உரையாடிக் கொண்டிருந்தார். ‘‘இந்த அமெரிக்காவும், ருஷியாவும் எனக்கு அதிக வேலை வைக்கும்போலிருக்கிறதே. ஒவ்வொருவரும் ஏ. பாம் என்ன, எச். பாம் என்ன, கோபால்ட் பாம் என்ன, நைட்ரஜன் பாம் என்ன என்று கண்டு பிடித்துக்கொண்டே போகிறார்களே.. அவர்களைத் தடுப்போம் என்றால் அந்தப் பாம்களாலேயே என்னை மிரட்டுகிறார்களே!’’

‘‘ஏன், உங்கள் தேவதூதர் ஏசு கிறிஸ்துவின் மூலம் அவர்களை அடக்குங்களேன்!’’ என்றாள் பார்வதி. ‘‘ருத்ரமூர்த்தியான என்னைக் கண்டே அவர்கள் அஞ்சாதிருக்கும்போது சாந்தமூர்த்தி ஏசு என்ன செய்ய முடியும்?’’ என்றார்.

இந்தச் சமயததில், ‘‘ஸார்! பேப்பர்’’ என்ற குரல் கேட்டது. சிவன் அவர்கள் ‘தி ஹெரால்’டைப் பிரிக்க ஆரம்பித்தார். ஸ்ரீமதி



சிவன் ஓவல்டின் கலக்க உள்ளே சென்றார். பேப்பர் படிக்கத் தொடங்கிய பெருமானது மீசை துடிக்கத் தொடங்கியது. கண்கள் கோவைப்பழம்போல், இல்லை இல்லை, செங்குருதிபோல் சிவந்தன. மூக்கு விரைப்பாக நின்றது. பார்வதியாரால் அளிக்கப்பட்ட ஓவல்டின் ஐஸுடன் கொஞ்சிக் கொண்டிருந்தது.

உடனே மிஸ்ஸஸ் சிவபெருமான் டெலிபோனைக் கையில் எடுத்தார். டயலைத் திருப்பினார். "ஹலோ! ஹலோ!! பேசுவது நான்முகன் நாயகியா? என் கணவர் மிகுந்த கோபத்துடன் இருக்கிறார். ஆம்; பேப்பர் படிக்கத் தொடங்கியதும் தான்.. உன் கணவரான சிருஷ்டிக் கடவுள் என் ஹஸ்பெண்டிற்குக் கோபத்தைப் படைத்த காரணமென்ன? உடனே இதற்கு அவர் பதில் கூறட்டும். இல்லையேல்.. என் கணவரான அழிப்புத் தெய்வம்.."

அச்சமயத்தில் மறுபுறத்திலிருந்து, "ஹலோ! ஸ்ரீமதி சிவன்! தயவுசெய்து பொறுங்கள்.. பொறுத்தார் பூமி ஆழ்வார்.. (பேயாழ்வார் போல் பூமி ஆழ்வாரும் ஒரு விஷ்ணு பக்தரல்ல.. எழுத்து மிஸ்டேக்தான்.. பூமி ஆள்வார் என்றிருக்கவேண்டும்). உடனே என் நாயகனை அங்கே அனுப்பி வைக்கிறேன்" என்ற பதில் வந்தது. பார்வதியாரின் கையில் இருந்த டெலிபோன் ரிஸீவர் 'டக்' என்ற சப்தத்துடன் பலமாகக் கீழே வைக்கப்பட்டது.

சிறிது நேரத்தில் நந்தியார் திரிபுரம் கொண்ட பெருமானுக்கு ராணுவ முறையில் ஒரு ஸல்யூட் கொடுத்தார். பின்பு, "ரெஸ்பெக்டட் மாஸ்டர்! மிஸ்டர் பிரம்மன் தங்களைக் காண வந்துள்ளார். விடட்டுமா?" என்றார். பெருமான் வாய் திறக்குமுன் தேவியார் அனுமதி தர, கைலாய பங்களா காம்பவுண்டிற்குள் புதிய மஞ்சள் நிற 'வாக்ஸால்' கார் அன்னக் கொடி பறக்க அசைந்து உள்ளே நுழைந்தது. அதிலிருந்து நான்முகனும், திருவாளர் திருமாலும் இறங்கி மெதுவாக நடந்து சிவபெருமானுக்கு வணக்கம் செலுத்தினர்.

இப்போதும் சிவபெருமானின் கோபம் தணியவில்லை. "அங்கேயே உட்காருங்கள்" என்று உத்தரவிட, இருவரும் இரு நாற்காலிகளை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தனர். பெருமானின் பர்ஸனல் ஸெக்ரடரி கன்ஃபூஷியஸ் நடக்கப் போகும் சம்பாஷணைகளைக் குறித்துக்கொள்ளத் தயாராக ஒரு டயரியுடன் நின்றார். அம்மையார் மூவருக்கும் டிபன், ஓவல்டின் தயாரிக்க மறுமுறை உள்ளே சென்றார்.

சிவபெருமான் கோபத்துடன் 'தி ஹெரால்'டைப் பிரம்மன் அருகில் எறிந்தார். சிருஷ்டிக் கோமகன் விண்ணுலகப் பதிப்பு ஹெரால்டைப் படித்தார். அவரது முகம் மலர்ந்தது. இல்லை. முகங்கள் மலர்ந்தன. இடி முழக்கம் போல் நான்கு வாய்களும் செய்திகளை ஒரே குரலில் படிக்க ஆரம்பித்தன.

* * *

**அதிசயம்! அதிசயம்!! பிரம்மாவின் விநோதப் படைப்பு!!!**

—பூலோகம், ஆகஸ்ட் 15:-இங்கே எருக்கம்பட்டி கிராமத்தில் ஒரு புலிக்குட்டி நான்கு எருமைக்கன்றுகளுக்குத் தாயாகியது. புலி அவைகளை நக்கிக்கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஜனங்கள் ஏராளமாக வேடிக்கை பார்க்கின்றனர்.

அதே இடத்திலிருந்து நமது நிருபர் வேறு இரு அதிசயங்களை எழுதுகிறார்:

ஏராள மக்குப்புரியில் ஒரு பூசனிக் கொடியில் ஐந்து மாம்பழங்கள் எட்டுக் கொம்புகளுடன் வயலெட் கலரில் காய்த்துத் தொங்குகின்றன. இதைப் பார்த்துத் திரும்பும் மக்கள், அருகில் இருபது தலைகளுள்ள கலிகால ராவணனைத் திருவாளர் எருமைக்கண்ணுப் பிள்ளை அவர்களின் வீட்டில் கண்டு வியப்பெய்தி, ''என்னே! பிரமனின் சிருஷ்டி!'' என்று வியந்து கூறுகின்றனர்.

* * *

இதைப் படித்ததும் சிவன் கோபத்துடன், ''வாட் மிஸ்டர் பிரமன்! என்ன உமக்குச் சிருஷ்டி செய்யும்விதம் மறந்து விட்டதா? என்னால் ஏற்கனவேயே சாதாரண ஜீவராசிகளையே அழிக்க முடியவில்லை! ரொம்பக் களைப்பாக இருக்கிறேன். இந்தச் சமயத்தில் புலிக்குட்டிக்கு எருமையும், பூசனிக்கொடியில் மாங்காயும், கலிகால ராவணனும் படைத்தால் நான் என்ன செய்வது? உடனே இதற்குப் பதில் கூறும்! உம் பேரில் கைலாய சுப்ரீம் கோர்ட்டில் கேஸ் போடப்போகிறேன்'' என்றார்.

''ஜீவராசிகளுக்கு உணவளித்துக் காப்பது என் கடமை. இப்போது தான் உணவுப் பஞ்சம் விலகப் பார்க்கும் சமயத்தில் நீர் இருபது தலைப் பிராணிகளைப் படைத்து, இருப்பதையும் ஒழிக்கப் பார்த்தால் நான் உணவு தேட எங்கே போவது? நானும் உம் பேரில் கேஸ்...'' என்று படபடவென்று அப்பளம் பொரிந்தார் மகா விஷ்ணுவும்.

இந்தச் சமயம் பிரம்மா, ''கனம் நண்பர்களே! பொறுங்கள். நான் செய்த காரியம் சரிதான். சிருஷ்டித் தொழில் எனக்கு மறக்கவில்லை. பூலோகத்தில் சில காலமாக மக்கள் கடவுளில்லை என்ற நிரீச்வர வாதத்தில் இறங்கியுள்ளனர். அதை ஒழிக்கவே நான் விநோதப் பொருள்களைப் படைத்து, தெய்வம் உண்டெனஅவர்கட்கு நினைவூட்டுகிறேன். அப்போது மக்கள் 'என்னே கடவுளின் சிருஷ்டி!' என்று கூறிச் சிறிதேனும் கடவுளை நினைக்கின்றனர். அதனால் ஓரளவு அவர்கட்கு விமோசனம் கிடைக்கிறது. கனம் விஷ்ணுவுக்கு என் செய்கையினால் தொந்தரவில்லை. ஏனெனில்..'' என்று கூறி, கடைசிப் பக்கத்தைப் படித்தார் பிரமன்:

## கடைசித் தந்தி

பூலோகம், ஆக. 16:-எருக்கம்பட்டி கிராமத்திலும், ஏராளமக்குப் புரியிலும் தோன்றிய விநோதப் பொருள்களான புலியின் எருமைக் குட்டிகளும், கலிகால ராவணனும் சிறிது நேரத்தில் இறந்து விட்டனர். அதிசய மாம்பழங்களும் உபயோகமில்லாமல் அழுகி விட்டன என்று நமது நிருபர் எழுதுகிறார். பிரம்மா இதை வாசித்துவிட்டு மேலும் தொடர்ந்து பேசினார்: ''அழிப்புத்



தலைவருக்குமட்டும் சிறிது கஷ்டம் ஏற்படுகிறது. நாம் மூவரும் கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டு ஒத்துழைத்தால்தான் மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை ஊட்டி அவர்களுக்கு விமோசனம் அளிக்க முடியும்' என்று முடித்தார். உடனே சிவன் 'ஏன் ஆஸ்திகத்தையும் அவர்களுக்கு நீர் படைத்து விட்டால்..'' என்று கேட்டார். உடனே பிரம்மன், ''சகலத்தையும் நானே படைப்பதற்குப் பூலோகம் என்று ஒன்றைப் படைத்தே இருக்க வேண்டாமே. மறைமுகமாக மக்களுக்கு நாம் உதவவேண்டுமே அல்லாது நேரிடையாக உதவி செய்தல் தவறு என்பதை நமது அரசியல் சாசனமே கூறுகிறது!'' என்றார்.

இதைக் கேட்ட மற்ற மூவர் முகத்திலும் (அதாவது பார்வதியார் உள்பட) ஆனந்தம் ததும்பியது. சிவபிரானின் கோபமும் தணிந்தது. அவரது வாய் மனைவியார் அளித்த பானத்தை ருசி பார்த்தது.

சற்று இருங்கள்! பார்வதிதேவியார் டெலிபோனில் பேசுகிறார்கள், கேட்போம்!''ஹலோ, ஸ்ரீமதி சரஸ்வதியா? இன்று மாலை உன் கணவரது புத்திக் கூர்மையைப் பாராட்டி நடைபெறும் தேநீர் விருந்துக்கு உன்னை அவசியம் எதிர்பார்க்கிறேன்.''

---

## எண்களைக் கண்டுபிடி!

[குறிப்பு: ஒவ்வொரு சித்திரத்திலும் ஒன்று முதல் ஒன்பது வரையிலுள்ள எண்கள் அடங்கி யிருக்கின்றன. எங்கே, அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.]



—மூட்டை, சேலம்.

# பேச்சு

## டி. எஸ். சுப்பராவ்

"உங்களைத்தானே! இங்கே வாருங்களேன், சீக்கிரம்!"

"என்னவென்று சொல்லேன்!"

"அட, பேப்பரைத்தான் கொஞ்சம் வைத்துவிட்டு இங்கே வந்து பாருங்கள்!"

போய்ப் பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை.

"நாகமணி, என்ன விளையாட்டு இது?"

"விளையாட்டா? குழந்தை இந்திராவைப் பாருங்கள்!"

"ஏன், நன்றாகத்தானே இருக்கிறாள்?"

"ஐயே, போதுமே உங்கள் பரிகாசம்! குழந்தைக்குப் பேச வந்துவிட்டதே, பார்த்தீர்களா!"

"இந்திரா, பேசு பார்க்கலாம்."

"ன்..மா..ஊ..ங்..ங்..!"

"எவ்வளவு சமர்த்துக்குழந்தை! இதற்குள் பேச வந்துவிட்டதே!" என்று தாயார் அவளைப் பெருமையாக வாரி அணைத்துக்கொள்கிறாள்.

"பார்த்தீர்களா பேச்சின் மகாத்மியத்தை?"

சரி, குழந்தைக்கு நான்கு வயதாகிறது. தந்தையே எதிர்வீட்டுக்காரரிடம் 'பெண் பெரிய வாயாடி சார்' என்று பெருமையடித்துக் கொள்கிறார்.

சிறு பையன் அதிகம் பேசாதவனாக இருந்தால், "வாயை லேசில் திறக்கமாட்டான் சார்! எமகாதகப் பயல். அழுத்தம்" என்கிறோம்.

பையன் பள்ளிக்கூடம் போகிறான். "பன்னிரெண்டு முக்கால் எத்தனை?" என்று கேட்கிறார் உபாத்தியாயர். பையன் மௌனியாகி விடுகிறான்! "என்னடா, வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது?" என்று அதட்டுகிறார் அவர்.

பேச்சு என்பது ஒரு கலை. எல்லோருக்கும் வாய் இருக்கிறது. நாக்கு இருக்கிறது. பேசுகிறார்கள். ஆனால் நன்றாகப் பேசுபவர்கள் வெகு சிலரே.

சிலர் பேசுவது நமக்கு ஒன்றும் புரியாது. நுனி நாக்கிலேயே உதடு அசைவதுகூடத் தெரியாமல் பேசுவார்கள். இவர்களை 'உளறு வாயன்' என்கிறோம்.

மற்றும் சிலர் காது துளைக்கச் சத்தமிடுவார்கள். "அப்பா, நான் செவிடனில்லை. நீ பேசுவது நன்றாகக் காதில் விழுகிறது" என்று சொன்னால்கூட இவர்கள் சுருதி இறங்குவதில்லை!

சிலருக்கு ஒரு விஷயத்தைச் சரியாக எடுத்துச் சொல்வதற்குத் தெரியாது. ஒரு மணி நேரம் பேசினாலும் 'அதன் கருத்து எங்கே இருக்கிறது?' என்று தேடவேண்டும். அதற்குத்தான் 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்னும் திறமை வேண்டும் என்கிறோம். இது அவ்வளவு சுலபமல்ல. 'வளவள'வென்று மணிக்கணக்காகப் பேசிக்கொண்டே போகலாம். ஆனால் 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு' என்று 'பளிச்'சென்று பேசி, விஷயத்தைச் சுருக்கமாக எடுத்துச் சொல்வதில் ஒரு சிலர்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

ஆஞ்சநேயர் இருக்கிறாரே, அவர் பேச்சில் நிபுணராம். 'சொல்லின் செல்வன்' என்று கம்பர் அவரை வர்ணிக்கிறார்.

உலகமே ஒரே பேச்சு மயமாக இருக்கிறது. எங்கே திரும்பினாலும் பேச்சு, பேச்சு சுதந்தரம் என்கிறோம். இந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக சுப்ரீம் கோர்ட் வரையில் போய் வழக்காடுகிறார்கள். பேச்சிலே ஒரு சக்தி இருக்கிறபடியால்தான் கலவரம் முதலியன நடக்கலாம் என்று சந்தேகப்படும் இடங்களில் பிரசங்கங்களுக்கு 144 தடை உத்தரவு

விதிக்கிறார்கள். பேச்சினாலேயே எதிர் அபிப்பிராயம் கொண்ட ஜனங்களைத் தன் வழிக்குத் திருப்பி விட்ட மார்க் அன்டனியைப்பற்றி ஜூலியஸ் சீசர் என்ற நாடகத்தில் எவ்வளவு அழகாக வருணித்திருக்கிறான் கவி.

ஆனால், 'பேச்சுமட்டும் போதாது. காரியத்தில் காண்பிக்க வேண்டும்' என்று தலைவர்கள் அடிக்கடி பேசுகிறார்கள்! 'வாய்ச் சொல்லில் வீரரடி, கிளியே' என்று நம் மக்களைக் கேலி செய்திருக்கிறார் பாரதியார் அவர்களே.

'எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு' என்று அந்தக் காலத்தைப் பற்றிப் பாடினார். ஆனால் இப்பொழுதோ,

'எங்கும் விலைவாசி என்பதே [பேச்சு,
இது எப்படியும் குறையா தென் [பது உறுதியாச்சு'

என்றுதான் பாடவேண்டியிருக்கிறது.

மேடையிலே சரமாரியாகச் சொற்பொழிவு ஆற்றும் பிரசங்கிகளை மெய்ம் மறந்து வாய் திறந்து கேட்கிறோம். நாமும அப்படிப் பேச ஆசைப்படுகிறோம். ஆனால் அது சுலபமாக இருக்கிறதா? ''ஸ்ரீ.... அவர்களை இப்பொழுது பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று நம்மை ஒருவர் கூட்டத்தில் அழைக்கும்பொழுதல்லவா கஷ்டம் புலனாகிறது. கரகோஷங்களுக்கிடையே மேடையில் ஏறி நிற்கும்போது குருக்ஷேத்திரத்தில் இரண்டு சைன்னியங்களுக்கிடையே கொண்டு நிறுத்தப்பட்ட அர்ஜுனனின் கதியை அடைகிறோம். கைகள் நடுங்குகின்றன. கால்களில் பலம் குன்றுகிறது. அங்கவஸ்திரம் தோளிலிருந்து நழுவுகிறது. தொண்டையோ சத்தியாக்கிரகம் செய்கிறது! அப்பப்பா, பிரசங்கம் செய்வதைவிட உலகத்தையே ஜயித்துவிடுவது சுலபம் என்று தோன்றுகிறது.

சிலர் மேடையிலிருந்து மணிக்கணக்காகப் பேசிக்கொண்டே போவார்கள். அவர்கள் பேசுவதோ 'சப்' என்று இருக்கும். 'கடைசியாக ஒரு வார்த்தை' என்று சொல்லிக்கொண்டு பிரசங்கத்தை நீட்டிக்கொண்டே போவார்கள். நடுவிலே பேச்சை நிறுத்திக்கொண்டு, ''கடிகாரம் யாரிடமாவது இருக்கிறதா? மணி என்ன?'' என்று அவர்கள் நம்மைக் கேட்கும்பொழுது, ''கடிகாரம் இல்லை. காலண்டர் இருக்கிறது'' என்று சொல்லத் தோன்றுகிறது.

ரேடியோ வந்த பிறகு பேச்சு அதிகமாகிவிட்டது. ''இப்பொழுது ஸ்ரீமான் கோடை இடி சங்கநாதன் அவர்கள் 'மௌனத்தின் மேன்மை' என்பதைப்பற்றிப் பேசுவார்'' என்று அறிவிப்பாளர் சொல்லும் பொழுது நம் கை நம்மை அறியாமலேயே ரேடியோவை மூடிவிடுகிறது. மறுபடியும் சற்று நேரம் கழித்து ரேடியோவைத் திருப்பும் பொழுது '....அவர்களின் பேச்சு இத்துடன் முடிவடைந்தது' என்பதைக் கேட்டு அளவிலா மகிழ்ச்சி அடைகிறோம் அல்லவா?

பேசுவதிலே ஒவ்வொருவருக்கும் ஒரு வழக்கம் உண்டு. சிலர் அடிக்கடி 'வந்து' போடுவார்கள். 'நான் வந்து சினிமாவிற்குப் போனேன். அங்கே வந்து ராமனைப் பார்த்தேன். அவன் வந்து....' என்று வந்துகொண்டே இருப்பார்கள். சிலர் 'நான் அவனிடம் எவ்வளவோ சொன்னேன். என்ன, நான் சொல்றது! அவன் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. என்ன நான் சொல்றது..!' என்று பேசிக்கொண்டே போவார்கள். இன்னும் இதுபோல எத்தனையோ ரகம்.

என் நண்பர் ஒருவர், பேசும் பொழுதெல்லாம் நம் விலாப் பக்கத்தில் ஒரு குத்து, அல்லது முதுகில் ஒரு தட்டு வாயிலிருந்து எச்சில் மழை வேறே. அவர் பேசும் பொழுதும் நான் சற்று விலகியே தான் நிற்கவேண்டும்.

'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்கிறார்கள். சிலர் பெருமையடித்துக்

கொள்வதில்லையா, 'சார், நான் மனத்திவிருப்பதை அப்படியே மறைக்காமல் சொல்லிவிடுவேன். சிலரைப் போல் மறைத்து வைத்துப் பேசத் தெரியாது' என்று? ஆனால் இதில் உண்மை என்ன தெரியுமா? இவர்களின் ஒளி மறைவில்லாமையெல்லாம் மற்றவர்களைக் குறை கூறுவதில்தான். இவர்களைப்பற்றிய நிஜ அபிப்பிராயத்தை நாம் வெளியிட்டால் அவர்களுக்குப் பிடிக்காது!

மேலும், பட்டவர்த்தனமாக எப்படி சார் பேசமுடிகிறது! இதை எழுதும் சமயம் அரட்டைக் கல்லிகிட்டு வருகிறான். 'என்னடா சனியன்' என்று மனசில் தோன்றுகிறது. ஆனால் வாய் 'ஏண்டா அப்பா கிட்டு, சௌக்கியமா?' என்று கேட்கிறது.

பேச்சை மூச்சோடு சேர்க்கிறார்கள்.

'எங்கள் தந்தையர் நாடென்ற [பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'

என்கிறார் பாரதியார். 'பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறான்' என்கிறோம். கடைசி காலத்தில் மூச்சுப் பிரியும்பொழுது 'கிருஷ்ணா, ராமா' என்று வாயிலிருந்து ஒரு நல்ல வார்த்தை வராதா என்று பாட்டி எதிர்பார்க்கிறாள்.

ராமாயணத்து ராமனை 'ஒரு வில், ஒரு பத்தினி, ஒரு வார்த்தை' என்று பாடியிருக்கிறார் தியாகையர். சொன்ன சொல் தவறாதவனும் அவன். பக்கத்து வீட்டு ரகுபதியும் தான் என்னிடம், 'மனுஷனுக்கு வார்த்தை ஒன்று இருக்கவேண்டும் சார். என்னிடம் பேச்சு இரண்டில்லை. இதை அடுத்த மாதம் கொடுத்து விடுகிறேன்' என்று சொல்லிவிட்டுப் பத்து ரூபாய் கடன் வாங்கிச் சென்றான். ஒரு வருஷம் ஆகிறது. இன்னமும் பணத்தைக் கொடுக்கப்போகிறான்!

புருஷன் - மனைவி, மாணவன்-உபாத்தியாயர், குமாஸ்தா-மானேஜர், தொழிலாளி - முதலாளி ஒவ்வொருவர் பேச்சும் தனி நடை, தனி அழகு!

பேச்சு வாய் வழியாகத்தான் வரவேண்டுமென்பது இல்லை. இளம் கணவன்-மனைவியரது கண்களே சம்பாஷிக்கின்றனவாம்!

ஆனால் பேச்சில் பெண்களை மிஞ்ச முடியாது என்பதுதான் (ஆண்களின்!) பொது அபிப்பிராயம்! அப்பப்பா, நான்கு ஸ்திரீகள் சேர்ந்துவிட்டால், மீன் சந்தை எல்லாம் கெட்டது, போங்கள். இடி விழுந்தால்கூடக் கேட்காது. தங்களிடம் வந்து 'சள சள' என்று பேசி உபத்திரவம் செய்யும் ஸ்திரீகளிடம் சில டாக்டர்கள் எப்படிப் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுகிறார்கள் தெரியுமா? 'நாக்கை நீட்டுங்கள் அம்மா' என்று சொல்லிவிட்டு, பிரிஸ்கிரிப்ஷன் எழுதுவதையோ, மருந்து சேர்ப்பதையோ கவனிக்கிறார்கள். பெண்களுக்கே நாக்கு நீளம் போலும். என் சகோதரி இருக்கிறாளே, ஓர் உதாரணமே போதும்!

'ஓகோ அப்படியா சமாசாரம். இருக்கட்டும்' என்ற சப்தம் கேட்டுத் திரும்பினேன். என் சகோதரி கோபத்துடன் நான் எழுதுவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

"ஆமாம், நீ பெரிய எழுத்தாளன். நாங்கள் பெண்கள், அசடுகள். இல்லையா? . . ம்" (கண்ணீர்ப் பிரயோகம்).

"அட அசடே சும்மா வேடிக்கைக்குத்தானே எழுதினேன்?"

"நல்ல வேடிக்கை! நீ உன் சிநேகிதர்களுடன் அரட்டையடிப்பது ஞாபகத்தில் இருப்பதில்லையோ?"

அவளைச் சமாதானம் செய்வதற்கு என் பேச்சு சாமர்த்தியம் எல்லாவற்றையும் உபயோகிக்க வேண்டியிருந்தது.

"போதுமடா உன் பேச்சு. நிறுத்து" என்று நீங்கள் சொல்வது காதில் விழுகிறது. இதோ நிறுத்திவிட்டேன் என் (அதிகப்) பிரசங்கத்தை!



# லீடர் மணி

'ஆர்வி'

"எல்லாம் அப்புறம் சொல்றேன். வா, முதல்லே இங்கேயிருந்து போவோம்!" என்றான் மணி.

"இரு; இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லிவிட்டு சந்துரு வியப்புடன் குப்புசாமியைப் பார்த்தான்.

"தம்பி! நீ எங்கே வந்தே? உனக்குத் தெரிஞ்ச பையனா இந்த முராரி?" என்றான் குப்புசாமி.

சந்துரு திரும்பித் திரும்பிப் பார்த்தான். "முராரியா? அது யார் அது முராரி! இந்த மணியையா சொல்றே? இவன் பேரு முராரி இல்லையே!" என்றான்.

"முராரியில்லையா?" என்று வாயைப் பிளந்தான் குப்புசாமி. பிறகு, "பின்னே. .இவனே முராரின்னு சொன்னானே ராத்திரி? அதனாலேதானே...நான்..." என்று சொல்லிக் கொண்டே குப்புசாமி அவசர அவசரமாகத் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை வெளியிலே எடுத்தான்.

இதற்குள் கீழ்த்திசையிலே கதிரவன் ஒளி கிளம்பிவிட்டது. குப்புசாமி அந்தக் காகிதத்தில் இருந்த படத்தைப் பார்த்துவிட்டு மணியையும் உற்றுப் பார்த்தான். பார்க்கப் பார்க்க அவனுடைய முகத்தில் அசட்டுக் களை வழிந்தது. "சரிதான்; நான்தான் ஏமாந்துட்டேன். ராத்திரியிலே எனக்கு ஒண்ணும் சரியாத் தெரியலே..இப்பல்ல விஷயம் புரியுது! நம்பளுக்கே கடுக்காக் கொடுத்திட்டானே இந்தத் தம்பி!" என்று அசடு வழியக் கூறினான் குப்புசாமி.

சந்துருவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. மணிக்கும் சிரித்தால் தேவலை போலிருந்தது. பிறர் ஏமாறுவதிலேதான் மனிதனுக்கு என்ன திருப்தி!

"சரி; நீ எங்கே இங்கே இந்தக் காலை வேளையிலே புறப்பட்டு வந்தே? நீ மட்டும் இப்ப வராமே போயிருந்தா, இந்தப் பையனைக் கொண்டுபோய்ப் போலீஸ் ஸ்டேஷனில் அடைச்சிருப்பேன்!" என்றான் குப்புசாமி.

"சரியாய் போச்சு; நான் இவனைக் கண்டு பிடிக்கிறதுக்காகத்தான் உங்கிட்டே சொல்லிட்டுப் போக வந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாப்பலே ஆயிட்டுது கதை! நீ ஏமாந்ததும் ஒரு விதத்திலே பருத்தி புடைவையாக் காய்ச்சதுபோல ஆயிட்டுது" என்று பழமொழிகளாக அடுக்கிச் சந்தோஷப்பட்டான் சந்துரு.

கூடியிருந்தவர்களுக்கு இந்தச் சம்பாஷணை ஆச்சரியமாயும் அதே சமயத்தில் ஏமாற்றமாகவும் இருந்தது. ஒவ்வொருவராகச் சுவாரஸ்யமில்லாமலே கலைந்து செல்லத் தொடங்கினார்கள்.

மணியினுடைய பயம், கோபம், துன்பம், துயரம் எல்லாம் உடனே மாயமாய்ப் பறந்து போய்விட்

டன. ''என்னைத் தேடிக்கொண்டு தானா வந்தாய், சந்துரு?'' என்று பெருமையோடு கேட்டான். முதல் நாளிரவு நடந்தவற்றைக் கேட்டு, சந்துரு விழுந்து விழுந்து சிரித்தான். அந்தக் கரி மூட்டை அறையிலே, தானே நிற்பதைப் போல நினைத்துக்கொண்டு வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரித்தான். அவ்வளவு தத்ரூபமாக மணி வர்ணித்ததைக் கண்டு, குப்புசாமிக்குக்கூடச் சிரிப்புத்தான் வந்தது.

''போக்கிரி! போக்கிரி!'' என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக்கொண்டேயிருந்தான்.

மூவரும் பிறகு குப்புசாமியின் வீட்டுக்குப் போனார்கள். ''முராரி என்கிற பையனைக் காணவில்லை என்று எங்களுக்குப் புகார் வந்தது. நேற்று அந்தப் பையனுடைய அப்பாவே நேரில் வந்துவிட்டார். அந்தப் பையனுடைய அங்க அடையாளங்கள், குணம் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, அவனைக் கண்டுபிடிக்க நான் புறப்பட்டேன். பனகல் பார்க் அருகில் வரும்போது, 'முராரி, முராரி' என்று யாரோ ஒரு சிறு பெண் கூப்பிடுவது கேட்டது. உடனே அதற்குள் நுழைந்தேன். குரல் வந்த திசையாகவே பதுங்கிப் பதுங்கிப் போனேன். மெதுவாகப் போய், பையனைக் கப்பென்று பிடித்துவிடலாம் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் நான் உள்ளே சுற்றிப் போவதற்குள் பார்க்கில் பேச்சுக் குரலே கேட்கவில்லை. யாரோ ஒரு பையன் மட்டும் புல் தரையில் படுத்துப் பதுங்கிக்கொண் டிருப்பதைக் கண்டேன். அவன்தான் இந்தப் பையன் மணி. இவனுடைய வாய் ஏதோ 'மனு-முராரி' என்று முணுமுணுத்துக்கொண்டேயிருந்தது. கிட்டே போனேன். பெயரைக் கேட்டேன். 'முராரி' என்று சொன்னான்....''

''நான் முராரி என்றா சொன்னேன்!'' என்று நடுவில் கேட்டான் மணி. அவனுக்கு என்ன சொன்னோம் என்பதுதான் நினைவில் இல்லையே!

''முராரி என்றுதான் சொன்னே நீ! இல்லாட்டிப்போனா நான் ஏன் உன்னைப் பிடிச்சு இழுத்துக்கொண்டு வர்றேன்!'' என்றான் குப்புசாமி.

''நீ இழுத்துக்கொண்டு வந்தது நல்லதாகப் போச்சு. இல்லாவிட்டால் மறுபடியும் இவனைத் தேடிக் கண்டுபிடிப்பது எங்கே?'' என்று கூறினான் சந்துரு.

பிறகு மணியின் வரலாற்றையெல்லாம் சந்துரு குப்புசாமிக்கு எடுத்துச் சொன்னான். மணி தலையைக் குனிந்துகொண்டே உட்கார்ந்திருந்தான். குப்புசாமிக்குத் திடீரென்று கண்கள் பிரகாசமடைந்தன. ''தம்பி! கவலைப்படாதே. நானும் அவனுக்கு ஏதாவது ஓர் இடம் கிடைக்குமா என்று பார்க்கிறேன். அதுவரையிலே அவன் எங்க வீட்டிலேயே இருக்கட்டும்'' என்றான்.

மணிக்கு முதலில் இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால் குப்புசாமி சந்துருவின் அப்பாவிடம் ஒரு காலத்தில் வேலை செய்தவன் என்பதும் மிகவும் தங்கமானவன் என்பதும் தெரியவே சரி என்று சம்மதித்தான்.

''அப்பா! ஒரு பெரிய கவலை விட்டது!'' என்று சொல்லிவிட்டு, சந்துரு அவர்கள் இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு போனான். போகும்போது, ''நான் அப்புறம் வந்து பார்க்கிறேன். மறுபடியும் எங்கேயாவது எங்களைத் தேடும்படி வைத்துவிடாதே!'' என்று மணியிடம் சொல்லிவிட்டுப் போனான்.

''நான் பாத்துக்கறேன், போ!'' என்றான் குப்புசாமி. ஆள் பார்ப்பதற்கு முரடனாகியிருப்பதுபோலவே அவனுடைய அன்பும் முரட்டுத்தனமாகத்தான் இருக்கும் போலிருந்தது. அன்புக்காக உயிரைக் கொடுக்கக்கூடிய முரட்டு அன்பு.

மணிக்கு ஒரு நொடியில் அவனிடம் மதிப்பும் அன்பும் ஏற்பட்டுவிட்டன.

''இது என்ன உங்களுக்குச் சொந்த வீடா?'' என்று கேட்டான் குப்புசாமியைப் பார்த்து.

"சொந்த வீடு மாதிரிதான். எனக்கு ஊரில் உள்ள எல்லாருமே சொந்தக்காரங்கதான்!" என்றான் குப்புசாமி.

அதற்குமேல் ஒன்றும் கேட்காமல் இருந்து விட்டான் மணி. குப்புசாமி அவனைப் பார்த்து, "சரி, தம்பி! நீ போய் நல்லா உடம்பைக் கரி போகத் தேச்சுக் குளி! அதுக்குள்ளே வெளியிலே போயிட்டு நான் திரும்பிடறேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் சென்றான் குப்புசாமி.

மணி குழாயடியில் போய் உட்கார்ந்துகொண்டு வெகுநேரம் குளித்தான். அவன் குளித்துவிட்டு மேல் சட்டையைப் பிழிந்து தலை துவட்டிக் கொள்ளும்போது, "தம்பி, மணி! இந்தா! அதையெல்லாம் வெளியிலே காயப் போட்டுட்டு, இந்தப் புது டிரஸ்களைப் போட்டுக்கொள்!" என்றான்.

மணிக்கு இதைக் கண்டதும் ஒரே அதிசயமாகவும் திகைப்பாகவும் இருந்தது. 'அரை மணிக்குள்ளே மூன்று செட் உடுப்புகளா? எல்லாம் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன!' என்று பிரமித்துப் போனான்.

காலை வேளையிலே நரி முகத்தில் விழித்தால் நல்லது என்பார்கள். அவன் கரி முகதத்தில் அல்லவா அன்று விழித்தான்? கரி முகத்தில் விழித்தாலும் நல்லதுதானோ?

* * *

"குப்புசாமி! குப்புசாமி!"

தெரு வாசலிலிருந்து யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. மணி அப்போது சரித்திரக் கதைப் புத்தகம் ஒன்றைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். நல்ல வெயில் நேரம். எங்கேயோ மாமரத்துக் குயில் ஒன்று, "கூ கூ!" என்று கூவியது. அதையே சுகமான தாலாட்டுப் பாட்டாகக் கொண்டு குப்புசாமி மரக்கட்டிலில் படுத்துக் காடாந்தகாரமாகக் குரட்டை விட்டுக்கொண்டிருந்தான். மத்தியான்ன வேளைகளில் குப்புசாமிக்கு எப்போதுமே கொஞ்சம் ஒய்வு உண்டு. அப்பாடா, என்று அவன் கட்டிலில் படுத்துக்கொள்வதுதான் தெரியும். கண்



செக்கோஸ்லோவியக் குழந்தைகள் மத்தியில் ஜவாஹர்.

மூடிக் கண் திறப்பதற்குள், 'ஆவ்' என்று ஒரு கொட்டாவி வெளிப்படும். அடுத்த கணமே, 'குர்ர்..' என்று ஒரு சத்தம் கண்ணீர்க் கொப்புளம் வெடிப்பது போலக் கேட்கும். அதற்கும் அடுத்த நிமிஷத்தில், 'குர்.. குர்ர்.. புர்..புர்ர்..' என்று ஓட்டை மோட்டார் கார் கிளம்புவதற்கு அமுர்பு செய்வதுபோலக் கடகடவென்று சத்தம் எழும்பும். அக்கம் பக்கத்தில் ஒரு பிராணி உட்கார்ந்திருக்க முடியாது. குறட்டை விரட்டு விரட்டு என்று ஓட ஓட விரட்டியடிக்கும். நெல் மிஷினுக்குள் உட்கார்ந்திருப்பது போலத்தான். 'அட இப்போதுதானே மனுஷன் படுத்தான்; அதுக்குள்ளேயா இப்படிக் குறட்டை விடுவான்!' என்று மணி முதல் நாள் அதிசயப் பட்டான். இரண்டாம் நாள் ஆச்சரியமாக இருந்தது. மூன்றாம், நான்காம் நாள் எல்லாம் அப்படியேதான் இருந்தது. பிறகு வழக்கமாகவும் சகஜமாகவும் ஆகிவிட்டது. இனிமேல் குறட்டை விடாத இடத்தில் இருக்கக்கூட முடியாது போலாகிவிட்டது. குறட்டைச் சத்தம் இருந்தால்தான் அவனுக்கு யாரோ உதவியாக இருப்பதுபோல் இருந்தது. குரங்கு சீறுவதுபோலவும் பெருச்சாளி உறுமுவது போலவும் பலவிதமான தொனியுடன் குப்புசாமி குறட்டை விடுவதே ஒரு தனி அழகு. அந்த அழகைப் பார்த்து ரஸித்தாலும் போதாது; கேட்டு ரஸித்தாலும் தீராது. அதனால்தான் மணி சரித்திரக் கதை

ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு கஜினி முகம்மதின் படையெடுப்பையும் சிவாஜியின் சாகஸச் செயல்களையும் படித்து வியந்துகொண் டிருந்தான்.

வீட்டிலே அந்தப் பாட்டிதான் பின்கட்டில் இருந்தாள். வாசலில் யார் வந்து எதைப் பெயர்த்தாலும் அவளுக்குக் கண்ணும் தெரியாது; காதும் கேட்காது. அந்தப் பாட்டியின் புதல்வர்தான் குப்புசாமிக்கு இடம் கொடுத்து, தன் சகோதரனைப் போலக் கருதி வந்தார். அவர் காலையில் சாப்பிட்டுவிட்டு, ஆபீஸுக்குப் போனால் இரவு ஏழு மணிக்குத்தான் போர்முனைக்குப் போய் விட்டுத் திரும்பும் சோல்ஜரைப் போல அடி இடி பட்டுத் திரும்புவார். சில நாளைக்கு ரத்தக் காயத்துடனும் திரும்புவதுண்டு. சென்னையில் பஸ் பிரயாணம் செய்பவர்கள் இதற்கெல்லாம் தயாராகத்தானே இருக்கவேண்டும்! அவருடைய மனைவி, குழந்தைகள் எல்லாரும் அவர் ஆபீஸுக்குப் போகும்போது வெளியிலே கிளம்பிவிடுவார்கள். அவர் ஆபீஸிலிருந்து திரும்பிவரும்



போதுதான் வருவார்கள். அதாவது குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்விடுவார்கள். மனைவியோ மூன்றாவது தெருவிலிருந்த தன் சகோதரன் வீட்டுக்குப் போய் விடுவாள். மத்தியான்னத்தில் குழந்தைகள் அங்கேயே போய் டிபன் பண்ணி விடுவார்கள். மணிக்கு இந்த ஊர் வழக்கமே விசித்திரமாக இருந்தது. குப்புசாமி தூங்கி எழுந்து, தன் வேலைக்குப் போய்விட்டால் வீட்டில் யார் வேண்டுமானாலும் சுலபமாகப் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போய் விடலாம். கேள்வி முறையே கிடையாது. ஆனால் அப்படி ஒன்றும் இதுவரையில் நேர்ந்ததாகத் தெரியவில்லை. மணிக்கு அதுதான் ஆச்சரியமாக இருந்தது. ஆள் கூட்டம் இருக்கிற வீட்டிலேயே பகல் நேரத்தில் கொள்ளையடிக்கும் இந்தப் பட்டணத்தில் இந்த வீட்டை எப்படிச் சும்மா விட்டு வைத்திருக்கிறார்கள் என்று அவன் எண்ணினான். அப்புறம் தான் குப்புசாமி ஒரு ஸி. ஐ. டி. என்பது நினைவு வந்தது. அவன் பெயரைத் தெரியாதவர்கள் யாரும் இல்லை. போக்கிரிகளுக்கும் காலிகளுக்கும் அவன் பெயர் சிம்ம சொப்பனமாக இருந்தது. அப்படியிருக்கும்போது எவன் அந்த வீட்டில் நுழையத் துணிவான்? வெளியில் குப்புசாமியுடன் கூட நடந்து போவதே மணிக்குப் பெருமையாக இருந்தது. தெருக்களில் இருக்கும் ரிக்ஷா வண்டிக்காரர்கள், சோம்பேறிகள் எல்லாரும் குப்புசாமியைக் கண்டதும் எழுந்து கும்பிட்டு வணங்கினார்கள். பெரிய மனிதர்கள் எல்லாரையும் குப்புசாமி பார்த்துச் சிரித்து, மரியாதையாக வணக்கம் செலுத்தினான். சொல்லப் போனால் குப்புசாமியைத் தெரியாதவர்களே அந்த வட்டாரத்தில் இல்லை. எல்லாரும் குப்புசாமியை அறிந்திருந்தார்கள். குப்புசாமியோடு இரண்டு மூன்று நாட்களாகக் கூடவே செல்லும் மணியையும் சிலர் அறிந்து கொண்டார்கள்.

அவ்விதம் தெரிந்தவர்கள் யாராவது அழைக்கிறார்களோ என்னவோ என்றுதான் மணி ஓடிப் போய்க் கதவைத் திறந்துகொண்டு வந்து பார்த்தான்.

வாசலில் ஒரு கார் நின்றுகொண்டிருந்தது. அந்தக் காரில் வந்தவரைப்போல ஒரு பெரியவர் கதவருகில் வந்து நின்றுகொண்டிருந்தார். அவர் மணியைப் பார்த்ததும் ஒரு புன்முறுவலுடன், ''குப்புசாமி இருக்கானா? கும்பகர்ணன்தான் இருக்கானா?'' என்றார்.

''குப்புசாமிதான் இருக்கார். கும்பகர்ணன்னு யாரும் இந்த வீட்டிலே இல்லையே!'' என்றான் மணி.

அதைக் கேட்டு அந்தப் பெரிய மனிதர் சிரித்தார்; ''சரி; போய், அருணஜடை என்கிறவர் தேடிண்டு வந்திருக்கிறதாகச் சொல்லு, அவனிடம்'' என்றார்.

மணி அவரை நன்றாகப் பார்த்தான். பளபளவென்று மின்னும் வழுக்கைத் தலை; சிவந்த மேனி; சுமாரான உயரம். பெரிய மனிதருக்குரிய பார்வை; பேச்சு; வெள்ளை வெளேரென்று இருந்த மெல்லிய சன்னக்கரை வேஷ்டியைப் பஞ்சக் கச்சம் வைத்துக் கட்டியிருந்தார். வழுக்கைத் தலையாயிருப்பவருக்குப் பெயர் அருணஜடை!

மணி உள்ளே போய், குப்புசாமியை உலுக்கி எழுப்பினான். குறட்டை குபுக்கென்று கேள்விக் குறியுடன் நின்றது. கண்கள் திறந்து கொண்டன.

''யாரோ அருணஜடையாம்; உங்களைத் தேடிண்டு வந்திருக்கார்!'' என்றான் மணி.

''யாரு? என்னது? எந்த அருணஜடை? ராவ் பகதூர் அருணஜடையா? எப்ப வந்தார்? எங்கே..'' என்று அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தான் குப்புசாமி.

இப்போதுதான் ராவ் பகதூர், பகல் பகதூர் என்கிற பட்டமெல்லாம் கிடையாதாமே என்று எண்ணிக் கொண்டே மணியும் அவனைப் பின்தொடர்ந்து வந்தான்.

(தொடரும்)


எங்கேயடி அவர்! போய் உடனே அழைத்து வாடி!
அவரைக் காண வில்லை!
காணவில்லையா? நானே பார்க்கிறேன்
பூதூர் தலைகள் இருக்கு மிடத்துக்கு வந்து காமரைத்தேடுகிறாள்! காமரைக் காணவில்லை. ஆனால் . . . . . . . . . . .
அன்பே! பூதூர்!
ஆ! எங்கே இருக்கிறீர்கள்?
இதோ!
நீரா? நீரா என் காமர்! நீர் ஜோஸ்யன் அல்லவா?
காமர் ஜோஸ்யனுடைய ஆடைகளைக் களைந்து எறிந்து விட்டு . . . . . .
பூதூர்! எங்கே என்னைப் பார்!


காமர்!
பூதூர்!
மன்னரிடம் சொல்கிறேன்
அரசே! ஆபத்து! பூதூர் அந்த ஜோஸ்யனிடம் மயங்கி விட்டாள்!
அப்படியானல் நானே வருகிறேன்
பூதூர்!
தந்தையே! இவர்தான் நான் கனவில் கண்டவர்!
வாலிபனே! நீ யார்?
அது பெரிய கதை! நிதானமாகச் சொல் கிறேன்!
அரசே! கலீபாவின் மைந்தன் நான்! காமர் என்பது என் பெயர்...

(தொடரும்)

# கண்ணன் நிருபர்கள்

## சென்னை

1. தே. பார்த்தசாரதி, சென்னை - 4.
2. பி. வி. கிரி, சென்னை - 3.
3. வ. ந. ராமலிங்கம், சென்னை - 17

## செங்கல்பட்டு

4. பி. டி. குப்புசாமி, வில்லிவாக்கம்.
5. கோவிந்தன், காஞ்சீபுரம்.

## தெ. ஆ.

6. சீதாராமன், திட்டக்குடி.
7. எஸ். கிருஷ்ணமூர்த்தி, மேல்குமாரமங்கலம்.
8. டி. என். ராமலிங்கம், திண்டிவனம்.
9. வி. சந்திரசேகரன், திருப்பாதிரிப்புலியூர். (கடலூர் N. T.)
10. எம். எஸ். செல்வராஜ், நாகலாபுரம், திண்டிவனம்.
11. எ. அப்துல் ஹை, அரகண்டநல்லூர், திருக்கோயிலூர்.
12. ஆர். சிவராமகிருஷ்ணன், பாண்டிச்சேரி.

## வ. ஆ.

13. பி. அப்துல்லா பாஷா, பேர்ணம்பட்டு.

## தஞ்சை

14. ஆர். திருஞானசம்பந்தம், கடுவங்குடி.
15. ஆர். விசுவநாதன், சீகாழி.
16. ஜே. எம். சாலி, எறவாஞ்சேரி.

## ராமநாதபுரம்

17. எம். சுப்பிரமணியன், காரைக்குடி.
18. பழ. ஏகப்பன், புது வயல்.
19. ஏ. முத்து ஆறுமுகம், கீழச்சிவல்பட்டி.
20. ஆர். பிரேமா, தேவகோட்டை.
21. அ. புளுகாண்டி, ராஜபாளையம்.
22. சொக்கலிங்கம், நடராஜபுரம்.

## மதுரை

23. வடுகை மாது, வடுகப்பட்டி.

## திருச்சி

24. எ. பெரியசாமி, அந்தநல்லூர்.
25. ஆர். ஸ்ரீநிவாஸன், தெப்பக்குளம், திருச்சி.
26. கா. ஸ்ரீதரன், பெரம்பலூர்.
27. வி. இளங்கீரன், புத்தூர்.
28. வி. சுப்பிரமணியன், பொன்மலை.

(முழு விலாசம் எழுதியனுப்பவும்)

## கோயம்புத்தூர்

29. பி. ஏ. வேங்கடாசலம், பொள்ளாச்சி.
30. எஸ். நாகூர் சாமி, கவுந்தப்பாடி.
31. த. பாலு, ஈரோடு.

## சேலம்

32. ஆர். சுப்பிரமணியன், வேலூர். (சேலம்)
33. வி. கோகுல நாதன், நாமகிரிப்பேட்டை.
34. வி. ஸ்ரீநிவாஸன், சஞ்சீவிராயன் பேட்டை. (சேலம்)
35. ஆர். அமிருதலிங்கம், இளம்பிள்ளை.
36. எஸ். சையது உஸ்மான், ராசிபுரம்.

# எங்கள் பகுதி

## * எண்ணம் பறிக்கும் கண்ணன்

அண்ணனும் தங்கையும் கூடி விளையாடும் காட்சி 1-6-55 இதழ் கண்ணனுக்குக் கவர்ச்சி அளிக்கிறது.

'குண்டுச் சீமா' எல்லோரையும் சிரிக்கச் செய்து கொண்டே வளர்ந்து வருகிறுன்; 'குண்டுச் சீமா'வை நான் அதிகமாகப் புகழ்ந்து விட்டால் அவனுக்கு, அவன் பாட்டி 'திருஷ்டி' கழித்தாலும் கழித்து விடுவாள். அந்த வம்புக்குப் போவானேன்!

'செம்மல்' எழுதியுள்ள 'நல்ல பொம்மை' என்ற பாடல் செம்மையாக இருக்கிறது.

இனிய அழகான நடையில் எழுதப்பட்டுள்ள 'குல வித்தை' பாராட்டும்படி அமைந்திருக்கிறது. கதையைச் சிறிது சுருக்கியிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

'பெருந்தன்மை'யும் 'மன மாற்ற'மும் சுமாராக இருக்கின்றன. 'சண்டை தீர்ந்தது' என்பது கதையாக இல்லை!

'தம்பி'யின் 'பால சோதிடம்' வெகு அருமை! இம்மாதிரி ஹாஸ்யக் கட்டுரைகள் 'கண்ண'னில் அடிக்கடி வெளிவர வேண்டும்.

'கேளுங்கள், சொல்கிறேன்!' என்ற பகுதி வராத குறையை நிவர்த்திக்கிறது 'காதொலிக் கருவி' என்ற கட்டுரை.

'லீடர் மணி,' 'ஜக்கு'வுக்கோ, 'அசட்டுப் பிச்சு'வுக்கோ சிறிதும் இளைத்தவனுக இல்லை.

'பாரசீக ரோஜா'வைப் பாராட்டாமலிருக்க முடியாது. 'குணம் நாடி, குற்றம் நாடி மிகை நாடிக் கொள்ளும்' பண்பு, 'எங்கள் பகுதியில்' எழுதுபவர்களுக்கு வேண்டும்.

வண்ண முகம் காட்டி எங்கள் எண்ணம் பறிக்கும் கண்ணனைக் கண்டு உள்ளம், கொண்டலைக் கண்ட மயிலெனவும், மகுடியைக் கண்ட நாகமெனவும் ஆடுகிறது.

'கண்ணன்' தரும் இனிமை என்றும் தெவிட்டாதிருக்கட்டும்.

— மு. கிருஷ்ணராஜன், திருப்பத்தூர் (வ. ஆ.)

---

* ரூ. 3 பரிசு பெற்ற கடிதம்

## ஒரு யோசனை

கண்ணனில் எங்கள் பகுதி என்ற விமரிசனப் பகுதியை ஆரம்பித்த நாள் முதல் அப்பகுதியை விரும்பிப் படித்து வருகிறேன். மாணவ மாணவிகளுடைய விமரிசனத் திறமையைப் பாராட்டுகிறேன்; என்றாலும் அவர்களுடைய விமரிசனத் திறமையை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஒரு யோசனை கூறுகிறேன். இஷ்டமிருந்தால் கடைப் பிடிக்கலாம்.

'அந்தக் கதை பலே! இந்தக் கதை சபாஷ்! பேச்சாளர் கதை பிரமாதம்! உணர்ச்சி என்ற கதை பரவாயில்லை. கெட்டிக்காரி என்ற கதை மோசம். மகள் கிடைத்தாள் சுமார்' என்றெல்லாம் ஒரே வரியில் விமரிசனம் செய்வது அவ்வளவு நல்லதல்ல.

விமரிசன கர்த்தாக்கள் தங்களுக்குப் பிடித்தமான ஏதாவது ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு அதைப் பற்றி விமரிசனம் செய்ய வேண்டும். கதை எப்படிப் பட்டது? கதையை ஆசிரியர் எப்படி முடித்திருக்கிறுர்? எப்படி முடித்திருக்கலாம்? இது போன்ற விஷயங்களை விளக்கமாக எழுத வேண்டும். இப்படிச் செய்வதால் எழுதுபவர்களுக்கு மிகுந்த பலன் ஏற்படும்.

இதுவே என் யோசனை. ஏற்றுக் கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் பரவா யில்லை.

தெ. குமாரசாமி, பணகுடி.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன்

## அதிருஷ்ட எண்கள் விளக்கம்

இதோ பக்கத்தில் ஓர் தொடர் எண் (Serial number) அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். இந்த இதழுக்குரிய அதிருஷ்ட எண்கள் 1-8-55-ம் தேதி இதழில் பொருளடக்கத்திற்குப் பக்கத்தில் வெளியாகும். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

**பரிசு விவரம்**

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 15/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 10/- |
| மூன்றும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா) | ரூ. 5/- விதம் |
| நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா) | ரூ. 2/- விதம் |
| மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு | ரூ. 50/- |

**உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்**

**கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்**

# பேனா நண்பர்கள்

1. A. சங்கரகிருஷ்ணன், 1/131. ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-4.
2. S.R. கிருஷ்ணமூர்த்தி, C/o K.V. ராகவன், B.A., 85. அன்சாரி வீதி, ராம் நகர், கோவை.
3. S. J. சுந்தரராஜன், 54. வடக்கு வேலித் தெரு, மதுரை.
4. V. B. M. ஷம்சுதீன், ஸாஹிரா கல்லூரி விடுதி, மாதுளை, இலங்கை.
5. K. R. பழனிச்சாமி, 5-ஆம் படிவம், காந்தி கல்வி நிலையம், சூகலூர், கோவை ஜில்லா.
6. N. செல்வராஜா, 13. நாச்சிமார் கோயில் தெரு, யாழ்ப்பாணம், இலங்கை.
7. வளர்மதி, 12/341. வெறைடி ஹால் ரோட், கோயம்புத்தூர்.
8. V. T. சுப்பிரமணியன், 35. கஸ்துமேட்டுத் தெரு, குயப்பேட்டை, வேலூர். (வ. ஆ.)
9. R. S. சங்கரலிங்கம், 30. மந்தைவெளி பெரிய தம்பி முதலித் தெரு, பிச்சனூர், குடியாத்தம்.
10. G. வைதீசுவரன், S/o S. V. கணபதி, சூகலூர், (வழி) ஈரோடு.

(Regd. as News paper in Ceylon.) Reg. No. M. 55

# விற்பனையாகின்றன!

## கருத்தைக் கவரும்

# இரு கண்ணன் வெளியீடுகள்

★ **அசட்டுப் பிச்சு** - ஆசிரியர்: ஆர்வி விலை ரூ. 1

ஏ. பி. - என்றால் ஐயாசாமி அவர்களுடைய மகன் பிச்சும
என்பவனைத்தான் குறிக்கும். ஆனால் ஏ - என்றால் அசடு. பி - என்(
பிச்சு என்று ஆகி, மற்ற ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் அவனை அசட்
பிச்சுவாக்கிவிட்டார்கள். அவனுடைய தோற்றம், உடை, பே
இவற்றிற்கும் அவனுடைய பெயருக்கும் அடடா, எத்தனை பொருத்
ஆனால், அவனுடைய அதிருஷ்டம் இருக்கிறதே, அதை மட
யாராலும் மாற்றவே முடியவில்லை. பிரிஞ்ஜால், ஸ்ரீகாந்த், புலிக்ெ
குடுமி வைத்தி இவர்களுக்கு எல்லாம் அசட்டுப் பிச்சு ஒரு ெ
புதிராகவே ஆகிவிட்டான். பெரிய பெரிய திருட்டுக் கேஸ்களையெல்
அசட்டுப் பிச்சு அநாயாசமாகக் கண்டுபிடித்துவிடுகிறான். காணா
போன பெண், அகப்படாத பக்காத் திருடன் இவர்களையெல்ல
பிடித்துக் கொடுத்த அசட்டுப் பிச்சு இன்ஸ்பெக்டர் குருப்ப
அபிமானத்துக்குப் பாத்திரமாகி, அதன் மூலம் நம்முடைய அபிமா
துக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகிவிடுகிறான். அருமையா
சம்பாஷணைகள்; அடுக்கடுக்கான சம்பவங்கள்; சுவையான க
போக்கு; அழகான படங்கள் - எல்லாம் நிறைந்த இனிய புத்த
அசட்டுப் பிச்சு. 128 பக்கள். நல்ல காகிதம்.

★ **ஜம்பு** - ஆசிரியர்: ஆர்வி விலை அணா

கண்ணன் வெளியீடுகளிலே பலவகையான புத்தகங்கள் உண்
பழங்காலத்துக் கட்டுக் கதைகள் உண்டு; அறிவும் நீதியும் புகட்(
தந்திரக் கதைகள் உண்டு; சரித்திரக் கதைகள் உண்டு; விஞ்ஞ
விந்தைகளையும் பெரியோர்களின் பாலியப் பருவத்து நிகழ்ச்சிகளை
கதைபோலச் சொல்லும் கட்டுரைகள் உண்டு; சித்திரங்கள் உ
சித்திரக் கதைகளும் உண்டு. அவற்றிலே இந்த ஜம்பு இந
காலத்துக் கதை. இதிலே கப்பல் வருகிறது; சர்க்கஸ் குரங்கு வருகிற
சிங்கமும் புலிகளும் வருகின்றன; அவற்றை ஆட்டி வைப்பவனு
வருகிறான். இன்ஸ்பெக்டர் வருகிறார். மோட்டாரும் மோட்டா
படகும் வருகின்றன. ரகசியக் கடிதம்கூட ஒன்று ஜம்புவுடம் வ
அகப்பட்டுக்கொள்கிறது. அதிலிருந்துதான் திகைப்பையும் வியப்பை
தருகிற இந்த அருமையான கதை தொடங்குகிறது. நடுநடுவே அழகா
படங்கள் இருக்கின்றன.

**கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு**
**தபால் செலவு தனி.**

விவரங்களுக்கு:

**கலைமகள் காரியாலயம் : : மயிலாப்பூர், சென்னை**

கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 14

15 - 7 - '55


| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| குண்டுச் சீமா | .. | 3 |
| பணப்பை | .. | 9 |
| வேலியே காய்த்தது | .. | 13 |
| இரு திருட்டு | .. | 18 |
| அற்பக் குருவி | .. | 20 |
| தில்லி திலீப் | ... | 21 |
| ஏழைச் சிறுவன் | .. | 26 |
| அருமையான சம்பவம் | .. | 28 |
| கேளுங்கள் சொல்கிறேன் | .. | 29 |
| கவியரங்கம் | .. | 32 |
| பாரஸீக ரோஜா | .. | 33 |
| லீடர் மணி | .. | 35 |
| எங்கள் பகுதி | .. | 39 |
| கண்ணன் நிருபர் | .. | 40 |
| செய்திகள் - 2 - அட்டை | | |
| கிளைக்கழகம் - 3 - அட்டை | | |
| அதிருஷ்ட எண்கள் | | |


வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## 15 - 6 - 55

## அதிருஷ்ட எண்கள்

| | | | |
|---|---|---|---|
| முதற் பரிசு | | .. | 1855 |
| 2-ஆம் பரிசு | | .. | 13073 |
| 3-ஆம் பரிசு | 1. | .. | 875 |
| | 2. | .. | 7200 |
| | 3. | .. | 8816 |
| 4-ஆம் பரிசு | 1. | .. | 9231 |
| | 2. | .. | 4158 |
| | 3. | .. | 150 |
| | 4. | .. | 12726 |
| | 5. | .. | 11897 |

ஜூன் 15-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஆகஸ்டு மாதம் 1-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினால் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

# குழந்தைகளே!

கண்ணன் தொடர்கதைப் போட்டியைப் பற்றி முன்பு எழுதியிருந்தேன். ஜூலை மாத முடிவுக்குள் தொடர்கதைகளை அனுப்பிவிடவேண்டும் என்று அறிவித்திருந்தேன். ஏராளமான பேர் எழுதுவதாகவும் எழுதிக்கொண் டிருப்பதாகவும் எழுதியிருந்தார்கள். இவ்வளவு பேர் எழுதினுல் எப்படித்தான் படித்துச் சமாளிக்கப் போகிறேமோ என்று நானும் கலங்கிக் கொண்டேயிருந்தேன். ஆனுல் இதுவரையில் வந்திருக்கும் கதைகளைப் பார்த்தால் என் கலக்கத்தைக் கண்டு எனக்கே சிரிப்பு வருகிறது. சரியாக 35 தொடர்கதைகள்கூட வரவில்லை.

தொடர்கதை எழுதுவது என்ருல் லேசா? சாதாரணக் கதை எழுதுவதே கஷ்டம். அதிலும் தொடர்கதை என்ருல் எழுதுவது அரிதான காரியந்தான். அதேபோலத்தான் எழுதியதைப் படிப்பதும். 35 கதைகளைப் பரிசிலனை செய்யக் குறைந்தது 20 நாளாவது பிடிக்கும். அதனுல் போட்டித் தேதியை மேலும் ஒத்திப்போட நான் விரும்பவில்லை. ஜூலை 31-ஆம் தேதியே கடைசித் தேதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குப் பிறகு எழுதுபவர்கள் அடுத்த போட்டி வைக்கும் போது அனுப்பலாம். இந்தப் போட்டிக்கு வந்த கதைகளை என்னைத் தவிர இன்னும் இரண்டு பேர் பரிசிலனை செய்வார்கள். அவர்கள் பெயரை இப்போது வெளியிடுவது உசிதமல்ல. போட்டி முடிவின்போது அறிவிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

மேலும் சில கண்ணன் நிருபர்கள் இப்போது நியமனம் ஆகியிருக்கிருர்கள். அவர்களுடைய பெயர்களை வேறு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறேம். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் போன்ற பெரிய நகரங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிருபர்கள் எழுதலாம். ஒவ்வொரு நகரங்களிலும் பற்பல ஊர்ப் பகுதிகள் இருப்பதால் ஒரு நிருபர் போதாது. சென்னைக்கு 12 நிருபர்களும், மதுரை, திருச்சி, கோவை முதலிய நகரங்களுக்குத் தலா 6 நிருபர்களும் சேலத்துக்கு 4 நிருபர்களும் நியமனம் செய்ய எண்ணுகிறேம். கண்ணன் நிருபர் நகரவாசியாக இருக்கவேண்டும். வயது, படிக்கும் வகுப்பு, முழு விலாசம், கிளைக்கழகம் அல்லது நண்பர்கள் அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். கண்ணன் கழக அங்கத்தினர்களாய் இருப்பவர்களுக்கே நிருபர்களாக முதல் சலுகை காட்டப்படும்.

புதுத் தொடர்கதையான குண்டுச் சீமா, முன்னரே வந்துகொண்டிருக்கும் வீடர் மணி, பாரஸீக ரோஜா இவற்றைப் பாராட்டிப் பல கடிதங்கள் வந்து குவிந்துள்ளன. உங்களுடைய அமோகமான பாராட்டுதல்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிருஷ்ட எண்களினுல் பல ஏழை மாணவர்களுக்கு நன்மை ஏற்பட்டதாகத் தெரிந்தது. இது மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அவர்களே கடிதம் எழுதிக் கண்ணனை மனமாரப் போற்றியிருக்கிருர்கள். அந்தக் கடிதங்களைப் பிரசுரிக்க இடமில்லை. மாதிரிக்கு ஒன்றிரண்டை அடுத்த இதழில் வெளியிட முயல்கிறேன்.

கண்ணனுக்குப் பல வகையிலும் உங்கள் ஆதரவு இருப்பதுபோலப் பல வகையிலும் கண்ணன் உங்களுக்குத் தொண்டாற்றி வருவான்.

—ஆசிரியர்.

# குண்டுச் சீமா

## ராஜி



### 5

அப்பாவுக்கு என்னிடம் அதிருந்து வருத்தம்தான். எங்கள் ஊர்க் கோவிலிலே வருஷந்தோறும் உற்சவம் உண்டு. உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறுமாதலால் நல்ல கூட்டம் வரும். ஆனால் அந்த உற்சவம் வருவதும் எங்கள் பள்ளிக்கூடத்தில் பெரிய பரீக்ஷை வருவதும் ஒரே சமயத்திலேதான் இருக்கும்; அதனாலே கோவில் உற்சவம் வந்தபொழுது மற்றவர்களைப் போல நான் வேடிக்கை பார்க்க முடியாது. என் வீட்டில் எல்லாருமே, ''சீமா! பரீக்ஷை படி!'' என்று இதுமாதிரி சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். நான் ஒருவர் கண்களிலும் படாமல் மெதுவாக இரவில் வேடிக்கை பார்த்துவிட்டு, சுற்றிவிட்டுத்தான் வருவேன்:

உற்சவத்தின் போது ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்குமேல் மெதுவாக என் சிநேகிதன் வைத்தியோடு வெளியே உலாவச் சென்றேன்.

என்னைப் படுக்கையிலே காணாத கீதா என் அப்பாவிடம் போய், ''அப்பா! அண்ணாவைப் படுக்கையில் காணோம். கோவிலுக்கு என்னைவிட்டுட்டுப் போயிட்டான்'' என்று கண்ணைப் பிசைந்தாள்.

''பரீக்ஷையும் அதுவுமா வெளியே சுற்றப் போயிட்டானா? நான் உன்னுடன் வரேன். சுவாமி பாத்துட்டு அவனையும் எங்கேயாவது இருந்தால் கூப்பிட்டுக் கொண்டு வரலாம்'' என்று கீதாவை அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டார் அவர். அப்பாவோடு சிறுவர்கள் யாராவது புறப்பட்டால் ஏதாவது வேடிக்கை பார்க்க முடியுமா? நேராகக் கோவிலுக்குப் போனார். சுவாமியைத் தரிசித்து விட்டு வீடு திரும்பினார்.

அப்போது, ''அப்பா! அதோ வாண வேடிக்கை நடக்கப் போகிறது. பாக்கலாமா அப்பா?'' என்றாள் கீதா.

''வாண வேடிக்கையாவது! சுவாமியைப் பார்த்தாச்சு. வாண வேடிக்கையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் வா'' என்றார் அப்பா.

''என்ன அப்பா, அண்ணாவை ஓரிடத்திலேயும் காணலையே'' என்று என்னைப்பற்றி மறந்து போயிருந்த அப்பாவைக் கிளப்பி விட்டாள்.

''ஆமாம். அவனை ஒரு இடத்திலேயும் காணல்லியே. அவன் எதையாவது விஷயமில்லாமல் பார்த்துண்டு நிற்பான். அவனுக்குப் பரீக்ஷை ஆச்சே, படிக்கணுமே என்று ஏதாவது இருந்தால் தானே!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, ''அப்பா அப்பா! அதோ நின்று கொண்டிருக்கான் பாரு, யானை

யைப் பாத்துண்டு'' என்ருள் கீதா.

நெருக்கடியான கூட்டத்திற்குள் நான் நின்று கொண்டிருந்தும் பொல்லாத கீதாவின் கண்க்ளில் மாத்திரம் நான் எப்படியோ அகப்பட்டு விட்டேன்.

கீதா வந்து என்னை அழைக்கவே நான் அப்பாவிடம் சென்றேன்; என்னை ஒரு முறை பார்த்துவிட்டு வேகமாக வீட்டை நோக்கிச் சென்ருர். அப்பாவுக்கு என் மீது கோபம் என்று அறிந்த நான் மெதுவாக வீட்டுக்குள் சென்றேன். வாசலில் நின்றுகொண்டிருந்த அவர், ''ஏண்டா, மணி பத்து ஆகிறது. நாளைக்குப் பொழுது விடிந்தால் பரீக்ஷை'' என்று ஆரம்பித்தார் அப்பா.

''படிச்சுட்டுத்தான்போனேன்.''

''உன்னை யார் இப்போ படிக்கவில்லைன்னு சொன்னு? எதற்காகக் கண் விழிக்கறேன்னுதான் கேட்டேன். பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பதுபோல் வேடிக்கை பாக்கணுமா?''

''அப்பா அப்பா! அந்த யானை சுவாமிக்கு முன்னுடி வர யானை இல்லை. அது விளம்பர யானை. அதன் உடம்பு பூராவும் வெள்ளை வர்ணத்திலே போட்டிப் பந்தயத்தைப் பற்றி எழுதி இருந்தது. எல்



லாரும் அதன் மேலே எழுதியிருக்கிறதைத்தான் வேடிக்கையாப் படிச்சா. அந்த யானை, யானைப் பாகனிடமிருந்து போட்டிப் பந்தய சம்பந்தமான நோட்டீஸை வாங்கி வாங்கி எல்லாருக்கும் தும்பிக்கையினாலே கொடுத்துக் கொண்டிருந்தது'' என்றேன் நான். எனக்கு இளமையிலேயே குதிரைப் பந்தயத்தைப் பார்க்க வேண்டும் என்று ஆசை உண்டு. எங்கே பார்த்தாலும் 'போனஸ் பரிசு, ஸ்பெஷல் பரிசு, பம்பர் பரிசு' என்று விளம்பரப்படுத்தியிருக்கும் நோட்டீஸ்களை ஆர்வத்துடன் படிப்பேன்.

போட்டிப் பந்தயம் என்று சொன்னவுடனே என் அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

''சிறுவர்களிலேயிருந்து பெரியவர்கள் வரையிலும் பிடித்திருக்கும் தொத்து வியாதியைப் போல உள்ள போட்டிப் பந்தயம் உன்னைப் பிடிக்காமல் இருக்கணும்னு நினைத்தேன். உனக்கும் பிடித்து விட்டதா?'' என்றார்.





"இல்லே அப்பா, நான் சும்மா விளம்பரத்தைப் பார்த்தேன். அவ்வளவுதான்."

"அப்படியானல் நீ போட்டிப் பந்தயங்கள் எதிலும் கலந்து கொள்ளுவது இல்லேயே?"

"இல்லே."

உடனே என் தங்கை கீதா, "இல்லே அப்பா. அண்ணு பொய் சொல்ருன். இது மாதிரி காகிதத்தை வச்சுண்டு அண்ணுவும் வைத்தியும் ஏதோ எப்பொழுதும் ஒத்தருக்கு ஒத்தர் கேள்வி கேட்டுண்டு எழுதிண்டு இருந்தா" என்ருள்.

"சீமா, போட்டிப் பந்தயத்தில் வேறு இறங்கிவிட்டாயா? இப்பவே கெட்டுப் போய் விடாதே. நன்ளு வாசிச்சு, உழைச்சு, சம்பாதிக்கணும்னு பிரயத்தனப்படுடா. இது மாதிரி போட்டிப் பந்தயம்னு வீணுப் புத்தியைக் கெடுத்துக்கல்லேன்னு மூன்று முறை இரண்டு காதையும் பிடிச்சிண்டு தோப்புக் கரணம் போடுடா" என்ருர்.

"இனிமேல் போடல்லே, இனிமேல் போடல்லே" என்று மூன்று தரம் தோப்புக்கரணம் போட்டு விட்டு அவமானத்திஞல் விம்மி விம்மி அழத் தொடங்கினேன்.

## 6

வைத்தி மெதுவாகக் கூப்பிட்டான். "சீமா, இந்தப் போட்டிப் பந்தயத்தைப் பார்த்தாயோ? இது சீமையிலே நடக்கிற போட்டி. இது சிறுவர்களுக்காகவே ஏற்பட்டதாம். இதுவரையில் யாருமே வெளியிடாத ஒரு புதுப் போட்டியாம். இதில் சிறுவர்கள் தான் கலந்துகொள்ளலாமாம். இந்தியாவில் இருக்கும் சிறுவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் போட்டியாம். அதனலேதான் 'கஜேந்திரா போட்டிப் பந்தயம்'னு பேர் வச்சிருக்கா. உற்சவத்திலே யானே கொடுத்ததே, அந்த நோட்டீஸ் தான் இது. அப்பா உன்னேக் கூப்பிட்டதினுலே நீ பயந்து அந்த நோட்டீஸை என்னிடம் கொடுத்துட்டே!" என்ருன் வைத்தி.

"வைத்தி, போட்டிப் பந்தயம் என்கிற பேச்சே என்னிடம் எடுக்காதே. எங்கப்பா ரொம்பக் கோபிச்சுப்பா!"

"என்னடா சீமா, நீ ஒன்றும் பயப்படாதே. உன் அப்பாவுக்குத் தெரியாமெ நான் பார்த்துக்கறேன். இதோ பார். முதல் பிரைஸ் ஆயிரம் பொன் அல்லது அதற்குச் சமமான விலே உள்ள சாமான். இரண்டாவது பிரைஸ் ஐந்நூறு பவுன் அல்லது அதற்குச் சமமான விலே உள்ள சாமான். மூன்ருவது பிரைஸ் இருநூற்று ஐம்பது பவுன் அல்லது அதற்குச் சமமான விலே உள்ள சாமான். இன்னும் எத்தனேயோ பிரைஸ்!"

"வைத்தி, வேண்டாமடா! அப்பாவிடம் தோப்புக்கரணம் போட்டிருக்கேன்."

"அட சீமா, நீ ஒண்ணும் பயப்படாதேடா. பரிசுக் கூபனேப் பூர்த்தி செய்து விலாசம் எழுதற போது எங்க வீட்டு விலாசத்தைக் கொடுத்துடேன். பரிசு வரும்போது பார்த்துக்கலாம். உனக்கு அப்படியே பரிசு வந்தாலும் எங்க வீட்டிலேதான் கொண்டு கொடுப்பான். நான் உனக்கு ரகசியமாக் கொண்டு கொடுக்கிறேன்."

"அப்படியானல் சரி!" என்று நான் வெகு நேரம் ஆலோசித்துக் கூபனேப் பூர்த்தி செய்தேன். சூரியநாராயண ஐயர் பிள்ளே சீனிவாசன் என்று என் பெயரை மாத்திரம் எழுதிவிட்டு, பக்கத்துத் தெருவில் வசிக்கும் வைத்தியின் விலாசத்தை எழுதினேன். வைத்தி தன் பரிசுக் கூபனில் தன் பெயரையும், தன் விலாசத்தையும் எழுதினன். இரண்டு கூபன்களேயும் எங்க ஊரிலே உள்ள கிளே ஆபீஸில் சேர்த்துவிட்டான்.

பரிசுக் கூபன் போட்ட சில நாளேக்கெல்லாம் வைத்தி ஒரு தந்தியை எடுத்துக்கொண்டு என்னிடம் தலேதெறிக்க ஓடி வந்தான்.

"டேய் சீமா, உனக்கு அதிருஷ்டமடா! பரிசுக் கூபன் போட மாட்டேன்னு பயந்தாயே! இதைப் பார். உனக்கு முதல் பிரைஸ் விழுந்திருக்கிறது! பிரைஸ்

சீக்கிரமே அனுப்பப்படுமாம்!'' என்று தந்தியை நீட்டினுன்.

தந்தியைப் பார்த்த எனக்குச் சந்தோஷத்தினுல் ஒன்றுமே புரியவில்லே. முதல் பரிசு விழுந்தாலும் பரிசுப் போட்டி போடக்கூடாது என்று சொல்லியும் நான் போட்டதை அப்பா அறிந்தால் என்ன சொல்வாரோ என்ற பயம். வைத்தியோ, ''பயப்படாதே. பணம் வந்தால் உன் பேருக்கு எங்க வீட்டுக்குத்தானே வரும்? பரிசு வந்தபோது நான் உன்னிடம் ஓடி வந்து ரகசியமாகச் சொல்லுகிறேன். நீ வாங்கி ரகசியமாக வைத்துக்கொள்'' என்று எனக்குத் தைரியம் சொன்னுன்.

அவன் சொன்னது கொஞ்சம் தைரியமாகத்தான் இருந்தது. இந்த விஷயம் எப்படியாவது என் வீட்டுக்கும், முக்கியமாக என் அப்பாவுக்கும் தெரியாமலிருந்தால் போதும் என்று நினைத்தேன். தினந்தோறும் எப்பொழுது வைத்தி பரிசு வந்ததாகச் சொல்லப் போகிறுன் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். வீட்டுக்குத் தபால்காரன் வரும்போதெல்லாம் என் பேரைத் தெரிந்துகொண்டு, தவறிப் போய் பரிசுத் தொகையை அப்பாவுக்கு எதிரில் கொடுத்துவிடப் போகிருனே என்ற பயம் வேறு. தபால்காரன் வீட்டுக்கு வந்தால் அவன் போகிறவரையிலும் என் உயிர் என்னிடமே இருக்காது.

ஒரு நாள் வைத்தி வீட்டிலே ஒரே அமர்க்களம். வாசலிலே மணி அடித்துக்கொண்டு ஒரு யானை வந்து நின்றுகொண்டிருந்தது அதன்மீது இருந்த யானைப்பாகன், ''இந்த வீட்டிலேதானே சூரியநாராயண ஐயர் மகன் சீனிவாசன் இருக்கான்?'' என்று கேட்டான். யானையைச் சுற்றி ஒரே கூட்டம். யானைப்பாகன் சொன்னதைக் கேட்ட வைத்தி, ''ஆமாம் ஆமாம். என்ன அப்பா?'' என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தான். வைத்தியுடன்கூட அவன் அம்மாவும் என்ன விசேஷம் என்று அறிய அவனுடன் வந்தாள். உடனே யானைப்பாகன் வைத்தியிடம் ஒரு கவரைக் கொடுத்தான். அது ''கஜேந்திரா போட்டிக் கம்பெனி, சீமை'' என்ற இடத்திலிருந்து வந்திருக்கிறது என்று தெரிய வந்தது. அதில் என் பெயரும், என் அப்பாவின் பெயரும் எழுதி இருந்தன. விலாசம் மட்டும் வைத்தி வீட்டு விலாசம். வைத்தி அவசரமாகக் கவரைப் பிரித்துப் பார்த்தான். அதில், ''உனக்கு முதல் பரிசு 1000 பொன் வந்திருக்கிறது என்ற மகிழ்ச்சி தரும் செய்தியை முன்பேயே தந்தி மூலம் தெரிவித்திருக்கிறேம். யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதை நீ அறிவாய். ஆதலால் நாங்கள் விளம்பரத்துக்காக வைத்திருந்த யானையையே உனக்கு எப்பொழுதும் பயன்படட்டும் என்று பரிசாக அளிக்கத் தீர்மானித்து, யானையை உனக்கு அனுப்பி இருக்கிறேம். பெற்றுக்கொண்டு யானையின் பக்கத்தில் நீ நின்றுகொண்டு ஒரு போட்டோ எடுத்து அனுப்பினுல் எங்கள் விளம்பரத்திற்குச் சௌகரியமாக இருக்கும்'' என்று எழுதி இருந்தது. உடனே வைத்தி ஒன்றும் தோன்றுமல் தயங்கி நின்றுன்.

''ஏன் ஐயா, சும்மா நிக்கிறீங்க? இந்த யானையை இங்கே வாசலிலே கட்டிட்டுப் போகட்டுமா?'' என்றுன். வைத்தியோ விழித்தான்.

உடனே வைத்தியின் அம்மா, அவனைப் பார்த்து, ''நன்னுருக்குடா. ஏதோ சீமாவக்குப் பணம் வருதுன்னே. சரின்னு சொன்னேன். இந்த யானையை நம்ப வீட்டிலே கட்டிண்டு யார் அதற்குத் தீனி போடறது?'' என்று கோபமாகச் சொன்னுள்.

''இந்தச் சமாசாரம் சீமா வீட்டுக்குத் தெரியப்படாது, அம்மா!'' என்றுன் வைத்தி. ''அதுக்கு நாம்ப என்ன செய்யறது? அதெல்லாம் யானையை நம்ம வீட்டு வாசலில் கட்டக் கூடாது'' என்று சொல்லிக்கொண்டே, ''அப்பா, யானைப்பாகா! அதில் கண்டிருக்கும் சீனிவாசன் வீட்டு விலாசத்தைச் சொல்றேன். அங்கேயே போய் இந்த லெட்ட

ரைக் கொடு'' என்று யானைப் பாகனிடம் அவள் என் வீட்டு விலாசத்தைக் கொடுத்தாள்.

யானைப்பாகன் கோபத்துடன் யானையை வேகமாக ஓட்டிக் கொண்டு என் வீட்டை நோக்கி வந்தான். யானையைச் சுற்றி வந்த சிறுவர்களின் கூட்டம் பெரிய கூட்டமாக இருந்தது. மணி அடித்துக்கொண்டு யானை வாசலில் வந்து நின்றபொழுது நான் குளித்துக்கொண்டிருந்தேன். பாட்டி, தாத்தா, அம்மா எல்லாரும் வாசலில் கோயில் யானை வழக்கம்போல வந்திருக்கிறதாக்கும் என்று வாசற் பக்கம் வந்தார்கள்.

யானைப்பாகன், ''இந்த வீட்டில் தானே சூரியநாராயண ஐயர் பிள்ளை சீனிவாசன் இருக்கான்?'' என்று கேட்டான். ''ஆமாம் ஆமாம். என்ன என்ன?'' என்று பதற்றத்துடன் கேட்டாள் என் அம்மா.

யானைப் பாகன் கொடுத்த கவரைப் பிரித்துப் படித்துப் பார்த்தாள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தாத்தாவும் பாட்டியும், ''என்ன கடிதம் அது?'' என்றார்கள். என் அம்மா என்னிடம் ஓடோடி வந்து. ''ஏண்டா சீமா, ஏதாவது நீ போட்டிப் பந்தயம் போட்டாயா?'' என்று கேட்டாள்.

அம்மா வந்து கேட்ட நிலைமையையும் அவள் கையில் வைத்திருந்த கவரையும் பார்த்த நான் திகைத்துப்போய், சொல்ல முடியாமல், ''ஆமாம் அம்மா! அந்தப் பணத்தை நீயே வைத்துக்கொள். அப்பாவிடம் சொல்லாதே, அம்மா'' என்றேன்.

''என்னடா உளர்றே? பணமா? இந்தக் கவரைப் பார்!'' என்று என்னிடம் கவரைக் கொடுத்தாள். அதிலிருந்த கடிதத்தைப் பார்த்தேன். வாசலில் நின்றுகொண்டிருந்த யானையைப் பார்த்தேன். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மயக்கம் வரும்போல் இருந்தது. அப்பா மாடியிலே இருப்பது தெரிந்தது. உடனே வாசல் பக்கம் ஓடி வந்தேன்.

யானைப் பாகனைப் பார்த்து, ''அப்பா, நீ ஒன்றும் சத்தம் போடாதே. எனக்கு இந்த யானை வேண்டாம். திருப்பி எடுத்துண்டு போ'' என்று சொன்னேன்.

''அதெல்லாம் முடியாது. இது உங்களுக்காக அனுப்பின யானை. உங்க வீட்டு வாசலில் கட்டப் போறேன். இல்லாவிட்டால் எங்கள் மானேஜர் என்னைத் திட்டுவார்'' என்றான் அவன்.

என் பாட்டியும் அம்மாவும், ''இங்கே கட்டாதே. இந்த யானையைக் கட்டி யாரு தீனி போடறது? ஏ சீமா! என்ன சொல்லியும் உனக்குப் புத்தி இல்லை. அப்பாவுக்குத் தெரிஞ்சா என்ன பண்றது?'' என்று கையைப் பிசைந்து கொண்டார்கள். அந்தச் சமயத்தில் யானைப்பாகன் ஏதோ சொல்லுவதற்குத் தன்னிடமிருந்த ஒரு பெரிய தகரக் குழாயைத் தன் வாயில் வைத்துக் கொண்டான்.

உடனே நான், ''அப்பா அப்பா! ஒன்றும் சொல்லாதே!'' என்றேன்.

''சொல்லாவிட்டால் எங்கள் கம்பெனியை எப்படி விளம்பரப் படுத்துவது?'' என்று சொல்லி விட்டு, ''இங்கே யானையைச் சுற்றி நிற்கும் எண்ணற்ற குழந்தைகளே! முதல் முதலாக எங்கள் கம்பெனியினால் நடத்தப் பெற்ற போட்டிப் பந்தயத்தில் இந்த யானையை இந்த வீட்டிலிருக்கும் சூரியநாராயண ஐயரின் பிள்ளை சீனிவாசன் பரிசாகப் பெற்றான். நீங்களும் எங்கள் கம்பெனியின் போட்டிப் பந்தயங்களில் கலந்து கொண்டால் உங்களுக்கும் ஆயிரம் பொன்னோ அல்லது அதற்குச் சமமான சாமானோ கிடைக்கும்'' என்று உரக்க இரண்டு மூன்று முறை சொல்லவே, மாடியிலிருந்த என் தகப்பனார் கீழே இறங்கி வந்து, யானையையும் என்னையும் கோபத்தோடு மாறி மாறிப் பார்த்தார்.

(தொடரும்)

# பணப் பை

சம்பந்தம்

அன்று பரீட்சை எழுதிவிட்டு வந்து அமர்ந்த பக்கிரிசாமி, தன் அப்பாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அப்படியே திடுக்கிட்டுப் போனான். "என்ன அப்பா இது? ஏன் விசனமாயிருக்கே?" என்று பரபரப்புற்றான்.

"நான் என்ன சொல்ல! ஸ்டேஷனில் பணப் பையைக் காணோம்" என்றொரு நீண்ட பெருமூச்சு விட்டான் போர்ட்டர் பொன்னுசாமி.

"பணப் பையா?"

"ஆமாம். வழக்கப்படி ஸ்டேஷன் மாஸ்டர், ஆபீசுக்குப் பணம் அனுப்புவதற்காகப் பணப் பையைக் கொடுத்தார். பையைக் கட்டி, சீல் போட்டுக் கொடுத்தேன். அப்போ தாம்பரம் ஷட்டில் வண்டி 'பிளாக்' ஆகவே எழுந்தார். நான் உடனே மணியடிக்கப் போயிட்டேன். 'லைன் கிளியர்' கொடுத்துட்டுவந்தவர், 'பொன்னா' என்று கத்தினார். ஓடினேன். 'இப்போ இங்கே வச்சுப்போன பை அதற்குள்ளே எங்கேடா போகும்?' என்று என்மேல் சீறி விழுந்தார். நான் அறையினுள்ளே எங்கெங்கேயோ தேடினேன். கிடைக்கவேயில்லை.

"அதற்குள் வண்டி வந்து போயிற்று. வண்டியில் இறங்கின ஒருவர், ஒற்றை மாட்டு வண்டிக்காரன் வையாபுரியைக் காணாமல்; 'வையாபுரி! வையாபுரி?' என்று கத்திக்கொண்டிருந்தார். என்னையும் விசாரித்தார். எனக்கிருந்த விசனத்திலே அந்த ஆள்கிட்டே சண்டைக்கே போயிட்டேன். அதற்குள் வையாபுரி எங்கிருந்தோ ஓடிவந்துவிட்டான்.



"ஸ்டேஷன் மாஸ்டர், போலீசுக்குத் தந்தியடிக்க ஆரம்பிச்சார். இப்படி ஓடியாந்தேன். ஒருவேளை என்மேல்தான் சந்தேகம் என்று தந்தியடிச்சுடருரோ என்னவோ?" என்று தலையிலடித்துக் கொண்டான் போர்ட்டர் பொன்னுசாமி.

அதைக் கேட்கப் பக்கிரிக்கும் அவமானமாய்த்தான் இருந்தது. "ஏன் அப்பா, நீ அங்கே பணப் பைக்குச் சீல் போட்டுக் கொண்டிருந்தபொழுது ஸ்டேஷன் மாஸ்டரைத் தவிர வேறு யாராவது இருந்தார்களா?" என்ருன்.

"வேறு யாரும் இல்லேடா. ஸ்டேஷன் மாஸ்டர் நோட்டுகளைத் தைத்துக்கொண் டிருந்தபோதெல்லாம், நான் வையாபுரிகிட்டே நெருப்புப் பெட்டி வாங்கி, சீல் வைப்பதற்காக விளக்கைப் பொருத்தினேன்."

"வையாபுரியா! அவன் எங்கே இருந்தான்?" என்று அதி ஆவலாய் விசாரித்தான் பக்கிரி.

"அவன் வழக்கப்படி அந்தண்டை நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான்."

"அவன்தான் வண்டி வந்த பொழுது அங்கில்லை என்று சொன்னுயே?"

"ஆமாம், ஆமாம். அதற்குள் அவன் எங்கேயோ போய் வந்திருக்கிருன்" என்ருன் பொன்னுசாமி.

அதைக் கேட்டு ஆழ்ந்து யோசனை செய்தான் பக்கிரிசாமி. ஏதேதோ எண்ணங்கள் எழுந்தன, அவன் இளம் மனத்தில். இதை எப்படியும் இப்போதே துப்பறிந்தாக வேண்டும் என்று தீர்மானித்து வெளியே புறப்பட்டான்.

அப்பொழுது வையாபுரி, ஸ்டேஷனில் வண்டியை விட்டுவிட்டுத் திரும்பி ஓடினன். பக்கிரிசாமி சந்தடி செய்யாது அந்த வண்டியைப் பின்தொடர்ந்தான்.

வண்டி வெகுதூரம் சென்றது. ஊர் எல்லையைத் தாண்டிப் போன பிறகுதான் நின்றது. அங்கு அநேக குடிசைகள். அவைகளில் ஒன்றின் எதிரே வண்டியை நிறுத்தி மாட்டை அவிழ்த்து மூலையில் கட்டிப் போட்டு உள்ளே நுழைந்தான். அவன் பின்னலேயே அவ்வீட்டினுள் புகுந்து ஒளிந்துகொண்டால் தேவலையென்றிருந்தது பக்கிரிக்கு. ஆனல் அதற்குள் வையாபுரி வெடுக்கென்று கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டுவிட்டான்!

சரி, புழக்கடைப் பக்கம் போய்ப் பார்ப்போம் என்று திரும்பினன் பக்கிரிசாமி. வழியில் ஒரே சகதி. இருட்டில் சரியாய்த் தெரியாமல் காலைவிட்டு உழப்பிக்கொண்டே சென்ருன்.

அங்கே அவனைவிட இரட்டைப் பங்கு உயர முள்ள கீற்றுகளை நட்டு, புழக்கடைப்பக்கம் நன்ருய் அடைத்துக் கிடந்தது. அவனல் உள்ளே நடப்பதை ஒன்றுமே தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனல் அவன் நல்ல காலத்திற்கு, அருகாமையில் கப்பும் கிளையுமான மரம் ஒன்று இருந்தது. மெதுவாக





ஒரே இருட்டு. அதற்கப்புறம் ஒன்றுமே தெரியவில்லை. அதற்குள் இரவு வெகு நேரமாகிவிடவே, எங்கேயோ தூரத்தில் நரிகள் ஊளையிட்டன; சாலை நாய்களும் குலைத்தன. பக்கிரிசாமிக்கு ஒரே பயம்.

துப்பறிவது என்ருல் சும்மாத்தானு!

சற்று நேரம் கழித்து, கீழ்த் திசையில் தோப்பில் நிலவு எழுந்தது. அந்த மங்கிய வெளிச்சத்திலே மெதுவாக மரத்திலிருந்து இறங்கி சாலைக்கு வந்தான் பக்கிரி.

அப்பொழுது அந்தப் பக்கம் போலீஸ்காரன் ஒருவன், வையாபுரி வீட்டுக்குச் சென்று ஏதேதோ குசுகுசுவென்று பேசினுன்.

''ஓ! இந்தப் பணப்பை திருட்டிலே, போலீஸ்காரனும் உடந்தையா?'' என்று தலையை அசைத்துக்கொண்டே தன் வீட்டுக்குத் திரும்பினுன் பக்கிரிசாமி.

சாலையின் இருமருங்கிலும் காட்டுப்பூச்சிகளின் 'ஙொய்' சப்தத்தை தவிர, எங்கும் ஒரே நிச்சப்தமா யிருந்தது. தன் மார்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான் பக்கிரி. 'படுக் படுக்' கென்று அடித்துக் கொண்டது. அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓட்டமும் நடையுமாய் வீடு வந்து சேர்ந்தான்.

அம்மா கோபித்துக் கொண்டாள்; அப்பா தூங்கிப் போயிருந்தார்.

அந்த வேளையிலேயே விளக்கை எடுத்து அருகில் வைத்துக் கொண்டு போலீசுக்கு 'ரிப்போர்ட்' எழுதத் தொடங்கிவிட்டான். தான் துப்பறிந்த விஷயத்தையெல்லாம் விளக்கி எழுதி, வையாபுரி பணப்பையைப் புதைத்து வைத்த இடத்தின் 'பிளானை'யும் போட்டுக் காட்டினுன் அதில்.

இடையில் அநேக பெரிய பெரிய கொட்டாவிகள் விட்டான்; தூக்கம் அவனைக் கட்டியிழுத்தது.

அதில் ஏறத் தொடங்கினுன் பக்கிரிசாமி.

சரியாக ஏறத் தெரியாமல் சதையைச் சிராய்த்துக்கொண்டான். அதனுல் எரிச்சலும் எடுத்தது. இருந்தும் தாம் துப்பறிகிருேம் என்ற எண்ணத்திஞல் அதைப் பல்லைக் கடித்துப் பொறுத்துக்கொண்டு மேலே ஏறினுன்.

அங்கிருந்து பார்த்ததற்கு வையாபுரி வீட்டுப் புழக்கடை நன்ருய்த் தெரிந்தது.

சற்று நேரத்திற்குள் வையாபுரி, கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு புழக்கடைப் பக்கம் வந்தான். உடனே ஓரிடத்தில் அவசர அவசரமாய் மண்ணைப் பறிக்கத் தொடங்கினுன்.

பக்கிரிசாமியின் மனசு படக் படக்கென்று அடித்துக்கொண்டது.

இப்படியும் அப்படியும் பார்த்துக்கொண்டே மடியிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்தான் வையாபுரி. வெடுக்கென்று அதை அந்தப் பள்ளத்தில் போட்டு அவசர அவசரமாய் மண்ணைத் தள்ளினுன். 'ஆ! பணப்பையைப் புதைச்சு வைக்கிறியா?' என்று முணுமுணுத்துக்கொண்டான் பக்கிரிசாமி. அதற்குள் அப்பொழுது அடித்த காற்றில் அந்த விளக்கு பட்டென்று அணைந்துவிட்டது.




**டாக்டர்:** நான் சொல்லுகிறதெல்லாம் புரிந்ததா? இல்லை, இந்தக் காது வழியாக வாங்கி, அந்தக் காது வழியாக விட்டு விட்டாயா?

**மற்றவர்:** வலது காதில் பஞ்சு வைத்து அடைத்திருக்கிறேன் சார்! —P. கலாசாமி, தூத்துக்குடி.

---

ஆனால் தண்ணீரால் கண்களைத் துடைத்துக்கொண்டு எழுதினான்.

அவன் எழுதியதும் பல பல வென்று விடிந்துவிட்டது.

முதலில் இதை ஸ்டேஷன் மாஸ்டரிடம் சொல்லுவோம் என்று எழுதின ரிப்போர்ட்டையும் கையிலெடுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினான் அவன்.

என்ன ஆச்சரியம்! அங்கே அப்பொழுது அந்த வண்டிக்காரன் வையாபுரியும் அவசரமாய் வந்தான்; மடியிலிருந்து ஏதோ ஒரு பொட்டலத்தை எடுத்து ஸ்டேஷன் மாஸ்டரிடம் கொடுத்தான்.

"அடடா! நாம் துப்பறிந்தது இவனுக்கு எப்படியோ தெரிந்து போய்விட்டதே! தானே கொண்டு வந்து கொடுத்து விட்டானே பணப்பையை" என்று பக்கிரி எண்ணினான்.

"என்னடா இது?" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"நம்ம பெண்சாதி தவறிப் போயிடுத்தில்லே; அதன் நகைங்க இது. இதைக் காப்பாற்றக் கஷ்டமாயிருக்கிறதென்று ராத்திரி புழக்கடையிலே புதைச்சுக் கூட வச்சேன். ஆனால், போலீசிலிருக்கிற என் மச்சான் சொல்லிச்சு, உங்ககிட்டே கொடுத்துவைச்சா ஜாக்கிரதையாயிருக்கும் என்று; அதான் கொண்டுவந்தேன்" என்றான் வையாபுரி.

"என்ன அது, நகையா!" என்று பக்கிரிசாமி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தபொழுதே ஸ்டேஷன் மாஸ்டர் பையன் வேகமாய் ஓடிவந்தான் அங்கே.. "அப்பா பணப்பை கிடைச்சுப்போச்சு. நம் வீட்டு வெந்நீர்த் தவலை உள்ளே கிடந்தது" என்று சீல் உடையாத அந்த பணப்பையை அப்பாவிடம் நீட்டினான். ஸ்டேஷன் மாஸ்டர் அப்படியே ஆச்சரியத்திலாழ்ந்து போனார்:

அதற்குள் அங்கேவந்த பொன்னுசாமி, "இப்போது தான் சாமி நினைவு வரது. வெந்நீர்த் தவலை ஒழுகுது என்று சொன்னீங்களா! நான் கடைத்தெரு போய் அதற்குப் பொத்தலடைச்சு வந்தேன். பைக்குச் சீல் போடச் சொல்லவே, இப்படியே மேஜைக் கடியில் அதை வச்சுட்டுக் கவனிச்சேன்."

"சரி; பணப்பை வெந்நீர்த் தவலைக்குள்ளே எப்படிப்போச்சு?" என்று சீறினார் ஸ்டேஷன்மாஸ்டர்.

"இருங்க, இருங்க; வண்டி பிளாக் ஆகவே, நான் மணி அடிக்கப் போனேனு! நீங்கள் 'லைன் கிளியர்' கொடுக்க எழுந்த அவசரத்திலே, உங்க கைபட்டு அப்படியே அடியிலிருந்த வெந்நீர்த் தவலையினுள்ளே விழுந்திருக்கு. அப்புறம் அதை எடுத்துப் போன உங்க வீட்டு வேலைக்காரியும் அதைக் கவனிக்கல்லே. இப்போ காலையிலே அம்மா அதில் தண்ணீர் ஊற்றப் போனபோது பார்த்திருக்காங்க" என்றான்.

"ஆமாம்டா; அப்படித்தான் நடந்திருக்கணும் அது" என்று சொல்லிக் கொண்டே, பை கிடைத்துவிட்ட செய்தியைப் போலீசுக்குத் தந்தியடிக்கச் சொன்னார் ஸ்டேஷன் மாஸ்டர்.

அப்பொழுது அங்கிருந்த அனைவரும் சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்த பொழுது, பக்கிரிசாமியின் மனம் மாத்திரம் பெரும் துன்பத்தில் அமிழ்ந்திருந்தது. அவன் துப்பறிந்த ரிப்போர்ட்டை சுக்கு நூறாகக் கிழித்துப்போட்டான்.

# வேலியே காய்த்தது

**சங்கரசுப்பு**



அப்பாவு, அய்யாவு என்ற வைப்புக் கட்டான பெயரிலே அவர்கள் வியாபாரம் செய்து வந்தார்கள். அதற்குக் காரணம் தங்கள் உண்மைப் பெயர்களான கந்தையா, முருகையா பொது ஜனங்களிடம் எவ்வளவு தூரம் நன்மதிப்பைப் பெறும் என்பதை அவர்கள் உள்ளங்கை நெல்லிக் கனி போல் அறிந்திருந்ததுதான். அதாவது, அவர்கள் அவ்வளவு பிராபல்யமானவர்கள்!

'அப்பாவு, அய்யாவு கம்பெனி'யின் வாசலில் தொங்கிய பலகையில் கண்டுள்ள வாசகத்தின்படி, அவர்கள் வியாபாரிகள். காலணா முதல் போட்டால் குறைந்தது காலே அரைக்கால் ரூபாய் லாபம் கிடைக்குமா, என்று கணக்குப் பார்த்து வியாபாரம் செய்வார்கள். 'எள்' என்று ஒரு காகிதத்தில் எழுதி, அந்தக் காகிதத்திலிருக்கும் எள்ளைப் பிழிந்து எண்ணெய் எடுக்கப் பார்ப்பார்கள்!

எந்தெந்த வியாபாரமெல்லாம் லாபத்தைக் கணக்கு வழக்கின்றிக் கொடுக்கிறதோ அவைகளிலெல்லாம் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். முக்கியமாக லேவாதேவி நடத்தி வந்தார்கள்.

அவர்களுடைய காரியாலயம் பெரிதல்ல. அவர்கள் கீழே ஊழியம் பார்த்தவனும் ஒரே ஒரு குமாஸ்தாதான். அவன் சுமாராக

வேலை தெரிந்தவனாகவும் அநுபவ மில்லாதவனாகவும்தான் இருப்பான். அதற்குக் காரணம் அந்தக் குமாஸ்தாவுக்கு அவன் உத்தியோகம் பார்க்கும் முதல் ஆறு மாதத்துக்கு ஊதியம் எதுவும் கிடையாது. முதல் ஆறுமாதத்தில் அவன் உத்தியோகம் பார்க்கும் லட்சணம் எப்படிப் பட்டது என்பதைத் தீர்மானிப்பார்கள். பிறகு ஏழாம் மாதத் துவக்கத்தில் சம்பளம் நிர்ணயம் ஆகும். ஆனால் ஒருவராவது இதுவரையில் ஒரு மாதச் சம்பளம் வாங்கினது கிடையாது. ஏனெனில் ஏழாம் மாதத் துவக்கத்தில் அந்தக் குமாஸ்தா அவன் வகித்த உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவனாகக் கருதப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிடுவான்.

உடனே வேறு ஓர் ஆளுக்குப் பத்திரிகையில் விளம்பரம் செய்வார்கள். விளம்பரத்துக்குப் பதில் கூறின மனுதார்களிலிருந்து ஒருவன் காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வான்.

* * *

ஒரு தடவை கந்தையா அந்த வருஷ விளம்பரத்திற்கு நகல் தயாரித்துக்கொண்டிருக்கையில் முருகையா வேகமாக வந்தார்.

''என் மூளையில் ஒரு பெரிய 'ஐடியா' பிறந்திருக்கிறது'' என்று சொல்லி தன் மூளையில் சம்பவித்த யுக்தியைச் சொன்னார். அதைக் கேட்டதும் கந்தையா ஏளனமாகச் சிரித்தார். ''என்ன தம்பி, மரத்தடியில் முத்துக் குளிக்கப் பார்க்கிறாய்? வேலை பார்க்க வருபவனிடம் வேலை கற்றுக் கொள்ள முன் பணமா கேட்கப் போகிறாய்? எனக்குத் தோன்றவில்லை. உன் மூளையின் சிறந்த யுக்தியைக் கௌரவிக்க ஒருவன் வருவான் என்று.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? ஒரே கல்லில் இரண்டு மாங்காய் தீட்டப் போகிறேன். நீ வேண்டுமானால் பார்! விளம்பரம் வெளியாகட்டும், ஈசல் மாதிரி எவ்வளவு பேர் வருகிறார்கள் என்று. இப்போது வேலை கிடைப்பது எங்கும் குதிரைக் கொம்பாய் இருக்கிறது.

* * *

விளம்பரம் வெளியான அன்றே சுமார் நாற்பது மனுதார்கள் வந்து தவம் கிடந்தார்கள்.

ஒவ்வொருவரையும் தனித் தனியே பேட்டி கண்டார் முருகையா.

''முன் பணம் ரூபாய் 200 கேட்கிறேன் என்று நினைக்காதே. உன் நன்மைக்குத்தான். நீ வேலை கற்றுக் கொள்ளலாம். உன்னை நன்றாகப் பயிற்சி செய்து விடுவோம்'' என்று தேனாய்க் குழையக் குழையப் பேசினார். ஆனால் வந்த ஆசாமி ஒருவருக்காவது அது தேனாய்ப் படவில்லை. வேம்பாய்க் கசந்தது.

ரூபாய் இருநூறு முன் பணம் என்றால் லேசா? எல்லோரும் போய்விட்டார்கள்.

* * *

''நான்தான் சொன்னேனே, உன் விவகாரமெல்லாமே இப்படித்தான்! எவன் உன்னையும் என்னையும் நம்பி ரூபாய் இருநூற்றை முன் பணமாகக் கொடுப்பான்? நீ இம்மாதிரி முயற்சி செய்வது, வேலியே காய்க்கும் என்று எதிர் பார்ப்பது போன்ற முட்டாள் தனம்தான்.''

''ஏதேது? எவனாவது பணத்துடன் வந்தால்கூட நீ போய் அவனிடம், 'தம்பி, திரும்பிப் போய் விடு. இங்கே வந்து மாட்டிக் கொள்ளாதே. உன் பணம் யானை வாய்க் கரும்புதான்' என்று உபதேசம் செய்து அனுப்பி விடுவாய் போலிருக்கிறதே! பொறு அப்பா, பொறு. தூண்டிலைப் போட்டவுடனேயே மீனை எதிர்பார்க்கிறாயே!''

''இன்று சம்பத் என்னும் ஓர் இளைஞன் கடிதம் எழுதியிருக்கிறான். 'என்னால் முன் பணம் ரூபாய் இருநூற்றையும் ஒரே தடவையில் கொடுக்க இயலாது. நான்கு தவணைகளில் தரலாமா?' என்று கேட்டிருக்கிறான். நாளை முதல் தவணையோடு வருவதாக

எழுதியிருக்கிறன்.''

''நிஜமாகவா?''

''ஆமாம்.''

* * *

மறு நாள் சம்பத் என்னும் இளைஞன் வந்தான். ''ஐயா, தாங்கள் விளம்பரம் செய்த வேலை இன்னமும் காலியாயிருக்கிறதா? இல்லை, யாரையாவது நியமித்து விட்டீர்களா?'' என்று விநயத்துடன் பவ்வியமாகக் கேட்டான்.

முருகையா பெருந்தன்மையோடு, ''என்ன வேலை? ஓகோ, அந்தக் 'கிளார்க்' வேலையா? யாரோ இரண்டு பட்டதாரிகள் இன்று மத்தியான்னம் வருவதாகவும், வேறு எவரையும் நியமிக்க வேண்டாம் என்றும் மன்ருடிக் கேட்டுக்கொண்டு போயிருக்கிருர்கள். எதற்கும் பார்த்துச் சொல்கிறேன்.''

''ஸார், தயை செய்து என்னை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று இரங்கிக் கேட்டான் சம்பத்.

''உன்னையா?''

''ஆமாம் ஸார். நான் என்னுடைய முதல் தவணையைக் கொண்டு வந்திருக்கிறேன். என்னை ஏமாற்ருதீர்கள். என் தகப்பனர் மனம் மிக நொந்து போவார். .....ஸார்!''

''ஹூம்..அப்படியா? சரி... அப்படியென்ருல்..''

''ஸார். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. நீங்கள் மகராஜனுய் இருக்க வேண்டும். நான் நாளையே வேலையை ஒப்புக் கொண்டு விடட்டுமா?''

முருகையா தன் தலையின் வெள்ளி மயிரைக் கோதி விட்டு. கம்பிரத்துடன், ''சரி'' என்று சம்மதம் தெரிவித்தார்.

''ஆனல்..? இங்கே பார், ரொம்பவும் உழைத்து வேலை செய்ய



வேண்டும், என்ன? சம்மதம் தானா? அதற்கு ஒப்புக்கொண்டால் தான்..என்ன?''

''சரி, ஸார், நான் நிச்சயம் உழைத்து வேலை செய்கிறேன்.''

சம்பத்தை அனுப்பி விட்டு முருகையா கரும்புத் தோட்டத்தை ஹதம் செய்து விட்டுப் பெருமிதத்துடன் வரும் யானை போல், நடையில் ஒரு புதிய மிடுக்குடன் தம் தமையன் கந்தையாவை நாடினார்.

''என்ன அண்ணா, என்னைச் சுத்த உதவாக்கரை என்று நினைத்தாயே, இதோ பார், நான் ஒருத்தனைப் பிடித்துவிட்டேன், இந்தா, அவனுடைய முதல் தவணை ரூபாய் ஐம்பது.''

பணத்தைப் பெற்றுக்கொண்டு, ''தம்பி முருகு, உன்னை எனக்குத் தெரியாதா? நீதான் நெருப்பிலிருந்து நீரைக் கறப்பாயே; என்ன இருந்தாலும் இந்தக் கந்தையாவின் சோதரன்தானே! என் சாமர்த்தியம் உனக்கும் இல்லாமலா போய்விடும்? நம் பொறியில் ஒருவன் இப்படிக் கண்ணைத் திறந்து கொண்டே விழுவான் என்று நான் நினைக்கவில்லை. உன் முகராசியே அலாதி அப்பா!'' என்றார் கந்தையா.

சம்பத் ஏதோ கண்டெடுத்த பொக்கிஷமாய்த்தான் திகழ்ந்தான். அவன் பாக்கி ரூபாய் நூற்றைம்பதை மூன்று தவணைகளில் தவறாமல் குறிப்பிட்ட தேதிகளில் கொடுத்து விட்டான். ஒரு பாவமும் அறியாத ஆட்டுக்குட்டிபோல் நடந்து கொண்டான்.

'அப்படிச் செய்' என்றால் அப்படியே செய்தான். 'இப்படிச் செய்' என்றால் இப்படியே செய்தான். 'அப்படியும் இப்படியும் செய்' என்றால் அப்படியும் இப்படியும் செய்தான். 'இப்படியும் அப்படியும் செய்' என்றால் இப்படியும் அப்படியுமே செய்தான்.

அதனால் அவனிடம் எவ்விதக் குறையையும் காணவில்லை. குற்றத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்டு பிடித்து வேலையை விட்டுத் தள்ள முடியவில்லை.

ஆனால்...

ஒரு நாள் சாயங்காலம்—

முருகையா, ''சம்பத்..''என்று கூப்பிட்டுக் கொண்டே அவன் மேஜை சமீபம் நெருங்கினார்.

''ஸார்.. ''என்று மரியாதையுடன் எழுந்து நின்றான் சம்பத்.

''இன்று அந்த தஸ்தாவேஜிகளையெல்லாம் பேரேடுகளில் பதிவு செய்து விட்டு நீ வீட்டுக்குப் போ.''

''ஸார், எல்லாவற்றையுமா?''

''ஆமாம்.''

''விடிய விடிய வேலை செய்தாலும் தீராதே, ஸார்!''

''எதிர்த்துப் பேசாதே.. சொன்னதைச் செய்..''

''ஸார், மணி இப்போதே ஆறரை ஆகிவிட்டது..''

''இதோ பார், நான் உன்னை வேலைக்கு வைத்துக் கொள்ளுமுன்— என்ன சொன்னேன்? சொன்னபடி கேட்டு ஒழுங்காக வேலை செய்வதாக ஒப்புக் கொண்டாயே, அதன் பேரில்தானே உன்னை அமர்த்திக் கொண்டேன்? இப்போது''

''அது சரி, ஸார்..ஆபீஸ் நேரத்திற்குப் பிறகுகூட வேலை செய்ய..''

''தொண தொணக்காதே. என்னோடு வாதாடுவது என்றால் உனக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது. நான் வேறு ஆளைத்தான் பார்த்துக் கொள்ளவேண்டும்..''

''ஸார்..ஸார், வேலையிலிருந்து மாத்திரம் தள்ளிவிடாதீர்கள்.. நீங்கள் சொன்னபடியே வேலையை முடித்து விட்டு வீட்டிற்குப் போகிறேன். உங்கள் மனத்தைப் புண்ணாக்கி விட்டதற்கு மன்னித்து விடுங்கள்.''

''அப்படியென்றால் நீ எல்லாத் தஸ்தாவேஜிகளையும் முடித்து விட்டு வீடு போவாய் இல்லையா..?''

''ஆமாம் ஸார். நீங்கள் விரும்புகிறபடியே செய்கிறேன்..'' என்று தடுமாறிக் கொண்டே சொன்னான்.

இந்தச் சம்பவத்தை முருகையா தம் அண்ணாவிடம் சொன்னார். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

* * *

மறு நாள் காலை முருகையா தம் ஆபீஸ் கட்டடத்திற்கு வந்ததும் திடுக்கிட்டுப் போனார். ஆபீஸ் வழக்கத்திற்கு விரோதமாகப் பூட்டிக் கிடந்தது. முனகிக் கொண்டே தம் கோட்டு ஜேபியிலிருந்த தம் சாவியை எடுத்துப் பூட்டினுள் நுழைத்து அதைத் திருப்பும்போது கந்தையா வந்தார்.

''என்ன தம்பி, என்ன சமாசாரம்?''

''சம்பத் இன்னும் வரவில்லை.''

''அட அப்படியா? இருந்தாலும் தம்பி, அவனும் மனுஷன்தானே? பாவம்! நேற்றிரவு முழுவதும் கண் விழித்து வேலை செய்திருப்பான்.. நாமும் கொஞ்சம் அனுசரித்துதான் நடக்க வேண்டும்..''

இதற்குள் முருகையா ஆபீஸைத் திறந்து உள்ளே நுழைந்தார்.

''என்ன, தம்பி, ஏன் தடுமாறுகிறாய்? என்ன..?''

''அண்ணா—அதோ பாருங்கள்—'' என்று கூறி ஆபீஸின் மூலையில் இருந்த இரும்பு அலமாரியைச் சுட்டிக் காண்பித்தார். அது திறந்திருந்தது.

''என்ன..?''

''இதோ..மேஜை மீது ஒரு கடிதம் இருக்கிறதே..''

வேகமாக உறையைப் பிரித்தார் முருகையா. இருவரும் சேர்ந்தே படித்தார்கள்.

''அன்புள்ள கனவான்களே!'' என்று துவக்கி, அதை ஏதோ தவறுதலாக எழுதி விட்டது போல் பேனாவால் ஜாக்கிரதையாக, ஆனால் வேணுமென்றே அடித்தது தெரியும்படி, அடிக்கப்பட்டிருந்தது.

''நீங்கள் இருவரும் நான் ரூபாய் இருநூற்றை நான்கு தவணைகளில் செலுத்த ஒப்புக் கொண்டதையும் பிறகு தவறாமல் செலுத்தியதையும் கண்டு என்னை ஒரு மண்ணாந்தை என்று தீர்மானித்திருப்பீர்கள். நீங்கள் என்னிடம் சும்மா, வெறுமே கூலியில்லாமல் வேலை வாங்கத் திட்டமிட்டிருந்தீர்கள். ஆனால் அதே சமயம் வேறு ஒரு திட்டம் என் மனத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. உங்களைப்பற்றி நான் ஏற்கனவே கேள்வி யுற்றிருக்கிறேன். உங்களுக்குச் சரியான பாடம் கற்பிக்கத் திட்டமிட்டேன். உங்கள் விளம்பரம் வந்தது. வகையாய் மாட்டிக் கொண்டீர்கள்.

''நான் எப்போதுமே எதையுமே லாபமில்லாமல் செய்வதில்லை. சின்ன கெண்டை மீனைப் போட்டு, பெரிய சுறா மீனைக் கட்டாயமாக எதிர்பார்க்கும் தீர்க்கதரிசி நான்!

நேற்றுச் சாயங்காலம் என்னை எல்லாத் தஸ்தாவேஜிகளையும் முடித்து விட்டுச் செல்லச் சொன்னீர்கள். நீங்களா சொன்னீர்கள்? நான் சொல்லச் செய்தேன், என் காரியத்தைச் சித்தி செய்து கொள்ள! நீங்கள் அப்படிச் சந்தர்ப்பம் வழங்கியதற்கு உங்களுக்கு என் நன்றி.

தங்கள் உண்மையுள்ள,
சம்பத்.

பின் குறிப்பு: - என்னுடைய உண்மைத் தொழிலை நீங்கள் ஊகித்திருக்கலாம். என்னைப்பற்றி விசாரித்தால் எளிதில் தெரிந்து விடும். ஆனை ஆள் விழுங்கினால் நான் நிழலை விழுங்கும் பிரகிருதி. போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொன்னால்கூடத் தெரிந்துவிடும். ஆனால் உங்களுக்குப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக யோக்கியதை உண்டா? தைரியமுண்டா?''

கடிதத்தின் முடிவு வந்து விட்டதும், இருசகோதரர்களும் ஒருவரையொருவர் விழுங்கிவிடுபவர் போல் பார்த்துத் தள்ளாடினார்கள். உடனே திறந்து கிடந்த அலமாரியினுள் இருந்த பணப் பெட்டியைத் திறந்தார்கள். அதிலிருந்து வெள்ளைக் கரப்பு ஒன்று வெளியே பறந்து வந்தது. அதைத் தவிர அதில் ஒரு சிறிய கடிதம் கிடைத்தது. அந்தக் கடிதத்தில் 'ஸ்ரீமான்.... மிகுந்த மிக வந்தனத்துடன் பெற்றுக் கொண்டேன்' என்று எழுதி யிருந்தது. அதில் குறித்திருந்த தொகையைப் பார்த்ததும் இருவரும் மூர்ச்சித்துப் போய் விழுந்தார்கள்!




காதி வஸ்திராலயத்துக்குள் நுழைந்த எனக்கு ஒரே திகைப்பு! 'ஓ! புற்று ஈசல் மாதிரிக் குமைந்திருக்கும் கூட்டத்தில் நீந்தி, சிட்டத்தைப் போட்டு எப்படி வெளியேறப் போகிறோம்?' என்ற கேள்வியும் கூடவே பிறந்தது!

'க்யூ' முறையில் அடுக்கி வைத்திருந்த நூற்போர் புத்தகக் குவியலில் என் புத்தகத்தையும் சேர்த்தேன். எண்பத்தைந்து பேர்களுக்குப் பின்னால் என் புத்தகம்! 'சரி, மணி ஆறுக்குத்தான் வீட்டுக்குப் போகமுடியும்' என்று கணக்கிட்டுக் கொண்டேன். நெரிசலுக்கிடையே ஓர் ஓரத்தில் இடம் பிடித்து உட்கார்ந்தேன்.

என்னைச் சுற்றி நோட்டம் விட்டேன். அழகழகான துணிகள்; ராட்டைக் கருவிகள்! கதர்த் திட்ட சம்பந்தமான புத்தகங்கள்! நடுவே மகாத்மா காந்தியின் பெரிய படம்! படத்தில் என் பார்வை நிலைத்தது.

'காந்தித் தாத்தா எத்தனையோ திட்டங்கள் வகுத்தார் இந்தியாவுக்கு. நூல் நூற்புத் திட்டம் அதில் எத்தனை சிறந்தது! எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் அதனால் வாழ்கின்றன. உத்தமர்! போய்விட்டாரே?' என்று எண்ணமிட்டேன்.

நேரம் நகர்ந்ததுபோலவே ஒவ்வொருவராக நகர்ந்துகொண்டிருந்தனர். அங்கே கிளம்பிய பல விதச் சத்தங்கள் என் காதைச் செவிடாக்கின!

"ம்..ம். அவங்க அவங்க சிட்டங்களைப் பிரிச்சு ரெடியா

வெச்சிருங்க. சிட்டம் போட்ட வங்க சட்டுச் சட்டுனு வெளி யேறுங்க''—நூல் எடுப்பவரின் அதட்டல் குரல் இது!

''என்ன ஐயா? ப க வா ன் கொடுத்த கண்ணு புரு முட்டை மாதிரி இருக்கு. காலை மிதிக் கிறியே!''—கூட்டத்தில் ஒருவர்.

''சரிதான் நயினு! உமக்கும் கோழி முட்டைக் கணக்கால்லே கண்ணு இருக்குது''—கூட்டத்தில் இன்னொருவர்.

''கே. மணவாளன்!''

இந்தச் சத்தத்தை யெல்லாம் தூக்கியடித்து நூல் எடுப்பவரின் குரல் மேலெழுந்து கேட்டது. அதுதான் என் பெயர்!

''இதோ இருக்கேன், சார்'' என்றவாறு டென்னிஸ் பந்துமாதி ரித் துள்ளியெழுந்தேன். எட்டி நின்றபடியே சிட்டங்களை அவரை நோக்கி வீசினேன். அருகிலிருந்த ஒருவர் அதைப் பிடித்துக் கொடுத் தார்.

''எத்தனை சிட்டம், தம்பி?''

''இருபது சார்.''

''என்ன தம்பி? பதினறுதானே இருக்கு.''

''நல்லா எண்ணுங்க, சார்.''

''கண்ணிலே விளக்கெண்ணெய் போட்டுக்கூட எண்ணிவிட்டேன். பதினறுதான்.''

'இது என்ன? கொண்டு வந் ததோ இருபது. இருப்பதோ பதி னறு. நாலு சிட்டம்! ஒரு ரூபா யல்லவா போய்விட்டது. அடடா! அம்மாவுக்கு என்ன சொல்வது?' இதை நினைத்ததும் 'குப்'பென்று வியர்த்துவிட்டது. மௌனமாகக் கண்களைக் கசக்கினேன். பதினறைப் புத்தகத்தில் பதிந்துகொண்டு பாக்கிச் சில்லறையுடன் வெளியே வந்தேன். எப்படி நாலு சிட்டமும் காணமற்போனது என்று எனக் குப் புரியவேயில்லை.

ரஸ்தாவில் குனிந்தவாறே யோசித்துக்கொண்டு நடந்தேன். அதன் பலன்! விளக்குக் கம்பத் தடியில் என்னவோ செய்துகொண் டிருந்த ஒருவன்மேல் மோதிக் கொண்டுவிட்டேன்.

இருட்டி விட்டது. விளக்கு கள் ஒளி வீசிக்கொண் டிருந்தன, 'பார்க் பெஞ்சியில் உட்கார்ந்து யோசிப்போம்' என்று அருகி லிருந்த பார்க்கினுள் நுழைந்தேன்.

அங்கே சிறு கூட்டம். பலவித மான பேச்சுக்களால், நடந்தது என்ன என்பதை தெரிந்துகொண் டேன்.

''ஏன் சார், உங்க பர்ஸா போச்சு?''

''எவ்வளவு வெச்சிருந்திங் களோ?''

''அந்தப் பய அப்பவே என்னை 'நோட்' பண்ணினுன். நான்தான் 'அஸால்டா' இருந்துட்டேன்.''

அப்போது விளக்கடியில் மோதிக் கொண்டேனே, அவன் நினைவு வந்தது. அவன் கையில்கூட பர்ஸ் போன்ற ஒன்று இருந்ததாகத் தோன்றியது.

ஆ! அவனேதான்!

துள்ளிக் குதித்துக் கூட்டத்தில் நுழைந்தேன்.

''சார்! நான் வர்றபோது விளக்குக் கம்பத்தடியிலே ஒருத் தனைப் பார்த்தேன். ஒருவேளை அவனுக இருக்கலாம் சார்'' என் றேன்.

''என்ன, அப்படியா?''—ஏக காலத்தில் ஆச்சரியக் குரலை எழுப்பினுர்கள். நானே முன்னுல் நடந்தேன். அவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

கம்பத்தடியில் அவன் அங்கேயே தானிருந்தான். பர்ஸ் சொந்தக் காரரர் மெல்லச் சென்று 'லபக்' கென்று பிடித்து விட்டார் அவனை. அவன் கையிலிருந்து பர்ஸ் தொப் பென்று விழுந்தது.

''தம்பி! எடுத்து எண்ணிப் பாரு.''

எண்ணிப் பார்த்தேன்! ''ஐம்பது ரூபாய் எட்டணு இருக்கு, சார்!''

''நல்ல வேளை! இந்த மட் டோடே ஸ்டேஷன்லே கொண்டு தள்ளிடுவோம்'' என்றவாறே அவர் முஷ்டியை அவன் முதுகில் பாய்ச்சினுர்! 'கும், கும்—பளார், பளார்!' என்ற சப்த ஜாலங்கள் எழுந்தன! என் பொருளைத் தேடித் தருவாரில்லை! வேருெருவர் பொரு ளைத் தேடிக் கொடுத்துவிட்டேன்! எப்படி? கூட்டம் கலைந்தது. அவர் என்னை அழைத்துக்கொண்டு பக்

கத்து ஒட்டலுக்குள் நுழைந்தார். விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் நன்ருகப் பார்த்துக்கொண்டோம். சர்வர் வந்தான். ''ரெண்டு காப்பி'' என்ருர் அவர். என் பக்கம் திரும்பி, ''தம்பி! காதி வஸ்திராலயத்துக்கு நீ வந்தேயில்லே?'' என்ருர் திடீரென்று.

''ஆமாம். ஏன் சார்?''

''உனக்கு நாலு சிட்டம் குறையுமே''—எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ''உங்களுக்கு எப்படி அது தெரியும்?''

''அதை எடுத்தவனே நான்தானே!''

''என்ன, நீங்களா!''

இதற்குள் காபி வரவே இருவரும் பருகினேம்.

''தம்பி, உன் பேரு?''

''மணவாளன்.''

''மணவாளா! நீ நினைப்பே. இத்தனை பெரியவருக்கு எப்படித் திருட்டுப் புத்தி வந்திடுச்சு அப்படின்னு. நீ சிட்டங்களை வீசிப் போட்ட வேகத்திலே நாலு சிட்டம் என் பைக்குள்ளே விளுந்திடுச்சு. யாரும் கவனிக்கல்லே. வலிய வர்றதை விடவேண்டாம்னு என் கணக்கிலே சேர்த்துக்கிட்டேன். வெளியே வந்தப்புறம் என் தப்புத் தெரிஞ்சிச்சு. பிறகு பார்க்கலாம்னு விட்டுட்டேன்..'' ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டே வந்தேன்.

''பள்ளிக்கூட வாத்தியார் நான். சம்பளப் பணத்தோடே பார்க்கிலே இருக்கிறப்போதான் பர்ஸ் திருடு போச்சு. நான் ஒருத்தர் பொருளைத் திருடினேன். என் பொருள் அடுத்த படியா திருடு போச்சு. இந்த இரண்டு திருட்டாலே எனக்கு நல்ல பாடம்.''—அவர் குரல் உணர்ச்சி வசப்பட்டுக் கம்மிற்று.

''மணவாளா! உனக்குச் சேர வேண்டிய ஒரு ரூபாய் இந்தா. அதோடு வெகுமதி ஒரு ரூபாய்'' என்றவாறே என் சட்டைப் பைக்குள் திணித்துவிட்டார். என்ன செய்வது பிறகு? என் பொருளும் கிடைத்துவிட்டது!

---

# அற்பக் குருவி

வெகு காலத்துக்கு முன் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு ஒரு மந்திரியும் இருந்தான். அந்த ராஜா தினம் மந்திரியோடு குளத்தங் கரைக்குப் போவான். அங்கே ஒரு குருவி வசித்தது, அதற்கு ஒரு நாள் குப்பையில் சிறிய பொன் துண்டு ஒன்று அகப்பட்டது. அதைத் தன் கூட்டில் கொண்டு வைத்தது. காலையில் ராஜா குளத்தங்கரைக்கு வந்ததும் அவனைப் பார்த்து, ''ராஜா ராஜா! எனக்குள்ள பொன் உனக்கு உண்டோ?'' என்று கேட்டது. ராஜா பார்த்தான்.

''என்ன மந்திரி, இந்தக் குருவி இப்படிக் கேட்கிறதே?'' என்ருன். மந்திரிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு ஒரு வேலைக்காரனை விட்டு மரத்திலிருந்த கூட்டைச் சோதனை போடச் சொன்னுன். அதிலே பொன் துண்டு இருந்தது. அதை அவன் கொண்டு வந்து கொடுத்தான்.

மறுநாள் காலையில் ராஜாவும் மந்திரியும் குளத்துக்குப் போனுர்கள். குருவி உடனே, ''எனக்குக் கேடு கெட்டு என் பொன்னைத் திருடினுன் இந்த ராஜா!'' என்று கீச்சிட்டது. பக்கத்திலுள்ளவர்கள் கொல்லென்று சிரித்தனர். ராஜாவுக்கு வெட்கமாகிவிட்டது. ''என்ன மந்திரி, இப்படிச் செய்து விட்டாயே!'' என்ருன். மந்திரி வேலைக்காரனைக் கூப்பிட்டு அந்தப் பொன் துண்டைக் கூட்டில் திருப்பி வைத்துவிடச் சொன்னுன். மறுநாள் காலை ராஜாவும் மந்திரியும் வந்ததும் அந்தக் குருவி, ''எனக்குப் பயந்து என் பொன்னைத் திருப்பிக் கொடுத்தான் இந்த ராஜா!'' என்று உரக்கக் கூவியது. எல்லோரும் நகைத்தனர். ராஜா வெட்கப்பட்டுக் கொண்டு போய் விட்டான். குளத்தங்கரைக்கு அவன் அப்புறம் வருவதே யில்லை.

—(தென்னிந்தியக் கதைகள்) வி. பி. கிருஷ்ணசாமி, பி. ஏ., பி. எல்.

# தில்லி திலீப்

எஸ். ரங்கநாயகி

[கிட்டு, திலீப்—இரு பையன்கள். விச்சு, பாச்சு, மணி—நண்பர்கள். கிட்டுவின் அத்தை.]

## 1

விச்சு:—என்னடா கிட்டு, லீவ் நாளாச்சேன்னு எண்ணெய் குடிச்சியா? இல்லேன்னு பரீக்ஷை மார்க் ஏதாவது தெரிந்து விட்டதா?

பாச்சு: ஏய் கிட்டு, என்னமோ கேக்கருன், நீ பாட்டுக்குப் பதிலே சொல்லாமெ இருக்கியே. எதைப் பறி கொடுத்துட்டே?

கிட்டு: அட போங்கடா, உங்க விளையாட்டு எனக்குத் துளிக்கூட ரசிக்கலே. என் மன வேதனை உங்களுக்கு என்ன தெரியும்?

விச்சு: அச்சோ பாவம்! விஷயத்தைச் சொல்லு; எங்களால் முடிஞ்சதைச் செய்யரோம்.

கிட்டு: உங்களாலும் முடியாது, உங்க தாத்தாவாலும் முடியாது.

மணி: விஷயத்தைச் சொல்லாமெ சும்மாப் பேசுவாண்டா இவன்!

கிட்டு: அடுத்த தெருவிலே அண்ணுசாமி இருக்காரே தெரியுமா? அவர் வீட்டிலே அவர் மருமாளும், ஒரு தறிதலே வந்திருக்கு டில்லியிலிருந்து. என்னை எப்படியோ சிநேகம் பிடிச்சுண்டுட்டான். அவ்வளவுதான். தினப்படி இங்கு வந்து கொட்டம் அடித்து, நான் ஏதோ குருவிபோல காலணு அரையணு சேர்த்துப் பப்பர்மிட் வாங்கினுல் அதையும் அடித்துக் கொண்டு போய்விடுகிருன். இவனிடமிருந்து எப்படி விடுபடுவது என்று தெரியலே. லீவ் முடிந்ததும்தான் ஊருக்குப் போகப் போகிருனும். ஐயையோ, அதோ பாருங்க, அவனே வந்துட்டான்!

பாச்சு: அதோ கட்டை குட்டையாய் ஜிப்பாவும், பைஜாமாவும் போட்டுண்டு ஒரு பையன் வருகிருனே, அவனுடா?

கிட்டு: சாக்ஷாத் அவனேதான்.

விச்சு: இருக்கட்டும். நீ சும்மா தலேவலின்னு ஒரு நாடகம் போடு. அவனை நாங்க பார்த்துக்கரோம்.

திலீப்: (வந்துகொண்டே) அரே கிட்டு சாஹேப். . ஏ கிட்டு.

விச்சு: கிட்டுவுக்கு நல்ல தலேவலி, அவன் இப்ப வர முடியாது.

திலீப்: சுப், நான் எங்கேருந்து வந்திருக்கேன், தெரியுமா?

விச்சு: உங்க ஊர் டில்லின்னு முகத்தைப் பாத்தாலே தெரியுதே. அதைக் கேக்கணுமா?

திலீப்: வாட் டு யூ மீன்?

மணி: உங்க மீன், கறுவாடு பாஷையெல்லாம் கப்பலேறிப் போயிடுத்து. எங்களுக்குச் சுத்தத் தாய் பாஷைதான் பிடித்தம். இந்தியாவிற்குத் தலேநகர் டில்லி என்பதனுல் அங்கிருக்கும் உன்னையும் எல்லோருக்கும் தலேவன்னு நினேச்சுக்காதே.

திலீப்: ஷட்டப், எங்க டில்லியிலே இருக்கிறவங்க. .

விச்சு: தெரியும்டா, உங்க டில்லி சமாசாரம்.

திலீப்: உங்களோடு என்ன பேச்சு? நான் கிட்டுவைப் பார்க்கிறேன். (எல்லோரும் உள்ளே போகின்றனர். கிட்டு தலேவலி போல் 'ஹா. . ஹூ' என்று சுத்துகிருன். திலீப் அவன் தலேயில் கை வைக்கிருன்.)

திலீப்: ஏண்டா கிட்டு, தலேவலியா? அச்சோ பாவம்! எங்க தில்லியிலே தலேவலின்னு. .

விச்சு: எங்க மதராஸிலே தலேவலின்னு அவர்களேத் தொந்தரவு செய்யமாட்டோம்.

திலீப்: கபர்தார், உன்னிடம் பேசவில்லே. ஏண்டா கிட்டு,

வீட்டில் ஒத்தரும் இல்லையா? இந்த வால்களை இழுத்து வைத்துக் கொண்டால் தலைவலி போனது போல்தான். ஏண்டா தலையிலே ஒரு கட்டு போடுவதற்கென்ன? இரு, என் கர்சீப்பைக்கட்டுகிறேன்.

கிட்டு: அச்சச்சோ வேண்டாமே, தலையைத் தொடாதே ஹா.. அம்மா..

திலீப்: அரே பாய், தலைக் கட்டு சும்மா நிமிடத்திலே வலியைப் போக்கும். இதெல்லாம் பஸ்ட் எயிடு.

கிட்டு: அச்சச்சோ, வேண்டாம். இந்தத் தலைவலி சாயங்காலம் போய்விடும்.

திலீப்: கிட்டு மகராஜ், நான் சொல்றதைக் கேள். என் கையால் உன் தலையைப் பிடித்துவிடுகிறேன்.

மணி: அச்சச்சோ, பிறகு கேட்கவே வேண்டாம். யானைக் குட்டி மாதிரி உன் கையாலே பிடிச்சா அவன் மூளை சட்டினியாகி கணக்கு இங்கிலீஷ், எல்லாவற்றிலும் வாத்து முட்டை வாங்க வேண்டியதுதான்.

திலீப்: டேய் கிட்டு, அவன் பேச்சைக் கேட்காதே. நான் மெதுவாகப் பிடிக்கிறேன். (பிடித்து விடுகிறான்.)

கிட்டு: (அந்த வலி பொறுக்க முடியாமல்) ஹா..விட்டுடு..ஆ.. அப்பா..அம்மா.

திலீப்: சட், என்ன வீக் பாய். இந்தச் சிறு அழுத்தல் பொறுக்க முடியவில்லை. எங்க தில்லியிலே ஒவ்வொரு பையனும்..

விச்சு: ஒரு பூசணிக்காய். எங்க மதராஸிலே ஒவ்வொரு பையனும் அவரைக் காயாக இருந்தாலும் சத்து ஜாஸ்தி. மூளை அதிகம். எதிராளியின் குணமறிந்து நடப்போம்.

திலீப்: யூ இடியட், ஷட் அப். பேசினால் பல்லை உதிர்த்துவிடுவேன்.

பாச்சு: வெரி குட். அவன் பல்லெல்லாம் சொத்தை. டாக்டரே பிடுங்க வேண்டுமென்றார். காசில்லாமல் நீ தட்டி விட்டால் ரொம்ப நல்லது.

திலீப்: தில்லியிலே இப்படிப் பேசினா..

விச்சு: மதராஸிலே இப்படிப் பேசினா வந்தவர்கள் மரியாதை யாகப் போய் விடுவார்கள்.

திலீப்: நன்றி கெட்டதனம் எனக்குக் கிடையாது. ஒரு பிரண்டு தலைவலியால் துடிக்கும்போது பார்த்து மௌனமாகப் போக முடியாது. (சட்டென) டேய் கிட்டு, இப்பதான் நினைவு வருகிறது. என் மாமாவுக்குச் சுக்கு வாங்கத் தான் கடைக்குப் போனேன். திரும்பி வரும்போது இங்கே நுழைஞ்சேன். நல்லவேளை, அந்தச் சுக்கு என் பாக்கெட்டில்தான் இருக்கு. அதைத் துளி நசுக்கி ஜலத்தில் போட்டுக் குடி.

(சுக்கை நசுக்கி ஜலத்தில் போட்டுத் தருகிறான்)

கிட்டு: ஆ..காரமாக இருக்கிறது.

திலீப்: சற்றுப் பொறுத்துக் கொள். எங்க தில்லியிலே..

மணி: எங்க மதராஸிலே தலைவலின்னா தூங்கச் சொல்வோம்.



திலீப்: ஸாரி, மிஸ்டர். உன்ளுேடு நான் பேசலை. ஏ கிட்டு, ஒன் மினிட், ஓடிப் போய் மாமா விடம் ஒரு தலைவலி மருந்து இருக்கு, வாங்கி வறேன்.

(வீட்டுக்கு ஓடுகிருன்.)

கிட்டு: அப்பாடி, கொஞ்ச நேரத்துக்காவது தொலைஞ்சான். அப்பப்பா, தலைவலியா நடிச்சதும் போதும், இவனிடம் அல்லல் பட்டதும் போதும்.

பாச்சு: டேய், இந்த ஆசாமி யெல்லாம் அடித்து விரட்டக்கூடிய ஆசாமியல்ல. நான் ஒன்று சொல்றேன். ஒரு நாள் நன்னு அவமானப் படுத்திவிடு. திரும்பி வரவே மாட்டான். ஆசாமி நல்ல சாப்பாட்டு ராமனுக இருப்பான் போலிருக்கு. அதனுல் ஒரு பெரிய விருந்துக்குக் கூப்பிட்டு..

கிட்டு: சரிதான் விருந்துக்கும் கூப்பிட்டுவிட்டால் திரும்பி வீட்டுக்கே போகமாட்டான்.

பாச்சு: ஏ அவசரக் குடுக்கை, விஷயத்தை முழுக்கக் கேள். விருந்துக்குக் கூப்பிட்டுவிடு. வீட்டிலே அம்மா, அப்பா இல்லை. ஊருக்குப் போயிருக்கிருர்கள். அத்தை மட்டும்தான் இருக்கிருள். நாளைக்கு ஏகாதசியாதலால் அவளைத் தாஜா செய்து கோவிலுக்கு அனுப்பிவிடு. ஆனுல் ஒரு விஷயம்; அவன் வரும்போது உன் வீடு பூட்டியிருக்க வேண்டும்.

விச்சு: உனக்கு எங்க வீட்டிலே சாப்பாடு போட்டுவிடுகிருேம்; சரிதானே?

கிட்டு: சரிதான். அவன் காலை ஏழு மணிக்கே விருந்து சாப்பிடத் தயாராக வந்து விடுவான். அதனுல் ஏழு மணியிலிருந்தே வீடு பூட்டி யிருக்க வேண்டும்.

பாச்சு: ஆனுல் லீவு நாள் ஆனதனுல் எங்க வீட்டிலே காலை வேளையில் பழையதுதான் போடுவா. அந்தப் பழையதுதான் உனக்கும் கிடைக்கும்.



கிட்டு: ஏதோ ஒன்று வயிற்றுக்குக் கிடைத்தால் போதும். இந்தத் திலீப் அவமானப்பட்டுத் திரும்பி வராமலிருந்தால் போதும். அதோ..அவன் மறுபடி மருந்துப் பாட்டிலுடன் திரும்பி வருகிருன். நான் இந்தப் பீரோவுக்குப் பின்னுல் ஒளிந்து கொள்கிறேன். நீங்கள் அவனிடம் சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிடுங்கள். அதோடு நான் விருந்துக்குக் கூப்பிட்டதாகவும் சொல்லி விடுங்கள். (ஒளிந்து கொள்கிருன்)

திலிப்: கிட்டு, கிட்டு!

மணி: அவன் இல்லைடா, அவன் சித்தப்பா வந்து அவசரமாகக் கூட்டிக் கொண்டு போய்விட்டார். சாயங்காலம்தான் வருவான்.

திலீப்: அரே ராம், தலைவலியுடன் ஊர் சுற்றக் கிளம்பிவிட்டானு? சரி, நான் சாயங்காலம் வருகிறேன்.

விச்சு; வேண்டாம், வேண்டாம். அவன் ஒருவேளை சித்தப்பா



பிரசங்கி: தலைவர் அவர்களைப் பற்றி உங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. சுருங்கச் சொன்னால் 'சுயநலம்' என்ற வார்த்தையே அவர் அகராதியில் இல்லை....

**தலைவர்:** ....இன்னும் சொல்லப் போனால் என்னிடம் அகராதியே இல்லை.

—பி. கலாசாமி, தூத்துக்குடி.

---

வீட்டிலேயே இன்று இரவு இருந்து விடுவான். இன்னொரு விஷயம். நீ இவ்வளவு உதவி செய்வதைப் பற்றி அவன் ரொம்ப உருகிப் போய்விட்டான். உன்னை நாளைக்கு அவன் வீட்டிலே விருந்துக்கு வரச் சொன்னான்.

திலீப்: விருந்துக்கா, வெரிகுட், நாளைக் காலை கண்டிப்பா வந்து விடுகிறேன். எங்க தில்லியிலே விருந்துன்னா..

பாச்சு: எங்க மதராஸிலே எங்களுக்கு நிறைய வேலை இருக்கு. நாங்க போறோம்.

## 2

கிட்டு: அத்தை..அத்தை!

அத்தை: சும்மா சும்மா இப்படிக் கூப்பிடாதேன்னு சொல்லலை நான்?

கிட்டு: அத்தை. அத்தை..

அத்தை: அட எழவே, சமாசாரத்தைச் சொல்லேன்!

கிட்டு: இன்று ஏகாதசி.

அத்தை: அதுக்கென்ன இப்போ? பலகாரத்திற்கு அரிசி உப்புமா செய்யப்போறேன்,

கிட்டு: பலகாரத்தைக் கேக்கலை. நீ கோவிலுக்குப் போகலை?

அத்தை: சரிதான்; நான் கெட்ட கேட்டுக்குக் கோவில்தான் பாக்கி. கையில் காலணா இல்லை.

கிட்டு: நான் பஸ் சார்ஜ் கொடுக்கிறேன். இன்று திருவல்லிக்கேணி கோவில்லே விசேஷமாம். போயிட்டு வா.

அத்தை: மகராஜனா இருக்கணும். சரி இரு, பலகாரத்தைச் செய்துட்டுக் கிளம்பறேன்.

கிட்டு: சரிதான், பலகாரத்திலே உட்கார்ந்தா ரொம்ப நாழியாகிவிடும். எனக்கு இன்று சிநேகிதன் வீட்டில் விருந்துச் சாப்பாடு. அதனால் எனக்கும் சமைக்கவேண்டாம்.

அத்தை: இதோ போறேண்டா குழந்தை. துணியைத் துவைத்து உலர்த்திவிட்டுப் போகிறேன்.

கிட்டு: சரி, அப்படியானால் நான் போகிறேன். நீயும் சீக்கிரம் கிளம்பிப் போய்விடு.

## 3

(கிட்டுவும் சிநேகிதர்களும் விச்சுவின் வீட்டில் சாப்பிட்டுவிட்டுத் திரும்புகிறார்கள்.)

கிட்டு: அட இதென்னடா, அத்தை அதற்குள் திரும்பிவிட்டாள்? (உள்ளே நுழைந்தபடி) அத்தை, என்ன சுவாமி தரிசனம் ஆச்சா?

அத்தை: சுவாமி தரிசனமா? அதற்கு இன்று பிராப்தமில்லை.

கிட்டு: (திடுக்கிட்டு) பிராப்தமில்லையா, அப்படியானா நீ போகலையா?

அத்தை: நான் புறப்பட்டு வாசல்லே போனேனா, பூனை குறுக்கே போச்சு. இது ஏதுடா கஷ்டம்னு மறுபடி உள்ளே வந்து கால்மணி கழிச்சுப் புறப்பட்டேன். எதிரிலே விறகு வெட்டறவன் வந்தான். வாசல்லே ஆத்திக்கீரை போச்சு. அவனைக் கூப்பிட்டுப் பேரம் பண்ணி, காலணாவுக்கு

வாங்குவதற்குள் மணி ஆயிடுத்து. சரி, 9 மணிக்கு மேல் கோவில்லே பலகாரக் கடை மூடிவிடுவான்னு பலகாரம் செய்துட்டுக் கிளம்பலாம்னு அடுப்புப் பத்த வச்சேன். வாசல்லே குரல் கேட்டது.

கிட்டு: சரிதான், அத்தைக்கு ஏகாதசியானாலும் பலகாரம் மறக்காது.

அத்தை: ஏண்டா தறிதலே. ஏதோ கால் படி உப்புமாதான் என் ஆகாரம். உங்களைப் போலவா?

பாச்சு: அவன் கிடக்கறான் பாட்டி. மிச்ச விஷயத்தைச் சொல்லுங்க.




அத்தை: ஒரு பையன் வந்தான். அவனிடம் 'கிட்டு இல்லே' என்று சொன்னதும் அந்தப் பையன் 'அதனால் பாதகமில்லே. என்னை இங்கே சாப்பிடச் சொன்னான். அதற்காக வந்தேன்' என்று சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டான்.

கிட்டு: நான் சிநேகிதன் வீட்டுக்குச் சாப்பிடப் போயிட்டேன்னு சொன்னியா?

அத்தை: நன்னாயிருக்கு, அப்படிச் சொல்வேனா? 'இதோ வந்து விடுவான்; இரு' என்றேன்; அவனோடு பேச்சுக் கொடுத்ததிலிருந்து பெரிய மனுஷன் வீட்டுப் பிள்ளைன்னு தெரிஞ்சுண்டேன்.

கிட்டு: எல்லாம் கிடக்கட்டும். அவன் உடனே வீட்டுக்குப் போனானா, இல்லையா?

அத்தை: நன்னாச் சொன்னே. அவனைச் சும்மா அனுப்பலாமா? உடனே அடுப்பைப் பத்த வைத்து ஆழாக்கு அரிசி களைந்து வைத்தேன். ஸ்டவ் எறிய விட்டு அதில் சாம்பாரும் வறுவலும் செய்தேன். ஹீட்டரில் ஒரு கறி வைத்தேன். அதிலேயே துளி பாயசமும் மைசூர்ப் பாகும் செய்தேன். ஒரு பிடி பருப்பு ஊறவைத்து வடை தட்டி போட்டதும் மணி 10 தான் ஆச்சு. 'சாப்பிடடா' என்றேன். 'கிட்டு வரட்டும்' என்றான்.

கிட்டு: (எரிச்சலுடன்) கிட்டுவுக்குச் சிநேகிதன் வீட்டில் பழையது சாப்பாடு என்றாயா?

அத்தை: உன்னை விட்டுக் கொடுத்து அப்படிப் பேசுவேனா? அவன் அவசரமாகச் சித்தப்பா வீட்டுக்கு போய் இருக்கான். வர நேரமானாலும் உன்னைச் சாப்பிட்டுவிடும்படி சொன்னான் என்று சொல்லி, சாப்பாடு போட்டேன்.

கிட்டு: நாசமாப் போச்சு.

அத்தை: என்னடா நாசமாப் போச்சு? மீதியிருந்த வறுவல், வடையையும் கையில் கட்டிக் கொடுத்தேன், உன்னோடு சேர்ந்து சாப்பிடலைன்னு அந்தப் பிள்ளைக்கு ரொம்பக் குறை. அதனாலே நாளைக்கும் சாப்பிடவரச் சொன்னேன்.

கிட்டு: ஆ ....நிஜமாகவா!

(மூர்ச்சிக்கிறான்)




கல்கத்தாவின் ஜனநெருக்கடியான தெருவில் பத்து வயதுள்ள சிறுவன் அநாதையாக நின்றுகொண்டிருந்தான். அவன் அழுது அழுது வழிந்த கண்ணீர் துடைப்பாரற்றுக் கன்னத்திலே காய்ந்து கறை ஏற்படுத்தியிருந்தது. பரட்டைத் தலையிலே பறந்துகொண்டிருந்த மயிர் எண்ணெயைக் கண்டு எத்தனை காலம் ஆயிற்றோ? கட்டுமஸ்தான அந்தப் பாலகன் கந்தல் துணியுடன் காட்சி அளித்தான். வயிற்றைப் பசி கிள்ளியது. நாலாபுறங்களிலும் உணவுப் பொருள்கள் கண்ணைக் கவர்ந்தன. ஆனால் அவையெல்லாம் விற்பனைக்கு அல்லவா வைக்கப்பட்டிருந்தன!

பையன் கடைக்காரனிடம் கெஞ்சினான். ஆனால் அவன் வியாபாரத்திலேதான் கண்ணாயிருந்தான். பையனை முறைத்துப் பார்த்தான். பாலகன் பயந்து அப்பால் நகர்ந்தான். மற்றொரு கடைக்காரன் எரிந்து விழுந்தான். இன்னொரு கடையிலும் இதே நிலைதான். ஆனால் காசைக் கண்டால் கடைக்காரர்கள் ஆவலுடன் விசாரிப்பதும் சாமான்களைப் பணிவுடன் தருவதையும் பாலகன் கவனித்துக் கொண்டே சென்றான். சிற்சில சமயம் யாராவது இரக்கம் கொண்டு ஏதாவது கொடுப்பார்கள். ஆனால் அப்படி வாங்கி உண்பதில் பசி தீர்ந்தாலும் அது உடலில் பிடிக்கவில்லை. மனத்திற்கும் திருப்தியளிக்கவில்லை. காசு கொடுத்து வாங்கிச் சாப்பிடும் பெருமையை அடைய அவன் உள்ளம் ஆவலாய்ப் பறந்தது.

ஆகவே அவன் வருவோர் போவோரிடம் 'காசு' கேட்கத்

தொடங்கிவிட்டான். காலணு, அரையணு கிடைப்பதைக்கொண்டு ஏதாவது வாங்கித் தின்று பொழுதைப் போக்கினுன். நடைப்பாதையிலே கூறு கூருகக் காய்கறிகள், கடலே, பழங்கள் வைத்து விற்றுக்கொண்டிருப்பவர்களைப் பார்த்துப் பையன் ஏங்கினுன். நாமும் இப்படி ஏதாவது வியாபாரம் செய்து மானத்துடன் ஏன் வாழக்கூடாது என எண்ணுவான். ஆனல் முதலுக்கு என்ன செய்வது?

ஒரு பெரியவர் அவ்வழியாக வந்தார். பையன் அவரை அணுகி, ''ஐயா, ஒரு காலணுக் கொடுங்கள்!'' எனக் கெஞ்சினுன். அவர் அவனே மேலும் கீழும் உற்றுப் பார்த்தார். அவனது பரிதாபநிலே அவர் மனத்தில் என்னமோ செய்தது. பெரியவருக்கு அவன் மேல் இரக்கம் பிறந்தது. அவர் அவனே வினவினுர்,

''காலணு வாங்கி என்ன செய்வாய்?''

பையன், ''ஏதாவது வாங்கித் தின்பேன்'' என்ருன்.

பெரியவர், ''நல்லது'' அரையணு கொடுக்கிறேன் என்று வைத்துக் கொள், அப்பொழுது என்ன செய்வாய்?''

''பையன் ஒரு காலணுவுக்கு இன்றும் ஒரு காலணுவுக்கு நாளேக்குமாக ஏதாவது வாங்கித் தின்பேன்'' என்ருன் பையன்.

இந்தப் பதில் பெரியவரைச் சிந்தனைக்குள்ளாக்கியது. நாளேக்கு என்ன செய்வது என்பதைப் பையன் இன்றைக்குத் தெரிந்து கொண்டிருக்கிருன். இதுதானே மனிதவர்க்கம் கண்ட உண்மை! உடலில் வலுவுள்ள வரையில் உழைத்துப் பின் நாளே முதுமைப் பருவத்தில் உட்கார்ந்து சாப்பிடப் பணம் சேர்த்து வைக்கவேண்டிய கடமை இருக்கிறதல்லவா? நமது வீட்டுக்கு உறவினர்கள் வந்திருக்கும் பொழுதோ அல்லது திருவிழாக்களின் சமயமோ நமக்கு ஏதாவது பணம் கிடைத்தால் நாம் என்ன செய்கிருேம்! அன்றைக்கே அவற்றைக் காலி செய்யாவிட்டால் இரவில் தூக்கம் வருமா? ஆகவே அந்தச் சிறுவனின் இந்த விடை பெரியவரை மிகவும் கவர்ந்தது.

அவர் பாலகனே மறுபடியும் வினவினுர்: ''அது சரி. நான் ஓர் அணு கொடுத்தால் என்ன செய்வாய்?''

பையனிடம் விடை தயாராக இருந்தது. உடனே அவன் மொழிந்தான்: ''ஓர் அணுவுக்கு மாம்பழங்கள் வாங்கி விற்பேன். அதில் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு சாப்பிடுவேன். மறுபடியும் மீதிக்குப் பழங்கள் வாங்கி விற்பேன்.'' பெரியவர் எதிர்பார்த்தபடி பையனிடம் விவேகமும் உழைக்கும் தன்மையும் இருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்வெய்தினுர். அவர் அவனிடம் முழுசாக ஒரு ரூபாய் கொடுத்துச் சென்ருர்.

பல ஆண்டுகள் உருண்டோடின. ஒரு நாள் மாலே அப்பெரியவர் கல்கத்தாவின் கடைத்தெருவின் வழியாகச் சென்றுகொண் டிருந்தார். அப்பொழுது ஒரு கடையில் உட்கார்ந்து கொண்டிருந்த வாலிபனெருவன் அவரை அடையாளம் தெரிந்துகொண்டு விரைந்து ஓடி வந்தான். தன் மேல்துண்டை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு நடுத்தெருவில் அவர் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினுன். பெரியவர் ஒன்றும் புரியாமல் பிரமித்து நின்ருர். குனிந்து அவ்வாலிபனைத் தூக்கினுர். அவன் அவரிடம் பணிவுடன் பகர்ந்தான். ''இதுதான் தங்களுடைய கடை. தயவு செய்து இங்கே வரவேண்டும். நான் தங்களிடம் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்'' என்ருன். அவனது கண்களில் கண்ணீர் முட்டிக்கொண்டு நின்றது. பெரியவர் பேசாமல் அவன் பின் சென்று கடையினுள் ஓர் பலகையில் அமர்ந்தார். பையன் அவர் காலடியில் உட்கார்ந்துகொண்டு உருக்கமாக நன்றி ததும்பும் குரலில் சொல்லத் தொடங்கினுன்:

''இன்றைக்குப் பல வருஷங்களுக்கு முன்னுல் நான் இந்தத் தெருவில் ஒரு பிச்சைக்காரனுக இருந்து வருவோர் போவோரிடம், 'காலணு அரையணு கொடுங்கள்' என்று மானமிழந்து கெஞ்சிக்

கேட்டு வயிறு வளர்த்து வந்தேன். ஒரு நாள் தங்களிடமும் இவ்வாறு கேட்ட சமயத்தில் நீங்கள் என்னிடம் சில கேள்விகள் கேட்டுவிட்டு ஒரு ரூபாய் கொடுத்தீர்கள். நான் அதைக் கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கினேன். கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து இச் சிறு கடைக்கும் எஜமானனுனேன். இது உங்களுடைய கடை. நான் உங்களது ஊழியன். உங்கள் தயவால் தெருவில் பிச்சைக்காரனுகத் திரிந்த நான் இன்று நாலு பேருக்கு மத்தியில் மானமுடன் மனிதனுக வாழ்கிறேன். நான் உங்களுக்குக் கடமைப்பட் டிருக்கிறேன்.''

இவ்வாறு உணர்ச்சி வேகத்தில் பேசிக்கொண்டே சென்ற வாலிபன் மேலே பேச முடியாமல் அவர் காலைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் வடித்தான். பாவம், பெரியவர் ஒன்றுமே பேசமுடியாமல் திணறிப் போய்விட்டார். பேச வாய் திறந்தார். நா எழவில்லை. கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக் கொண்டே பெரியவர் வாலிபனை அன்புடன் அணைத்துக் கொண்டு மௌனமாயிருந்தார். இவ்வாறு இருவருமே பேச முடியாமல் அன்புப் பிணைப்பில் கட்டுண்டு இருந்தார்கள்.

அந்தப் பெரியவர் வேறு யாருமில்லை. வங்காளத்தில் மிகப் பெரிய மனிதராகப் போற்றப்பட்டு வந்த பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகரர்தான். வித்யாசாகரரைப் போன்ற ஒரு பெரிய மனிதர் சாதாரண ஒரு சிறு கடையில் உட்கார்ந்து கொண்டு அக் கடைக்காரனிடம் உறவாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த அக்கம் பக்கத்திலுள்ள பெரிய கடைக்காரர்களுக்கு மிகவும் அதிசயமாக இருந்தது. ஆம், உலக சமுத்திரத்தின் மேல் அலைகளிலே ஆடம்பரமாக நீந்திக்கொண் டிருப்பவர்களுக்கு அதனடி ஆழத்திலுள்ள முத்துக்களையும் ரத்தினங்களையும் எப்படிக் காணமுடியும்! அன்பு, நன்றி போன்ற உயர் பண்புகளைக் காண வேண்டுமென்றால் ஆழ் கடலின் அமைதியான அடித்தளத்திற்கல்லவா செல்லவேண்டும்!

## அருமையான சம்பவம்

வெகு வேகமாகச் சைக்கிளை விட்டுக்கொண்டு வந்தான் கந்தசாமி. தெருவின் திருப்பத்தில் அவன் நுழைந்ததும் போலீஸின் ஊதுகுழல் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அவனுக்குச் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டிருந்த கான்ஸ்டபிள் தம்புசாமி, ''சைக்கிளை நிறுத்தப்பா'' என்று கூறிக்கொண்டே அவனருகில் வந்தான்.

''அட சட், இதென்னடா சனியன். பெரிய தொல்லையாக இல்லே போயிட்டுது. நேரங் கழிச்சுப் போனு எசமானரு வேறே கோவுச்சுக்குவாரே'' என்று முணுமுணுத்தான். தம்புசாமி தன்னருகில் வந்ததும், ''எதுக்குச் சைக்கிளை நிறுத்தச் சொன்னீங்க?'' என்ருன்.

''சைக்கிள்ளே லைட் எங்கே?'' தம்புசாமியின் கேள்வி இது.

''இல்லீங்க.''

''அப்போ நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் ஒழுங்காப் பதில் சொல்லணும், தெரிஞ்சுதா?''

''சரிங்க.''

''உன் பேர் என்ன?''

''கந்தசாமி.''

''எங்கே இருக்கிறே?''

''கம்மாளத் தெருவிலீங்க.''

''என்ன வேலை செய்யறே?''

''எங்க எசமானருக்குத் துணி துவைச்சுப் போடற வேலைங்க.''

''இது உன் சைக்கிளா?''

''இல்லீங்க. எங்க எசமானருடையதுதான். காய்கறி வாங்கியாறச் சொன்ருரு; எடுத்துக்கிட்டு கிளம்பினேன்.''

''உங்க எசமானரு என்ன வேலை செய்யருரு?''

''அவரு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருங்க.''

கடைசி பதிலைக் கேட்டதும் தம்புசாமி அரை நிமிஷத்திற்கு அப்படியே அசையாது நின்றுவிட்டான். அப்புறம் அவன் போன இடமே தெரியவில்லை.

—தே. லக்ஷ்மிநரசிம்மன், விழுப்புரம்.

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

**எஸ். ஹரிஹரபுத்திரன், ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**மீன்** முட்டையிட்டு, அது தன் முட்டையைப் பார்த்தவுடன் முட்டை பொரிந்து குஞ்சாகி விடுமா?

**ஆ**காது. மற்ற முட்டைகளைப் போல் மீன்களின் முட்டையும் முதிர்ந்த பின்புதான் குஞ்சு பொரிக்கும். அநேக வகை மீன்கள் முட்டையிட்ட பின் அம்முட்டைகளைப் பற்றிக் கவனிப்பதே இல்லை. ஆனால், சில வகை மீன்கள் கூடு கட்டுகின்றன; அந்தக் கூடுகளில் தங்கள் முட்டைகளை இடுகின்றன. முட்டைகள் குஞ்சு பொரிக்கும்வரை அவைகளை மற்ற மீன்கள் தின்று அழித்துவிடாதபடி அவற்றைப் பாதுகாக்கின்றன. அவை குஞ்சு பொரித்த பின்பும் கூடச் சிறிய மீன் குஞ்சுகள் சற்றே பெரிதாகித் தம்மைப் பாதுகாக்கத் திறமை பெறும்வரை அவற்றைக் காப்பாற்றி வருகின்றன.

**வி. ஸ்ரீநிவாஸன், மதுரை.**

**இ**டி, மின்னல் தாக்குதலை எதிர்க்கச் செய்யப்பட்டிருக்கும் கருவியின் அமைப்பு, செய்கை, குறிக்கோள் என்ன?

**அ**ந்தக் கருவியின் பெயர் இடிதாங்கி. இதற்கு 'மின்தாங்கி' என்றும் பெயர் உண்டு.

இது தாமிர உலோகத்தால் செய்யப்பட்டது. தாமிரம் மின்சாரத்தை மிக நன்றாகக் கடத்தும் பொருள்களில் ஒன்று. கட்டடத்தின் உச்சியில் இந்தக் கருவி நுனியில் இரண்டு மூன்று கூரிய முனைகளை உடையதாக அமைந்திருக்கும். கூரிய முனைக்கு மின்சாரத்தைச் சிறிது சிறிதாக அவ்வப்போது ஏற்கும் திறமை உண்டு. இடி தாங்கிக் கம்பியை அல்லது பட்டையைக் கட்டடச் சுவரின் வெளிப்புறமாகக் கீழே இறக்கி, அதன் மறு முனையைத் தரையில் ஆழமாக - எப்பொழுதும் ஈரமுள்ள இடம்வரை - பதிப்பார்கள். மேகத்தில் திரளும் ஒளி இடிதாங்கியால் ஏற்கப்பட்டு மெல்லென நிலத்தில் நழுவி மறைந்துவிடும். கட்டடத்துக்குச் சேதம் ஏற்படாது.

**முகம்மது அலி, இலுப்பூர்.**

**உ**லகத்திலேயே தலை சிறந்த விஞ்ஞானி யார்?

பழங்காலத்தில் இப்படிப்பட்ட ஒரு கேள்விக்கு விடை யளிப்பது சற்றே எளிதாக இருந்திருக்கலாம். ஏனென்றால், அக்காலத்தில் அறிவுத் தொகுதியை விஞ்ஞானம் என்று சொல்லி வந்தார்கள். அப்படிப்பட்ட தொகுதியின் அளவும் அத்தனை பெரிதன்று.

இந்தக் காலத்தில் விஞ்ஞானமானது மிகப் பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்டது; மிக மிகப் பெரிதாகப் பரவிவிட்டது; எத்தனையோ பெருங்கிளைகளாகப் பிரிந்துவிட்டது. ஆகையால், பற்பல துறைகளில் உழைத்துப் புகழ் பெற்றுவரும் விஞ்ஞானிகளில் யார் பெரியவர் என்று தீர்மானிப்பதற்கு ஒரு பொது அளவுகோல் கிடையாது.

பழங்காலத்து விஞ்ஞானிகளில் அரிஸ்டாட்டில் மிகச் சிறந்தவர் என்று பலர் கொண்டாடினார்கள். ஆர்க்கிமீடீஸ் மிகச் சிறந்தவர் என்று சிலர் வாதாடினார்கள். பிற்காலத்தில் இன்னும் எத்தனையோ விஞ்ஞானிகள் தோன்றினார்கள். உதாரணமாக, கலீலியோவைக் கூறலாம். நியூட்டன் மிகச் சிறந்த விஞ்ஞானி: ஐன்ஸ்டைன் என்பவரும் மிகச் சிறந்தவர். இவர்களில் சிறந்தவரை யாரால் சீர்தூக்கிப் பார்க்க முடியும்?

**மா. பாபு, ஈரோடு.**

**உ**லகில் ஆங்கில நூல்கள் அதிகமா? பிரெஞ்சு நூல்கள் அதிகமா?

**ஆ**ங்கில நூல்கள்தான் அதிகம். ஆங்கிலத்தின் தாய் நாடாகிய இங்கிலாந்து தவிர, அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, இந்தியா முதலிய நாடுகளிலும் ஆங்கிலத்தில் நூல்கள் வெளியாகின்றன.

**எஸ். ஸ்ரீநிவாஸன்,**
**கோடம்பாக்கம்.**

**த**ண்ணீரில் வாழும் மிருகங்களில் அதிகப் பலமுடைய மிருகம் எது?

**த**ண்ணீரில் வாழ்பவைகளில் எல்லாம் அதிகப் பலமுடைய பிராணி திமிங்கிலம். ஆனால், கேள்வியில் மிருகம் என்ற சொல் வழங்கப்பட்டிருக்கிறது. மிருகம் என்ற சொல்லுக்கு அகராதிப்படி பல பொருள்கள் உண்டு.

ஆனால், சாதாரணமாக நாம் நாலு கால் உள்ள பிராணிகளையே மிருகம் என்கிறோம். அப்படியானால் பாதி நீரிலும் பாதி நிலத்திலுமாக வாழும் நீர் யானைதான் மிகவும் பலமுடைய மிருகம். அடுத்தபடியாகப் பனிக் கரடியையும், முதலையையும் சொல்லலாம்.

**இ. முத்துகிருஷ்ணன், பணகுடி.**

**வி**ஞ்ஞான சம்பந்தமான பாடங்களையோ, அல்லது அதன் மொழிகளையோ கண்டு பிடித்தவர் யார்?

**வி**ஞ்ஞான விஷயங்களைக் கண்டு பிடித்தவர்கள் அந்த விஷயங்களைத் தம்மால் கூடியவரையில் தெளிவாக வெளியிட்டு வந்தார்கள். அந்த விஷயங்களை வெளியிடுவதற்கேற்ற சொற்களைப் பொதுவாக அவர்களே வழங்கி வந்தார்கள்.

சில வேளைகளில் இந்தச் சொற்கள் பிறரால் ஒப்புக்கொள்ளப்பட்டுப் பலராலும் வழங்கப்பட்டன. உதாரணமாக, ரசாயன மூலகங்கள் பெரும்பான்மையும் இவ்வாறு தான் பெயர் பெற்றன.

வேறு சில பொருள்களுக்குப் பல தடவை பெயர் மாறி வந்திருக்கிறது.

சில பொருள்களுக்கு அறிஞர்களின் துணையைக்கொண்டு நாமகரணம் செய்வதும் உண்டு. உதாரணமாக, நாம் தூரதிருஷ்டிக் கண்ணாடி என்று சொல்லும் கருவியைச் சொல்லலாம். இதை முதன் முதலாக முரடாக அமைத்தவர் லிப்பெர்ஷே. இதை விஞ்ஞான முறையில் நன்கு அமைத்தவர் கலீலியோ. ஆனால் டெலிஸ்கோப்பு (Telescope) என்னும் பெயர் கொடுத்தவர் டெமிஸ்ஸியானஸ் (Demiscianus) என்னும் ஒரு கிரேக்க மொழிப் புலவர்.

நாளடைவில் எதற்கும் சரியான பெயர் நிலைத்துவிடும். அல்லது நிலைத்துவிட்ட பெயர்தான் சரியான பெயர் என்று பலரும் ஒப்புக்கொள்ள வேண்டிவரும்.

**எஸ். எ. ஜப்பார்.**

**தை**யல் மெஷீன் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?

**தை**யல் மெஷீன் கண்டு பிடிக்கப்படவில்லை, புத்தமைப்பாக இயற்றப்பட்டது. கண்டு பிடித்தல், புத்தமைப்பாக இயற்றப்படுதல் (Discovery and Invention) இரண்டு சொற்களுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்வது நல்லது.

ஏற்கனவே உள்ள ஆனால் பலரும் அறியாதிருந்த ஒன்றைக் காணுவதற்குக் கண்டு பிடித்தல் என்ற சொல் பொருத்தமானது. உதாரணமாக, கொலம்பஸ் (Columbus) அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்; பியரி (Peary) வட துருவத்தைக் கண்டு பிடித்தார்; அமுண்ட்ஸென் (Amundsen) தென் துருவத்தைக் கண்டு பிடித்தார்.

ஆனால் முன்னால் இல்லாத ஒரு பொருளையோ, கருவியையோ, முறையையோ புதிதாக இயற்றினால் அதைப் புத்தமைப்பு என்று சொல்வதே பொருத்தமானது.

ஆகையால் தையல் மெஷீன் புத்தமைப்பாக இயற்றப்பட்டது

என்று சொல்லுவதுதான் பொருத்தமானது:

அதை இயற்றியவர் ஈலியஸ் ஹௌ (Elias Howe) என்பவர். அவர் அமெரிக்காவிலுள்ள மஸ்ஸாச்சுஸெட்ஸ் (Massachusetts) மாகாணத்தில் 1819-இல் பிறந்தவர்.

அவர் இப்படிப்பட்ட ஒரு கருவியை இயற்ற வேண்டும் என்று முயலத் தொடங்கியது 1841-ம் வருஷத்தில். அந்தக் காரியத்தில் வெற்றி பெற்று, தையல் மெஷினுக்குப் பேடென்ட் (Patent) வாங்கியது 1846-ம் வருஷத்தில்.

**ஆர். ராமசாமி, சென்னை-1.**

பொதுக் கூட்டங்களில் மேடையில் உள்ளவர்களைக் காமிராவில் போட்டோ பிடிக்கும்போது பளிச் பளிச்சென்று அணைந்து எரிகிறதே, ஏன்?

பளிச்சென்று எரிந்து அணைவது சுடர் விளக்கு என்று சொல்லத் தகும் பிளாஷ்-லைட் (Flash-light). படம் பிடிக்கும் சமயத்தில், காமிராவின் (Camera) முன்னுள்ள லென்சு அமைப்பைத் திறந்து மூடும் ஷட்டர் (Shutter) அமைப்பை இயக்கும் ஸ்விச்சை அமுக்கும்போது இந்தச் சுடர் விளக்கும் பளிச்சென்று எரிகிறது.

படம் பிடிப்பதற்கு ஒளி அவசியம் என்பதும், ஒளிக் கிரணங்களின் ரசாயனச் செயலால் படம் பிடிக்கும் காமிராவிலுள்ள பிலிம் (Film) அல்லது தகடு (Plate) ரசாயன மாறுபாடு அடைந்து படத்தின் நெகடிவ் (Negative) என்னும் வடிவத்தை இயற்றுகிறது என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். படம் பிடிப்பதற்குப் போதிய வெளிச்சம் இருந்தால் ஒழியப் படம் சீராக விழாது, ஆதலால், படம் பிடிப்பதற்கு வேண்டிய வெளிச்சம் கிடைப்பதற்காக இப்படிப்பட்ட சுடர்விளக்குகளை உபயோகிக்கிறார்கள். அந்தப் பிரகாசமான ஒளி தோன்றும்போது, அதன் துணையால் படம் பிடிக்கப்படுகிறது.

**கே. எஸ். மருதவீரன், காட்டுப்புத்தூர்.**

மின்னல் கண்ணைப் பிடுங்கிவிடும் என்று சொல்லுகிறார்களே: இது உண்மையா? எப்படிப் பிடுங்கும்?

மின்னல் கண்ணைப் பிடுங்கும் என்று சொல்லுவது உண்மையல்ல. ஆனால், இம்மாதிரியான 'பிடுங்கும்', 'பறிக்கும்', 'வெட்டும்' என்ற சொற்கள் எல்லாம் உண்மையைக் கற்பனை முறையில் கூறுபவை. உயர்வு நவிற்சியணி என்னும் வகையைச் சேர்ந்தவை.

அதிக ஒளி—மட்டுக்கு மிஞ்சிய ஒளி—கண்ணில் படுமானால், கண்ணிலுள்ள உணர்ச்சி மிக்க நரம்புகள் முதலியவை கெட்டுப் போகும்; வலிவு இழந்து வேலை செய்யத் திறமையற்றுப் போகும். அதன் பின்பு கண் நேரே தெரியாது; குருடாகப் போனாலும் போகலாம்.

**சி. பாலசுப்பிரமணியன்**
**தஞ்சாவூர்.**

கடிகாரத்திலுள்ள முட்கள் எதனால் செய்யப் படுகின்றன?

சாதாரணமாக இவை எஃகினால் செய்யப்படுகின்றன. அப்பொழுது தான் மென்மையாக இருந்தாலும் போதிய விறைப்பு உள்ளவையாக இருக்கும். துரு முதலியவை ஏறாதபடி, அவைகளுக்கு இனாமல் முதலியவை பூசப்படும்.

சில வேளைகளில் தாமிரத்தாலும், பித்தளையாலும்கூட முட்கள் செய்யப்படுவதுண்டு. இவற்றுக்குப் போதிய விறைப்புக் கொடுப்பதற்காகக் கலவை உலோகங்களையே உபயோகிப்பார்கள்; தூய உலோகத்தைப் பொதுவாக உபயோகிப்பதில்லை. தாமிரம் தனி உலோகம்; பித்தளை என்பது கலவை உலோகம். இவற்றுக்குப் பெரும்பான்மையும் இனாமல் முதலியவை பூசுவதுண்டு. அல்லது நிக்கல் முலாம் பூசுவதும் உண்டு.



# பாலர் கவி அரங்கம்

## காகிதம்

[காகிதம் தன் கதையைச் சொல்வது]

என் பெயர் காகிதம் தெரிந்துகொள்
எந்தன் பயனைப் புரிந்துகொள்
முன்னை நாளில் எனைமாந்தர்
முழுதும் குடிசைத் தொழிலாக்கி
சன்னத் துண்டாய் எனைவெட்டி
சாராய்ப் பிழிந்து குழம்பாக்கி
என்னை வளர்த்தார் மாந்தரெலாம்
எற்றமுடனே நான் வளர்ந்தேன்.

2. காலம் சிலநாட் கடந்த பின்னர்
காண்பார் அற்றுக் கிடந்தஎன்னை
ஞாலத்து மனித ரெலாம்கூடி
நல்லதோர் பொறிதனைத் தோற்வித்து
சால்மரம் செம்மரம் பயின்மரத்தைச்
சன்னமாய் வெட்டித் தூளாக்கிப்
பால்போல் என்னைக் குழம்பாக்கிப்
பக்குவமாய் எனைப் பிரித்தெடுத்தார்.

3. எங்கும் சென்று நான்திரும்பி
எழிலுடைக் காகிதமாய் விழுந்தேன்
தங்கத்தின் ஈடுடைப் பொருளானேன்
தாரணிபுகழ் செய்தித் தாளானேன்
தூங்கும் கலைகளை எழுப்பிவைத்துத்
தொன்மைச் சிறப்பினைக் காட்டிநின்றேன்
சங்கநூல் சரித்திரம் சட்டம்முதல்
சட்டசபைவரை நான் தவழ்ந்தேன்.

4. அண்டை அயலார் நாட்டினது
அன்புடை ஒப்பந்தம் என்மீது
சண்டை தவிர்ப்பேன் சமர்புரிவேன்
சாத்திரங்கள் பல நாணுவேன்
கண்ட இடமெலாம் செல்லுதற்கும்
கல்வி நன்கு மிளிருதற்கும்
உண்டு என்னுடைப் பெருமுயற்சி
உலகத்திரே! நீர் அறிவீர்.

—தி. சோமசுந்தரம், இருகையூர்.


காமர் ஓர் இரவில் கண்டது முதல் மர்ஜானுடனே பூதூரைத் தேடி வந்தது வரையில் அரசனுக்குச் சொல்லி முடிக்கிறன். அதைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து அவனைத் தழுவி......
காமர்! நான் பாக்கியசாலி! கலீபா எனக்குப் பேரரசர்! உடனே உன் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்.....
பூதூர்! உன் சகோதரனால் தான் நீ எனக்குக் கிடைத்தாய்! அவனை உடனே வரவழை!
முன்பே ஆளனுப்பி விட்டேன் அழைத்து வர!
மந்திரிப் பிரதானிகளே! பூதூர் குணமடைந்து விட்டாள். நானே அவள் திருமணத்துக்கு வேண்டிய விசேஷ ஏற்பாடுகள் செய்யுங்கள்.
சித்தம் அரசே!
இந்தச் சந்தோஷச் செய்தியை நாடெங்கும் பறையறிவித்தார்கள். நகரமே சிங்காரிக்கப்பட்டது. பூதூரும் காமரும் திருமண அலங்காரங்களுடன் மணவினையை நடத்தினர்கள்.
அல்லாவின் கிருபையே கிருபை!
நாட்கள் இன்பமாகக் கழிந்தன. ஒரு நாள்..
அன்பே! ஏன் கவலையாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?
என் தந்தை உடல் நலமில்லாமல் இருப்பது போல் கனவு கண்டேன். நான் உடனே ஊர் செல்ல விரும்புகிறேன்.
என்ன? என்னை விட்டுவிட்டா கடல் கடந்து போகப் போகிறீர்கள்?
நீயும் அப்படியானல் புறப்படு!


தந்தையே! என் கணவர் சொந்த நாடு செல்ல விரும்புகிறார். எனக்கும் சேர்த்து அனுமதி கொடுங்கள்!
குழந்தாய்! இது நியாயமான காரியந்தான். ஆனால் உங்களை விட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன்? ஆண்டுக்கு ஒருமுறை வருவதானால் நீங்கள் போகலாம்!
அப்படியே செய்கிறோம்.
ஏழு இரவும் ஏழு பகலும் நிற்காமல் கப்பல்கள் நீலக்கடலைக் கடந்து சென்றன. கடைசியில்.........
பூதா! அதோ நிலப்பரப்பு தெரிகிறது. நாம் இறங்க வேண்டும்..
அங்கிருந்து தரை மார்க்கமாக போக வேண்டும். இல்லையா?
இளவரசே! படகுகள் தயாராக இருக்கின்றன. நங்கூரம் பாய்ச்சி விட்டோம்!
முன்னால் நமது பரிவாரம் சென்று வேண்டிய கூடாரம் அமைக்கட்டும்!
இதோ உங்கள் நண்பர் மீர்ஜாமன் அளித்த பரிசு! பாரஸீக ரோஜா!
அவனைப் பார்க்காமல் வந்தது என்ன மதியீனம்? இதை ஏன் முன்பே நீ தரவில்லை?
அவர் கரையை அடையும் போது கொடுத்தால் போதும் என்று கட்டளையிட்டார்.
ஏழு நாட்களாகியும் இது வாடவேயில்லையே! வாடாத ரோஜாவோ!
அன்பே! இதில் ஏதோ விசேஷம் இருக்க வேண்டும்! இது என்னிடமே இருக்கட்டும்!
அப்படியே இருக்கட்டும்!

(தொடரும்)



# லீடர் மணி

**'ஆர்வி'**

குப்புசாமி கையெடுத்துக் கும்பிட்டு, "வாங்க, வாங்க! சும்மாப் படுத்துக்கிட்டிருந்தேன். அப்படியே கண்ணை ஒரு புரட்டுப் புரட்டிப் பிடுச்சி" என்று வந்தவரை வரவேற்று உள்ளே அழைத்து வந்தான்.

"எனக்குத் தெரியுமே, நீ இந்த நேரத்திலே கும்பகர்ணனாக ஆகியிருப்பேன்னு. அதான் கேட்டேன் இந்தப் பையனை! அப்படி யாரும் கும்பகர்ணன்னு இல்லைன்னு சொல்லிட்டான்" என்றார் அவர்.

அவருடைய ஹாஸ்யத்தை மற்றவர்களைவிட அவரே அதிகமாக ரஸித்துக் கொண்டார். பிறகு சட்டென்று நிறுத்திக்கொண்டு, "சரி; சந்துரு சொன்னான். யாரோ உன்னண்டே ஒரு பையன் வந்து இருக்கானாமே. இந்தப் பையன் தானோ?" என்றார்.

"ஆமாமாம்; இந்தப் பையன் தான். இந்தப் பையனைப் பத்தித் தான் சந்துரு சொல்லியிருக்கும்" என்றான் குப்புசாமி.

"பையன் சின்னப் பையனாத் தான் இருக்கான்; உம். ஆனா சூடிகையா இருப்பானோல்லியோ? இருப்பான்னுதான் சந்துருவும் சொன்னான். வந்து நம்பளுக்கு ஒரு அட்டெண்டர் பையன் மாதிரி ஒருத்தன் வேண்டியிருக்கு. முந்தி இருந்தான் பாரு, கொடவாசல் பையன், அவன் முப்பது ரூபாயைச் சுருட்டிக்கொண்டு ஓடினவன்தான். பதினைஞ்சு இருபது நாள் ஆச்சு; போன இடம் தெரியல்லே. 'ஊருக்குப் போனான்' என்கிறார்கள் சில பேர்; 'இல்லே, நாலுநாள் முந்திகூட மாம்பலம் பஸ் ஸ்டாண்டிலே பார்த்தேன்' என்கிறார்கள் சில பேர். இப்படி இருக்கு. அவன் எப்படியோ தொலைஞ்சாலும் பையன் இல்லாமே நமக்கு முடியுமோ? அதுக்குத்தான் உடனே புறப்பட்டு வந்தேன். சந்துருவோடெ அம்மா கூட நம்ப அம்மாகிட்டே இந்தப் பையன் ரொம்ப நல்ல பையன்னு சொன்னாளாம். அதனாலே அனுப்பறதா இருந்தா இப்பவே வரச் சொல்; வண்டியிலேதான் வந்திருக்கேன்" என்றார்.

குப்புசாமியோ பரபரப்படைந்து, "என்ன தம்பி மணி, ஐயா கூடவே போறியா, இல்லே, சாயங்காலமா நான் கொண்டுபோய் விடட்டுமா!" என்று கேட்டான்.

மணிக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. குப்புசாமியை விட்டுப் பிரிவது மிகவும் கஷ்டமாக இருக்கும் போலிருந்தது. ஏதோ ஓர் இடத்தில் இருந்துகொண்டு எப்படியோ முன்னுக்கு வரச் சந்தர்ப்பம் இருக்குமே என்று போகவேண்டும் போலவும் இருந்தது. இந்த மனிதர் எப்படிப்பட்டவரோ, என்னவோ? முந்தி இருந்தவனைப் போல என்னையும் திருட்டுப் பயல் என்று எண்ணிக்கொண்டு நடத்துவாரோ என்னவோ? எப்படியிருந்தாலும் குப்புசாமி சொல்கிறபடி செய்வதே சரி என்று முடிவு செய்து கொண்டு, "உங்க இஷ்டப்படி செய்யுங்க. என்னைக் கேட்பா

னேன்?'' என்று சொல்லிவிட்டான்.

''சரிங்க; நீங்க அப்ப முன்ஞலே போங்க. நான் பையனுக்கு எப்படிப்பட்ட எடம், மனுஷாள் யாரு, எப்படிப்பட்டவங்க என்பதையெல்லாம் சொல்லி, ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்லிக்கொடுத்து, சாயங்காலம் கூட்டி வரேன்'' என்ருன் குப்புசாமி.

மணிக்கும் அதுதான் தேவலே போலிருந்தது.

* * *

ராவ் பகதூர் அருணஜடையின் பங்களா நுங்கம்பாக்கத்தில் இருந்தது. அதாவது குப்புசாமியின் வீட்டிலிருந்து முக்கால் மைல் தூரம் இருக்கும். பங்களா ஒரு சோலேக்கு நடுவே இருப்பது போலிருந்தது. வக்கீல் தொழில் செய்து அருணஜடைகியாதியும் கொழுத்த பணமும் பெற்றிருந்தார். அவருடைய நிலேயில் இன்ஞெருவர் இருந்தால் அவர்களுடைய கால் தரையிலேயே பாவாது. ஆஞல் அருணஜடை மிகவும் எளிய பழக்க வழக்கங்கள் உள்ளவர். அவருக்கு ஏற்ற மாதிரியே அவருடைய மனேவியும். கொஞ்சப்கூடக் கர்வமோ படாடோபமோ கிடையாது. எவ்வளவு நல்ல தன்மைகள் இருந்தாலும் மனிதர்கள் என்ருல் குறை இல்லாமல் இருக்குமா? அவர்களிடத்திலும் ஒரு முக்கியமான குறை இருந்தது. படுசிக்கனமாக இருப்பார்கள். இத்தனேக்கும் அவர்களுக்கு ஓரே பெண்தான். அந்தப் பெண்ணுக்கு நல்ல இடத்தில் கல்யாணமும் ஆகியிருந்தது. அவ்வளவு பெரிய பங்களாவில் அருணஜடையும் அவர் மனேவியும் மட்டுமே வசித்தார்கள். இத்தனே பணமும் சௌகரியமும் இருந்தும் அவர்கள் எவ்வளவோ வசதியுடன் இருக்கலாம். யாருக்குத்தான் பணத்தைச் சேர்த்து வைக்கிருர்களோ, அவர்களுடைய கஞ்சத்தனம் மிகவும் பிரசித்தமானது. தானம், தர்மம் என்ற பேச்செல்லாம் பேசிக்கொண்டு அந்தப் பங்களாவுக்குள்ளேயே நுழைய முடியாது. மீறி நுழைந்தால் ஒன்று, அரைக்கு மேல் அவர்களிடம் வாங்க முடியாது. ''தர்மம் என்பது நாஞகச் செய்ய வேண்டியது; நீங்கள் கேட்டுக் கொடுப்பதல்ல!'' என்று சொல்லியனுப்பி விடுவார். அந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்ற விஷயங்களில் அவர்கள் இருவருமே தங்கக் கம்பிகள்தான்.

குப்புசாமியும் மணியும் வந்தபோது அருணஜடை வாசல்



ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார். யாரோ சினிமாப் படமுதலாளி ஒருவர் காரில் வந்து அவருக்கு

எதிரே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். மணியைக் கண்டதும் அருணஜடை வெகுநாள் பழக்கப்பட்டவரைப்போல, ''அப்பா குழந்தை! உள்ளே போய், மூணு கிளாஸ் சர்பத் கொண்டு வரச் சொல்லு!'' என்றார்.

''எதுக்கு மூணு? எனக்குமா? அச்சச்ச! வேண்டாங்க!'' என்றான் குப்புசாமி.

மணிக்கு இது மிகவும் பிடித்தமாக இருந்தது. வந்ததும் வராததுமாக அவனுக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது. விடுவிடென்று பங்களாவுக்குள் போனான். ஒவ்வோர் அறையும் விசாலமாயும் பார்ப்பதற்குப் படாடோபமாகவும் இருந்தது. ஸோபா ஸெட்டுகளும், நாற்காலிகளும் பெரிய பெரிய வர்ணச் சித்திரங்களும், ஒரு மூலையில் இருந்த பெரிய ரேடியோ செட்டும், டெலிபோனும் அந்த முன் ஹாலை அலங்கரித்தன. விலையுயர்ந்த விரிப்புகள் உட்கார ஆளில்லையே என்று ஏங்குவது போலிருந்தன. எதிரே கருங்காலிப் பீடத்திலிருந்த குஜராத்து தேசத்து ராதாகிருஷ்ணன் பொம்மையைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருந்தது. ஆனால் மணிக்கு இப்பொழுது அதற்கெல்லாம் அவகாசம் ஏது? வெறித்துக் கிடந்த அறைகளைத் தாண்டிச் சென்றான். வீட்டினுள்ளே மனிதர்கள் யாரும் இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால் எல்லாம் சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருந்தன. மணிக்கு முதலில் தயக்கமாகத்தான் இருந்தது. எங்கே பார்த்தாலும் விலையுயர்ந்த பொருள்களாக இருக்கின்றனவே, இதற்குக் கேள்வி முறை, கட்டுக் காவல் ஒன்றுமே இல்லையா என்றுகூட வியப்பாகவும் பயமாகவும் இருந்தது. மரப்படிகளால் ஆன மாடிப் படிக்கு, திருவாங்கூர் கொச்சிராஜ்யத்து வர்ணக் கயிற்றுப் பாய் அடித்திருந்தது. அதன் வழியே ஸ்தூலமான சரீரமுள்ள ஓர் அம்மாள் காதிலும் மூக்கிலும் பளிச்சென்று வைரம் ஜொலிக்க இறங்கி வந்தாள். அந்த அம்மாள் வேறு ஒன்றும் பிரமாதமாக நகைகளாகப் போட்டுப் பூட்டிக்கொண்டிருக்கவில்லை. கழுத்திலே இரண்டு வடச் சங்கிலி; கைகளிலே இரண்டு இரண்டு வளையல்கள்; அவ்வளவுதான்.



''யாருடா குழந்தே, நீ?'' என்றாள் அந்த அம்மாள், மணியைப் பார்த்ததும்.

''என் பேர் மணி. நான் இந்த வீட்டுக்கு இன்னியிலேருந்து அட்டெண்டராக இருக்க வந்திருக்கேன். ஸி. ஐ. டி. குப்புசாமிக்குத் தெரிஞ்சவன். இந்த வீட்டு ஸார்தான் மத்தியான்னம் என்னை வந்து பார்த்து, இப்போ வரச் சொன்னார். அவர் வாசலில் பேசிக் கொண்டிருக்கார். மூணு கிளாஸ்

சர்பத் வேணுமாம்: இதற்கு யாரைக் கேட்கவேணும்? சொன்னால் நானே கொண்டுபோய்க் கொடுக்கிறேன்'' என்று பளிச்சுப் பளிச்சென்று கணீர் என்ற குரலில் கூறினன்.

அந்த அம்மாள் மணியின் குழந்தை முகத்தையே வாஞ்சையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். மணி பேசப் பேச அந்த அம்மாளுடைய முகத்தில் புன்னகை மலர்ந்து வந்தது. அவன் வார்த்தைகளைக் கணீர் என்று சொன்னலும் உள்ளூற ஒரு பயம் இருக்கிறது என்பது அவளுக்குத் தெரிந்தது. அவள் உடனே முகபாவத்தை மாற்றிக்கொண்டு, "உன் பேரு என்ன சொன்னே? மணியா? மணிப்பயலாத்தான் இருப்பே போலிருக்கு! சரி; மேலே போய் மூன்ருவது ரூமிலே பிரிஜிடேர் இருக்கு. அங்கிருந்து கிரைப் ஜூஸ் எடுத்துக்கொண்டு போய்க் கொடு. சர்பத் இருக்காது'' என்ருள்.

மணி பிரிஜிடேரைத் திறக்கவே தெரியாமல் விழித்ததும், கிரைப் ஜூஸ் தெரியாமல் விழித்ததும், கடைசியில் போன ஆளைக் காண வில்லையே என்று அந்த அம்மாள் உதவிக்குவர நேர்ந்ததும்,அதற்குள் அருணஜடை பொறுக்காமல் போனதும் குப்புசாமி, 'பையன் புதுசுதானே?' என்று சமாதானப் படுத்த நேர்ந்ததும் ஒரு தனிக் கதையே ஆகும். கேட்டால் சிரித்து வயிறே வெடித்துப் போகும். மணிக்கே அந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டால் ஒரு வாரம் கழித்தும் அவமானமாகத்தான் இருந்தது.

ஒரு வாரத்துக்குள் சந்துரு இரண்டு தடவை வந்து அவன் எப்படியிருக்கிருன் என்று பார்த்து விட்டுப் போனன். அவனுடைய அம்மா வந்து பார்த்துவிட்டு, "உமாதேவி! பையனுக்கு அம்மா இல்லே. அப்பாவும் இல்லே. நீயும் உங்க ஹஸ்பெண்டும்தான் இப்போ அவனுக்கு எல்லாம், உன் குழந்தை போலப் பாத்துக்கோ'' என்று சொல்லிவிட்டுப் போனுள்.

டிரைவர் கண்ணப்பனைக் கண்டதும் அப்படியே ஓடிப்போய் அவனைக் கட்டிக்கொண்டு விட்டான் மணி. இரண்டு பேருக்குமே கண்ணால் ஜலம் பெருகத் தொடங்கிவிட்டது. காரணம் என்னவென்று இரண்டு பேருக்குமே தெரியவில்லை. "கண்ணப்பா, கண்ணப்பா!'' என்ருன் மணி. "மணி, மணி!'' என்று கூறினன் கண்ணப்பன்.

விவரம் புரியாத ஒரு பரவசம் இரண்டு பேருக்குமே உண்டாயிற்று. காரணம் இருந்தா மனிதனுக்குப் பாசமும் ஆசையும் உண்டாகின்றன?

ஒரு வாரம் என்பது பத்துநாள் ஆயிற்று; பதினைந்து நாளும் ஆயிற்று. அவனுடைய வேலை அத்தனை கடினமான வேலையும் அன்று. மிகமிக எளிய வேலைதான். கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கவேண்டும்; அவ்வளவுதான். இது ஒரு சிரமமா? அவன் எங்கேயிருந்தாலும் யாரும் அவனுக்கு இப்படி ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள். "அதை எடு இதை எடு அங்கே போ; இங்கே போ'' என்று சிறு பையனை வேலை வாங்காத பெரியவர்கள் எங்கேதான் உண்டு? சொந்த வீட்டிலிருந்தாலும் செய்ய வேண்டிய வேலைகள் தான். 'இதற்கா நமக்குச் சாப்பாடும் போட்டு, சம்பளமும் கொடுக்கிருர்கள்?' என்றுதான் முதல் தடவையாகச் சம்பளம் என்று ஆறு ரூபாயைக் கையில் வாங்கிக் கொண்டபோது மணிக்குத் தோன்றிற்று. அது வெறும் ஆறுரூபாயாகப் படவில்லை. அறுபது, அறுநூறு ரூபாயாகப் பட்டது, சேர்ந்தாற்போல் ஆறு அணு பார்க்காதவன் ஆறு ரூபாயை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிருன்?

சினிமா பார்க்கலாமா? பார்க்கலாம். இரண்டு நாள் லீவு வாங்கிக் கொண்டு ஊரைச் சுற்றிப் பார்க்கலாமா? அதுவும் செய்யலாம்.

(தொடரும்)

# எங்கள் பகுதி

211798

## *மறக்க முடியுமா?

15-6-'55 இதழ் கண்ணனைச் சந்தித்தேன். முற்காலத்தில் மனிதன் குரங்காக இருந்தான் என்று சொல்கிறார்களே அது உண்மைதானா என்பதை அட்டைப் படத்திலே சிறுவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் போலும். எல்லா ஊர்களிலும் கண்ணன் நிருபர்களை ஏற்படுத்துவது ஒரு சீரிய முயற்சி. மிக்க மகிழ்ச்சி. பிறருடைய உதவியை எதிர்பார்த்துப் பிழைப்பது கூடாது என்ற கருத்தைப் பையனும் பச்சைக் கிளியும் என்ற பாடல் அழகாக எடுத்துக் கூறுகிறது.

மைசூரைப் படிக்கும்போது எப்போது மைசூருக்குப் போகப் போகிறோமோ, எப்போது அதன் அழகைப் பார்க்கப் போகிறோமோ என்ற ஏக்கமே மனத்தில் ஏற்படுகிறது. கட்டுரையைப் படிக்கும் போது எல்லாமே கண்களுக்கு முன்னால் காட்சி யளிக்கின்றன.

''வானத்திற்கு அப்பால் என்ன இருக்கிறது?'' என்ற கேள்வி, கேள்விகளுக்கெல்லாம் சிகரமாக விளங்குகிறது.

முகத்திலே கரியைப் பூசிக் கொண்ட மணியை நினைக்கும் போது சிரிப்பு வராமல் எப்படித் தான் இருக்க முடியும்?

நான்கூட, 'குண்டுச் சீமா மாறி விட்டான். இரவு பகலாகப் பாடத்தைத்தான் படிக்கிறான்' என்று நினைத்தேன். கடைசியில் பார்க்கப் போனால்......

'கோடாலிக் காம்பு' ஏ - ஒன். ஒரு கதைக்குள் மூன்று கதைகளைக் கொண்ட ஒரு சிறந்த நீதிக் கதை.

'அதிசயத் திருடன்' பரவாயில்லை.

எல்லா அம்சங்களிலுமே சிறந்து விளங்கும் கண்ணனை நாங்கள் மறக்க முடியுமா?

—V. சந்திரசேகரன்,
சஞ்சீவிராயன்பேட்டை.

---

* ரூ. 3 பரிசுபெற்ற கடிதம்

## கண்டேன்! களித்தேன்! கொண்டேன்!

அருணனின் வரவு கண்டு அல்லி அலர்வதுபோல் தங்களது (15-6-'55) இதழ் கண்ணனைக் கண்டு என் உள்ளம் அலர்ந்தது.

அட்டைப் படமெனத் திகழும் மிருகக் காட்சிசாலை, கற்பனைச் சிகரமாய், கவினுறும் ஓவியமாய், காண்போரின் கருத்தை எளிதில் தொடும் கலைத்திறனாய் அமைந்து, சிறந்து காணப்படுகிறது.

தெளிவுறும் செய்திகள், தேன் கூட்டிலிருந்து சொட்டும் தேன் துளிகள்! சுட்டிக் காட்டும் அதிர்ஷ்ட எண்கள் கட்டித் தழுவும் கவின் குழவிகள்!

அள்ளிப் பருகினோம் அழ. வள்ளியப்பாவின் அமிழ்தினு மினிய அருங் கவிதையை. வளர் பிறையாம், இளம் கவிஞர்களின் எண்ணக் குவியல்களை அள்ளித் தரும் 'கவி அரங்கம்' பன்முறை படிக்கப் பாதை வகுக்கின்றது.

விறு விறுப்பும் சுறு சுறுப்பும் சேர்ந்த கூட்டுப் பொருளாய் வரும் இரு தொடர்கதைகளும், சிந்தனைக்கு விருந்திடும் விஞ்ஞானப் பகுதியும் சிறந்து விளங்குகின்றன.

''பாரஸீக ரோஜா'' படிக்குந் தோறும் பண்ணிசைக்கின்றது.

''டியூஷன் வாத்தியார்'' பரவாயில்லை. ''கோடாலிக் காம்பு'' உதட்டிலே இனிப்பும் உள்ளத்திலே நஞ்சும் கொண்டு நயவஞ்சக எண்ணத்துடன் நடமாடும் போலி நண்பர்களைச் சுட்டிக் காட்டுகின்றது.

''அதிசயத் திருடன்'' பெயருக்கேற்றவாறு அதிசயமாகத்தான் காணப்படுகிறான்.

''எங்கள் பகுதி'' எப்போதும் மின்னுகிறது.

கனவிலும் மறவாத கண்ணனை, மணி வண்ணனை, மாசற்ற மைந்தனை, மனங்கவர் மாண்பு நிறைந்தவனை, உற்ற நண்பனாக ஏற்று மகிழ்வடைகிறோம்.

—டி. கே. எம். காதர்,
திட்டச்சேரி.

# கண்ணன் நிருபர்கள்

**தெ. ஆ.**

37. மு. ராஜ முகம்மது, பண்ணுருட்டி.
38. தி. கோவர்த்தனன், புவனகிரி.
39. பி. ராகவேந்திரன், கள்ளக்குறிச்சி.

**தஞ்சை**

40. கி. ராமமூர்த்தி, திருவையாறு.
41. எஸ். பாலகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.
42. ஜி. ஜயராமன், நாகூர்.
43. கி. குருமூர்த்தி, திருத்தருப்பூண்டி.

**திருச்சி**

44. சி. சு. தேவராஜன், லால்குடி.

**மதுரை**

45. ஆர். முத்து சுப்பிரமணியன், மதுரை.
46. பா. வல்லபராஜன், திருமங்கலம்.

**ராமநாதபுரம்**

47. கே. இன்பசாகரன், சிவகாசி.
48. என். சிதம்பரம், ஆத்தங்குடி.
49. ஆர். வரதராஜன், திருத்தங்கல்.

**திருநெல்வேலி**

50. கே. பரமசிவம், வள்ளியூர்.
51. ஆர். ஹரிராமவாசகம், திப்பணம்பட்டி.
52. தெ. குமாரசாமி, பணகுடி.

**கோவை**

53. எம். கே. காளியண்ணன், அவிநாசி.
54. அழகனுர், சுந்தராபுரம்.
55. ரத்தினசபாபதி, காரத்தொழுவு.
56. கே. ராக்கியப்பன், திருப்பூர்.

**நீலகிரி**

57. ஜி. சுகுமாரன், உதகமண்டலம்.

**சேலம்**

58. எஸ். ராமசந்திரன், ஓமலூர்.
59. எஸ். மோகனதாஸ், நாமக்கல்.
60. ஓ. எஸ். ஆறுமுகம், பாண்டமங்கலம்.

**வ. ஆ.**

61. டி. எஸ். சுந்தரம், திருப்பத்தூர்.
62. ஆர். சர்தார்ஜான் சித்திகை, வாணியம்பாடி.
63. எம். மேகநாதன், காட்பாடி.

**வெளி ராஜ்யம்**

64. ஜீ. ஏசுதாஸ், உரீகம். (K.G.F.)
65. ஆர். திருமூர்த்தி, பத்ராவதி
66. எஸ். ரங்கநாதன், திருவனந்தபுரம்.
67. எஸ். ஸ்ரீராமன், எர்ணுகுளம்.
68. ஐவர்ராஜன், சோளிங்கபுரம்.
69. எஸ். ராஜகோபாலன், சோமவார்பேட்டை, பூனு.
70. அ. ர. ரமணிநாதன், புதுடில்லி.

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன்

## அதிருஷ்ட எண்கள் விளக்கம்

இதோ பக்கத்தில் ஒரு தொடர் எண் (Serial number) அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். இந்த இதழுக்குரிய அதிருஷ்ட எண்கள் 15-8-55-ம் தேதி இதழில் பொருளடக்கத்திற்குப் பக்கத்தில் வெளியாகும். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

**பரிசு விவரம்**

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 15/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 10/- |
| மூன்றாம் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா) | ரூ. 5/-வீதம் |
| நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா) | ரூ. 2/-வீதம் |
| மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு | ரூ. 50/- |

**உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்**

**கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்**

# கண்ணன் கிளைக் கழகம்

திருப்பாதிரிப் புலியூர்
- உபதலைவர்: நா. மாரிமுத்து.
- செயலாளர்: ரா. பாலசுந்தரம்
- பொருளாளர்: எஸ். தாமோதரன்
- உதவிப் பொருளாளர்: து. துரைராஜ்

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. 'முல்லை' என்ற பெயரில் வாரம் ஒரு முறையும் 'மல்லிகை' என்ற பெயரில் மாதம் இருமுறையும் 'சிற்றரசு' என்ற மாதாந்தரப் பத்திரிகையும் (கையெழுத்துப் பத்திரிகைகள்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டனூர்-ராமநாதபுரம் ஜில்லா
- உபதலைவர்: என். சிதம்பரம்
- காரியதரிசி: ஆர். எம். ரங்கநாதன்
- பொக்கிஷதார்: ஆர். எம். ராமநாதன்

செயற்குழு ஒன்று ஏற்படவிருக்கிறது. வாசகசாலை ஒன்றும் ஏற்படவிருக்கிறது.

**திருவையாறு:** இவ்வூர் கிளைக்கழகத்தின் கையெழுத்துப் பத்திரிகையின் மூன்றாவது ஆண்டுவிழா 15-5-55-இல் ஸ்ரீ கே. எஸ். சம்பந்தம் (Deputy Inspector of Schools) அவர்கள் தலைமையில் ஸ்ரீநிவாஸராவ் உயர் நிலைப்பள்ளியில் நடந்தது. தலைமைத் தமிழ் ஆசிரியர் உயர் திரு த. சா. ராமராவ், ம. அண்ணாமலை மற்றும் பலர் பேசினார்கள். குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டு, கூட்டம் இனிது முடிந்தது.

(Regd. as a News paper in Ceylon.) Reg. No. M. 5542


# விற்பனையாகின்றன!

கருத்தைக் கவரும்

# இரு கண்ணன் வெளியீடுகள்

★ **அசட்டுப் பிச்சு - ஆசிரியர்: ஆர்வி** விலை ரூ. 1/-

ஏ. பி. என்றால் ஐயாசாமி அவர்களுடைய மகன் பிச்சுமணி என்பவனைத்தான் குறிக்கும். ஆனால் ஏ - என்றால் அசடு. பி - என்றால் பிச்சு என்று ஆகி, மற்ற ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் அவனை அசட்டுப் பிச்சுவாக்கிவிட்டார்கள். அவனுடைய தோற்றம், உடை, பேச்சு இவற்றிற்கும் அவனுடைய பெயருக்கும் அடடா, எத்தனை பொருத்தம்! ஆனால்,—அவனுடைய அதிருஷ்டம் இருக்கிறதே, அதை மட்டும் யாராலும் மாற்றவே முடியவில்லை. பிரிஞ்ஜால், ஸ்ரீகாந்த், புலிக்குட்டி குடுமி வைத்தி இவர்களுக்கு எல்லாம் அசட்டுப் பிச்சு ஒரு பெரிய புதிராகவே ஆகிவிட்டான். பெரிய பெரிய திருட்டுக் கேஸ்களையெல்லாம் அசட்டுப் பிச்சு அநாயாசமாகக் கண்டுபிடித்துவிடுகிறான். காணாமல் போன பெண், அகப்படாத பக்காத் திருடன் இவர்களையெல்லாம் பிடித்துக் கொடுத்த அசட்டுப் பிச்சு இன்ஸ்பெக்டர் குருப்பின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி, அதன் மூலம் நம்முடைய அபிமானத்துக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகிவிடுகிறான். அருமையான சம்பாஷணைகள்; அடுக்கடுக்கான சம்பவங்கள்; சுவையான கதைப் போக்கு; அழகான படங்கள் - எல்லாம் நிறைந்த இனிய புத்தகம் அசட்டுப் பிச்சு. 128 பக்கள். நல்ல காகிதம்.

★ **ஜம்பு - ஆசிரியர்: ஆர்வி** விலை அணா 8.

கண்ணன் வெளியீடுகளிலே பலவகையான புத்தகங்கள் உண்டு. பழங்காலத்துக் கட்டுக் கதைகள் உண்டு; அறிவும் நீதியும் புகட்டும் தந்திரக் கதைகள் உண்டு; சரித்திரக் கதைகள் உண்டு; விஞ்ஞான விந்தைகளையும் பெரியோர்களின் பாலியப் பருவத்து நிகழ்ச்சிகளையும் கதைபோலச் சொல்லும் கட்டுரைகள் உண்டு; சித்திரங்கள் உண்டு, சித்திரக் கதைகளும் உண்டு. அவற்றிலே இந்த ஜம்பு இந்தக் காலத்துக் கதை. இதிலே கப்பல் வருகிறது; சர்க்கஸ் குரங்கு வருகிறது; சிங்கமும் புலிகளும் வருகின்றன; அவற்றை ஆட்டி வைப்பவனும் வருகிறான். இன்ஸ்பெக்டர் வருகிறார். மோட்டாரும் மோட்டார்ப் படகும் வருகின்றன. ரகசியக் கடிதம்கூட ஒன்று ஜம்புவுடம் வந்து அகப்பட்டுக்கொள்கிறது. அதிலிருந்துதான் திகைப்பையும் வியப்பையும் தருகிற இந்த அருமையான கதை தொடங்குகிறது நடுநடுவே அழகான படங்கள் இருக்கின்றன.

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு
தபால் செலவு தனி.

விவரங்களுக்கு:

**கலைமகள் காரியாலயம் :: மயிலாப்பூர், சென்னை-4**